# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 327 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 02, செவ்வாய்க்கிழமை 18.10.2016


## 4 நாள்களில் 250 கி. கஞ்சா குடாவில் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 18
தொண்டமானாறுப் பிரதேசத்திலிருந்து நேற்றுமுன்தினமும் 15 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு தினங்களுக் >> 23ஆம் பக்கம்

### கூலிப்படைக்கு 25 மில்லியன் கொடுத்து

## சம்பந்தனை கொல்லச் சதி

### வடக்கு முதலமைச்சர் பொலிஸ்மா அதிபரிடம் முறையீடு

கொழும்பு, ஒக். 18
எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனைக் கூலிப் படையை வைத்துக் கொலை செய்வதற்குச் சதி செய்யப்படுவதாக பொலிஸ்மா அதிபரதும் ஜனாதிபதி >> 06ஆம் பக்கம்

### ஜனாதிபதியின் சாடலை அடுத்து

# ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தலைவர் பதவி துறப்பு

### விலகலை ஏற்றுக்கொண்டார் ஜனாதிபதி மைத்திரி
### தொப்பி அளவென்றால் போட்டும் என்கிறது சு.க.

கொழும்பு, ஒக்ரோபர் 18
இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் டில்ருக்சி டயஸ் விக்கிரமசிங்க தனது பதவியில் இருந்து விலகினார். தனது பதவி விலகல் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்று அறிவித்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சுதந்திரக் கட்சி, தொப்பி அளவென்றால் அதை அவர் போட்டுக் கொள்ளட்டும் என்றும் அதற்கு ஜனாதிபதி பொறுப்பல்ல என்றும் தெரிவித்துள்ளது.

கடந்த 12ஆம் திகதி கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நடந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, குற்றப் புலனாய்வுப் பிரிவும் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவும் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவும் அரசியல் நோக்கங்களுடன் விசாரணைகளை >> 06ஆம் பக்கம்

## பொலிஸ்மா அதிபரும் பதவி விலகவேண்டும்

### மகிந்த அணி வலியுறுத்து

கொழும்பு, ஒக். 18
இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் டில்ருக்சி டயஸ் விக்கிரமசிங்கவின் பதவி விலகலை மகிந்த அணி வரவேற்றுள்ளது.
இதேபோல், பொலிஸ்மா அதிபரும் விரைவில் பதவி விலகவேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.
இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு பணிப்பாளரின் பதவி >> 04ஆம் பக்கம்



## சீனத் திட்டங்களை துரிதப்படுத்துவதில் மைத்திரி விருப்பம்

கொழும்பு, ஒக். 18
பெரிய திட்டங்கள் உள்ளிட்ட சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட பொருளாதார மற்றும் வர்த்தக உடன்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கான தனது விருப்பத்தை சீன அதிபரிடம் வெளியிட்டார் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
ஜனாதிபதி மைத்திரிபால சீன ஜனாதிபதி சி ஜின் பிங்கை நேற்றுமுன்தினம் >> 23ஆம் பக்கம்

### வடக்கு மாகாண சபையின்

## பிரதி அவைத் தலைவர் தெரிவில் கடும் இழுபறி

### ஈ.பி.ஆர்.எல்.எவ். - புளொட் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 18
வடக்கு மாகாண சபையின் அடுத்த பிரதி அவைத் தலைவர் யார் என்பதைத் தெரிவு செய்வதில் கட்சிகள் இடையே உள்முரண்பாடு தோன்றியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்தாலும் தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பைப் புறம்பாக உருவாக்கிக்கொண்டுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் கட்சிகள் அந்தப் பதவிக்குப் போட்டிபோடுவதால் இந்த >> 23ஆம் பக்கம்

## கொழும்பு கல்வி அமைச்சுக்குள் நுழைந்த கிழக்கு முதலமைச்சர் மேசையில் அமர்ந்து போராட்டம்



கொழும்பு, ஒக்.18
கொழும்பு அரசின் கல்வி அமைச்சுக்குள் சென்ற கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட், அங்கு கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள் நியமனம் தொடர்பில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தார். தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை >> 24ஆம் பக்கம்

## வடமாகாணம் ஆறாமிடம் தேசியமட்ட தடகளத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 18
தேசியமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் வடக்கு மாகாணம் நடப்பு வருடமும் ஆறாமிடத்தில் தரப்படுத்தப்பட்டது.
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடர் கண்டி போகம்பறை விளையாட்டு மைதானத்தில் >> 06ஆம் பக்கம்

## ஒன்றரை மணிநேர மின்வெட்டு

### 21ஆம் திகதி வரை

கொழும்பு, ஒக். 18
நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக நேற்றுமுதல் ஒன்றரை மணித்தியால மின்வெட்டு நடைமுறைக்கு வந்துள்ளது. கொழும்பு நகரம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இந்தத் தடை நடைமுறைப்படுத்தப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்தது.
நாடு முழுவதும் நான்கு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இந்த மின் தடை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. காலை 8 மணியிலிருந்து பிற்பகல் ஆறு மணி வரை >> 24ஆம் பக்கம்

## குருகுலராஜா பதில் முதல்வர்



யாழ்ப்பாணம், ஒக். 18
வடக்கு மாகாண பதில் முதலமைச்சராக த.குருகுலராஜா நேற்றுப் பதவியேற்றார். வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் முன்னிலையில் அவர் பதவிக்கான சத்தியத்தை ஏற்றார். வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் >> 23ஆம் பக்கம்

## முல்லை மீனவர்கள் மீது நேற்றுக் கடலில் தாக்குதல்

### பொலிஸார் முன்பாகவே புல்மோட்டை மீனவர்கள் அடாவடி

முல்லைத்தீவு, ஒக். 18
அனுமதிக்கப்படாத வகையில் கடற்றொழிலில் ஈடுபட்டவர்களது தொழில் உபகரணங்களைக் கைப்பற்றுவதற்குப் பொலிஸார் மற்றும் கடற்றொழில் திணைக்களத்தினருடன் சென்ற முல்லைத்தீவு மீனவர்களை, திருகோணமலை >> 23ஆம் பக்கம்



கைப்பற்றப்பட்ட படகு

### இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, விசாரணைப் பிரிவுகளில் அரசியல்:

## மைத்திரி சொன்னது சரியே! நியாயப்படுத்துகிறது சு.கட்சி

கொழும்பு, ஒக். 18
இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, நிதி மோசடிக் குற்ற விசாரணைப் பிரிவு, குற்ற விசாரணைப் பிரிவு போன்றவற்றில் அரசியல் தலையீடுகள் இருக்கின்றன என்ற சாரப்பட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் தெரிவித்த கருத்துச் சரியானதே என்று நியாயப்படுத்தியுள்ளது சிறிலங்கா சுதந்திரக் கட்சி.
கொழும்பில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை நடை >> 04ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளித் தலையீடின்றி தீர்வு காணவேண்டும்

## மங்களவின் ஆசை இது



கொழும்பு, ஒக். 18
நிறைவேற்று அதிகாரமோ, வெளித் தலையீடுகளோ இன்றி நாட்டின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு முன்னோக்கி நகர வேண்டும் என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
மாத்தறையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.
"இனம், மதம், மொழி, சாதி என்ற எந்தவித பிளவுகளும் இன்றி அனைவரும் இலங்கையர்கள் என்ற ஒரே எண்ணத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தற்போதைய தேசிய அரசு எடுத்துள்ளது. இதன் ஊடாக நாட்டை முன்னோக்கிக் கொண்டுசென்று, பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைந்த நாடாக இலங்கையைக் கட்டியெழுப்புவதே எமது ஒரே நோக்கம்" என்றும் அவர் தெரிவித்தார்.
தேசிய அரசு குறுகிய காலத்திற்குள் இலங்கை மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்தியுள்ளது என்றும் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.
(உ-5)

# தற்கொலை செய்த புலனாய்வு அதிகாரியின் அலைபேசித் தரவுகள் பொலிஸார் வசம்

கொழும்பு, ஒக். 18
லசந்தவை தானே கொலை செய்ததாகக் கூறி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட இராணுவப் புலனாய்வு முன்னாள் அதிகாரியின் அலைபேசிப் பதிவுகளை கண்டறிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
ஊடகவியலாளர் லசந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி கொலை செய்யப்பட்டார். இவரது உடல் 7 ஆண்டுகளின் பின்னர், கடந்த மாதம் மீள் விசாரணைக்காகத் தோண்டி எடுக்கப்பட்டது. லசந்தவைக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் பிரேமானந்த உடலகம என்ற இராணுவப் புலனாய்வு அதிகாரி கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.
இந்தக் கொலை தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் 6 மணிநேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.
இவ்வாறானதொரு நிலையில் கேகாலையில், இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரி ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இந்த அதிகாரி, இராணுவப் புலனாய்வுப் பிரிவிலிருந்து 2007ஆம் ஆண்டே ஓய்வு பெற்றிருந்தார்.
மூச்சுத் திணறல் ஏற்பட்டே உயிரிழந்ததாக உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.
இவரது அலைபேசி அழைப்புக்கள், குறும் செய்திகள் அழிக்கப்பட்டிருந்தாகத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றைத் தொலைபேசி வழங்குநர்கள் ஊடாக மீண்டும் கண்டறிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
லசந்த படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரியான பிரேமாணந்த உடலகமவை, மலிந்த உடலகம என்று தற்கொலை செய்து கொண்ட இராணுவப் பிரிவின் முன்னாள் அதிகாரி எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர் ஏன் இவ்வாறு எழுதினார் என்பது தொடர்பிலும் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
இதேவேளை, குறித்த இராணுவ அதிகாரி முன்னரே மில்லேனியம் சிட்டியில் உள்ள வீடொன்றில் ஆயுதக் களஞ்சியம் இயங்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர் என்று விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.
(வ-5)

# பிராந்தியக் கூட்டுறவு வாய்ப்புக்களில் பிம்ஸ்டெக் முழு வெற்றி பெறவில்லை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



கோவா, ஒக். 18
பிம்ஸ்டெக் மாநாடுகள் பிராந்தியத்தின் சுபீட்சத்தை மையப்படுத்திய பல்வேறு பிரகடனங்களை வெளியிட்டுள்ளன. எனினும் பிராந்திய கூட்டுறவுக்கான எல்லா வாய்ப்புக்களையும் அடைவதில் முழுமையாக வெற்றி பெறவில்லை.
இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
இந்தியாவில் நடைபெற்று வரும், பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள ஜனாதிபதி, நேற்றைய தினம் ஆற்றிய சிறப்பு உரையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இதன்போது அவர் தெரிவித்ததாவது:
இந்த ஒன்று கூடலானது பிம்ஸ்டெக் நோக்கங்களை வினைத்திறன் மிக்கதாக அமைத்துக் கொள்வதில் நாடுகளுக்கு இடையேயான ஒருமித்த நோக்கத்தையும் ஐக்கிய உணர்வையும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாக உள்ளது. பொருளாதார, தொழில்நுட்ப கூட்டுறவின் ஊடாக அதன் நன்மைகளை பிராந்திய மக்களுக்கு பெற்றுக் கொடுக்க உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
பொருளாதாரத்தை நவீனமயப்படுத்தல், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, அறிவுப் பரிமாற்றம், தொழில்நுட்பத்துக்கான அதிகரித்த பிரவேசம், இயல்திறன் விருத்தி, வர்த்தக, முதலீட்டு விரிவாக்கம் என்பவற்றை இனியும் தாமதிக்க முடியாது.
அர்த்தபூர்வமான பெறுபேறுகளின் அடிப்படையிலான ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு பிராந்திய கூட்டுறவைப் பலப்படுத்துவதற்கான மார்க்கங்களைக் கண்டறிய வேண்டும்.
பிராந்திய கூட்டுறவுக்கும் பிராந்தியங்களுக்கிடையிலான கூட்டுறவுக்குமாக எமது அரசின் அணுகுமுறை எவரையும் பகைத்துக் கொள்ளாத, எல்லா நாடுகளுடனும் நட்புறவைப் பேணும் அடிப்படையிலானதாகும்.
ஒருவரை ஒருவர் சார்ந்து நிற்கும் இன்றைய உலகில் எந்தவொரு நாடோ அல்லது மக்கள் குழுமமோ தனித்திருந்து அபிவிருத்தியடைய முடியாது. அதேபோன்று எந்தவொரு நாட்டையும் மக்களையும் முக்கியமற்றதாக அல்லது பொருத்தமற்றதாகக் கருதவும் முடியாது. எமது மக்களின் முன்னேற்றத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு சமாதானத்தை நிலைப்படுத்த வேண்டும். இந்தப் பின்புலத்தில் நாம் பயங்கரவாதத்தை அதன் எல்லாவடிவங்களுடனும் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.


> இலங்கையை அடுத்தகட்ட அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்வதற்கு அறிவின் அடிப்படையிலமைந்த, போட்டித்தன்மைமிக்க, சமூக சந்தைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி அதனூடாக உலகுடன் தொடர்புபடுவதே எமது அரசின் நோக்கம்.

கூட்டுறவு ஒரு முக்கியமான அம்சமாகும். எமது மக்களுக்கு உச்ச பயன் கிடைக்கும் வகையில் கூட்டுறவு உணர்வுடன் கூட்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.
கூட்டுறவின் அடிப்படையிலான பொதுவாக அடைந்து கொள்ளும் நன்மைகளையே இலங்கை பெரிதும் நம்புகின்றது. கூட்டுறவு நன்மைகளை அடைந்து கொள்வதில் வர்த்தக மற்றும் பொருளாதார சந்தர்ப்பங்களை ஒத்துழைப்புடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
பிம்ஸ்டெக் அமைப்பை பலப்படுத்துகின்ற அதேநேரம், சார்க் மற்றும் ஆசியான் அமைப்புகளுக்கிடையே நெருங்கிய ஒத்துழைப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்புகளையும் கண்டறிய வேண்டும்.
இந்த அமைப்பின் அடிப் படை எதிர்பார்ப்புகளில் ஒன்றான பிராந்தியத்திற்கிடையிலான வர்த்தக, முதலீட்டு மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பான நோக்கங் களை அடைந்து கொள்வதற்குஎமது அமைப்பை மீளொழுங்குபடுத்த வேண்டிய காலம் உருவாகியுள்ளது.
பொருளாதார அபிவிருத்திக்கான எமது கூட்டு முயற்சிக்கு பங்களிக்கும் வகையில் தொழில்நுட்ப பரிமாற்ற வசதிக்கான ஒரு பிம்ஸ்டெக் நிலையத்தைத் தாபிப்பதற்கான இலங்கை அரசின் நோக்கத்தை வலியுறுத்திக் கூறவிரும்புகின்றேன்.
இலங்கையை அடுத்தகட்ட அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்வதற்கு அறிவின் அடிப்படையிலமைந்த, போட்டித்தன்மை மிக்க, சமூக சந்தைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி அதனூடாக உலகுடன் தொடர்புபடுவதே எமது அரசின் நோக்கம்.
கடந்தவருடம் தேசிய அரசு அமைக்கப்பட்டது முதல் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் மேம்படுத்துவதற்காக எமது நாடு எடுத்துள்ள நடவடிக்கைகளின் வெற்றிக்காக அனைத்து நாடுகளினதும் ஒத்துழைப்பினை பெரிதும் எதிர்பார்க்கின்றோம்-என்றார்.
(வ-5)

# வெறுக்கத்தக்க நிகழ்வுகள் நடந்தாலும் சரி செய்து முன்னேற முயல்கிறோம்

## இப்படிச் சொல்கிறார் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க

கொழும்பு, ஒக். 18
நல்லாட்சி அரசினுள் வெறுக்கத்தக்க நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. அவற்றைச் சரி செய்து கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கே நாம் முயற்சிக்கின்றோம். இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.
'கிராமத்து விகாரையே கிராமத்தின் சக்தி' வேலைத் திட்டம் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தலைமையில் இரண்டாம் தடவையாக அஸ்ஸென்னவத்த சிறி ஆனந்தராம விகாரையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
வீட்டில் பிரச்சினைகள் ஏற்பட்டால் உடனே யாரும் விவாகரத்துப் பெற்று விடுவதில்லை. கதைத்துப் பேசித் தீர்த்துக்கொள்ளவே முயல்வோம். அது போன்ற நிலையே தற்போதைய அரசிலும் காணப்படுகின்றது. நாம் வெறுக்கும் நிகழ்வுகளும் இடம் பெறுகின்றன. இருந்தாலும் இவற்றைச் சரிசெய்துகொண்டு முன்னோக்கிருகாவே முயற்சிக்கின்றோம்.
குற்றம்புரிந்தவுடன் குற்றவாளிகளைச் சிறையில் அடைக்க வேண்டுமெனப் பலர் நினைக்கின்றார்கள். நாம் அதற்கான வழிமுறையினை ஏற்படுத்து கின்றோம். நாம் சட்டத்தையே நடைமுறைப் படுத்து கின்றோம். எந்தவொரு நபருக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக் கைகள் மேற்கொள்ளும் பொழுது உரிய நடைமுறையினை பின்பற்ற வேண்டுமெனவே ஜனாதிபதி தெரிவித்தார். குற்ற மிழைத்த நபரைத் தண்டிக்க வேண்டாமென அவர் ஒரு போதும் தெரிவிக்கவில்லை. கூட்டு எதிர்கட்சியென ஒரு கட்சி உண்மையில் இல்லை. ஜனாதிபதியும் பிரதரும் கட்சியைப் பற்றிச் சிந்திக்காது நாட்டைப் பற்றிச் சிந்தித்தே முடிவுகளை எடுக்கின்றனர். அதுதான் எங்கள் நாட்டு மக்களின் தேவை – என்றார்.
(உ-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்பந்தாட்டத்தில் நேற்றிரவு ஆதரவாளர்களிடையே மோதல்

## வல்வெட்டித்துறையில் சம்பவம் பலர் காயம், ஒருவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஒக்.18

வடமராட்சியில் நேற்று மாலை இடம்பெற்ற வடக்கு மாகாண கால்பந்தாட்ட போட்டியில் இரு அணி ஆதரவாளர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலால் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கம்பர் மலையைச் சேர்ந்த மார்க்கண்டு சசிக்குமார் (வயது-37) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்து மந்திகை வைத்திசாலையில் சேர்க்கப்பட்டார்.

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வடக்கு மாகாண கால்பந்தாட்ட போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியினரும், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தினரும் கலந்து கொண்டிருந்தனர். போட்டி ஆரம்பமாகி நடைபெற்று கொண்டிருந்த போது, இரு அணிகளும் 1 : 1 என்ற கோல்களை அடித்து சமநிலையில் இருந்தனர். இரு அணிகளும் கோல்களை அடிக்கும் போதே அந்த அணிகளினுடைய ஆதரவாளர்கள் மைதானத்திற்திற்குள் இறங்கி ஆரவாரித்தார்கள். போட்டி நிறைவுறும் தறுவாய் வரை இரண்டு அணிகளும் 1:1 என்ற கோல் கணக்கில் சமனிலையில் இருந்தனர். போட்டி நிறைவடையும் போது நாவாந்துறை சென். மேரிஸ் அணியினர் மேலதிமாக ஒரு கோலை அடித்து 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றனர்.

இதனால் அந்த அணியின் ஆதரவாளர்கள் மீண்டும் மைதானத்திற்குள் இறங்கி ஆரவாரித்தனர். இதன் போதே இரு அணிகளைச்சேர்ந்த ஆதரவாளர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் இரு அணிகளையும் சேர்ந்த 20ற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். போத்தல்கள், கொட்டன்களால் ஒருவரை ஒருவர் தாக்கினர். மோதலின் போது சென். மேரிஸ் அணியினருடைய ஜே.சி கள் கிழிக்கப்பட்டு, தீ வைக்கப்பட்டன. நீண்ட நேரத்தின் பின்னர் வல்வெட்டித்துறைப் பொலிஸார் நடவடிக்கையில் இறங்கினர். இதன்போது தலையில் படுகாயமடைந்த நபரை வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். நாவாந்துறை சென்.மேரிஸ் அணியினரை பாதுகாப்பான முறையில் பொலிஸ் வாகனத்தில் அனுப்பி வைத்தனர். மோதல் இடம்பெற்றதால் அந்தப் பகுதியில் நீண்ட நேரம் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. சம்பவத்தை அடுத்து வடக்கு மாகாண கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது.

'போட்டிகள் ஆரம்பித்து நடைபெற்று கொண்டிருக்கும் போது, இரு அணிகளை சார்ந்த ஆதரவாளர்களும் மைதானத்திற்குள் இறங்கி ஆர்ப்பரித்தார்கள். இதைப் பொலிஸார் தடுக்கவில்லை இதனால் மீண்டும் அந்த அணியினர் மைதானத்திற்குள் இறங்கி ஆர்ப்பரித்ததன் விளைவாலேயே இவ்வாறு மோதல் இடம்பெற்றது. ஆரம்பத்திலேயே பொலிஸார் நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தால் இது போன்ற சம்பவங்கள் இடம்பெற்றிருக்காது' என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

(வ-21,26)

# பஸ்ஸில் பணம் பறித்த "பட்டா கும்பலை" பருத்தித்துறையில் மடக்கியது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். நகரில் இ.போ.சபை பேருந் தின் மீது தாக்குதல் மேற்கொண்டுவிட்டு நடத்துநரிடம் பணப்பையை அபகரித்துச் சென்ற குற்றச்சாட்டில் 11 பேரைக் கொண்ட "பட்டாகும்பல்" பருத்தித்துறையில் வைத்து நேற்று மாலையில் மடக்கிப் பிடிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நகரில் வைத்தியசாலை வீதியில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இ.போ. சபை பேருந்தின் மீது பட்டா வாகனத்தில் வந்தவர்கள் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பியோடினர். இவ்வாறு தாக்குதல் மேற்கொண்ட கும்பல் பேருந்தின் நடத்துநரிடம் இருந்த பணப்பை மற்றும் சிட்டைப் புத்தகம் என்பவற்றையும் அபகரித்துச் சென்றனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது, பட்டா வாகன இலக்கம் கிடைக்கப் பெற்றது. அதன் பிரகாரம் வாகன உரிமையாளர் இனம் காணப்பட்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸார் பருத்தித்துறைப் பிரதேசத்துக்குச் சென்று 11 பேரைக் கொண்ட "பட்டா கும்பலை" நேற்று மாலை கைது செய்தனர். அவர்கள் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4,101)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 564
சீட்டிழுப்பு திகதி 17.10.2016
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
08 28 42 45 P
சுப்பர் ஜக்பொட்
ரூ. 55,775,140/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1306
சீட்டிழுப்பு திகதி 2016.10.17
வெற்றி இலக்கங்கள்
03 27 32 60 L
ரூ. 27,065,480/-

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 32
சீட்டிழுப்பு திகதி 2016.10.17
வெற்றி இலக்கங்கள்
08 25 38
40
8,727,200/-
84
8179721

# அதிபரின் ஆத்திரத்தால் பெற்றோர் கவலை



கிளிநொச்சி, ஒக். 18

சப்பாத்து அணிந்து பாடசாலைக்கு சமுகமளிக்காத மாணவர்களுடைய காலணிகளை (செருப்பு, சன்ரில்) பாடசாலைக்கு முன்பாக குவித்து வைத்த கிளிநொச்சியைச் சேர்ந்த பாடசாலை அதிபரால் நேற்றுக் குழப்பம் ஏற்பட்டது.

கிளிநொச்சி பாரதிபுரம் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றிலேயே நேற்றைய தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பாரதிபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற ஒன்று கூடலின் போது, அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் சிலர் சப்பாத்து அணியாது செருப்புடனும், நாகரிக காலணிகளுடனும் சென்றுள்ளனர். இதை அவதானித்த அந்தப் பாடசாலையின் அதிபர், மாணவர்கள் பாடசாலைக்கு ஏற்ற முறையில் சப்பாத்து அணியவில்லை என்று தெரிவித்து, அந்த மாணவர்களுடைய காலணிகள் அனைத்தையும் கழற்றி பாடசாலைக்கு முன்பாக உள்ள வீதியின் நடுவே குவித்துள்ளார்.

இந்த விடயம் அந்தப் பாடசாலை மாணவர்களுடைய பெற்றோருக்கு தெரிவிக்கப்பட்டது. இதை அடுத்து அங்கு வந்த பெற்றோர் அதிபருக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்தனர்.

'கடந்த கால வன்செயல்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தற்போதும் கூலித் தொழிலாளிகளாக வறுமையில் வாழ்ந்து வரும் எங்களை, அதிபரின் செயற்பாடு மிக மோசமாக இழிவுபடுத்தியுள்ளது. நாங்கள் மூன்று வேளை நல்ல உணவை உட்கொள்ளவே தினமும் போராடிவருகின்றோம். இந்த நிலையில் சப்பாத்து அணியவில்லை என்ற காரணத்தினால் எங்கள் பிள்ளைகள் அணிந்து வந்த தேய்ந்து போன செருப்புக்களை ஊரே பார்க்கும் வகையில் நடுவீதியில் குவித்தது எங்களை மனதளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளது' என்று அங்கு வந்த பெற்றோர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த கரைச்சி கோட்டக் கல்வி அதிகாரி அமிர்தலிங்கம் பெற்றோர் களுடன் கலந்துரையாடினார். உரிய நடவடிக்கைகளை மேற் கொள்வதாக அவர் பெற்றோரிடம் தெரிவித்தார். இதனால் நிலமை சுமுகமாக்கப்பட்டது.

'பாடசாலை அதிபரின் இந்தச் செயற்பாடு வருத்தமளிக்கிறது. இந்தச் செயற்பாடு அந்தச் சமூகத்தை பெரிதும் பாதித்துள்ளது. எனவே பெற்றோர்களின் கோரிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதிபருக்கும் பெற்றோர்களுக்கும் ஆறு மாதங்களாகக் கருத்து முரண்பாடுகள் நிலவி வருகின்றன. அதிபருக்கு எதிராக பத்து அமைப்புக்கள் வலயக்கல்வி அலுவலகத்துக்கு முறைப்பாட்டுக் கடிதம் அனுப்பியுள்ளன. கல்வி வலயமும் இது தொடர்பில் ஒரு மாதத்துக்கு முன் மாகாணத்திற்கு அறிவித்திருக்கிறது' என்று கரைச்சி கோட்டக் கல்வி அதிகாரி அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

(வ-21)

விற்பனைக்கு
அல்சேசன் (ஜேர்மன் செப்பேட்)
நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
(5499) (17.18.20)
தொடர்பு - 077 711 2412

7 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



இல.56, விதானையார் வீதி
சுண்டுக்குளியில் வசிக்கும்
சிவராஜகுமார் மதிவதனி
தம்பதிகளின்
செல்வப்புதல்வர்கள்
சிவடனுஷன்
சிவடனுஷிகன்
தமது 7ஆவது பிறந்தநாளை இன்று (18.10.2016) செவ்வாய்க்கிழமை கொண்டாடுகிறார்கள். இவர்களை அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா, அத்தைமாமா, பெரியத்தை, வசந்தா அத்தை, கனடா பெரியப்பா குடும்பம், ஆசை அத்தை, தண்ணிமாமா, மேனகா அத்தை, சித்தா, குட்டிமாமா, குட்டி அத்தை அனைவரும் சகல செல்வங்களும் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.
" சிவபதி "
14/1 விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
சித்தா குடும்பம்.

2012 இல் கடமைத் தழுவல் மேற்கொண்டு அதிபர் சேவை மேலதிக ஆளணியினராக நியமனம் பெற்றவர்களுக்கான அவசர கலந்துரையாடல்
இடம்: M-Tech கலை வர்த்தகக்கல்லூரி
மத்திய சந்தைக்கு அருகில், கிளிநொச்சி.
நேரம்: பி.ப 3.30 புதன்கிழமை (19.10.2016)
குறிப்பு: புதிய பிரமாணக் குறிப்பிற்கமைவான அதிபர் சேவை உள்ளீர்ப்புத் தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்க இருப்பதால் தங்கள் அதிபர் சேவை நியமனக் கடிதப் பிரதியை எடுத்து வருவதுடன் வரவை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
செயலாளர்.
(J 5498) (16,17,19)
தொடர்பு: 077 7110997, 077 6526263

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

மீசாலை வடக்கு, மீசாலையைச் சேர்ந்த முத்துலிங்கம் சிவநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை மற்றும் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த அவரது குடும்பத்தாரின் அடையாள அட்டைகள் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் சரசாலை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**021 320 6607, 077 608 0553, 0779854375**

## பெற்றோலிய முகவர்களின் சங்கம்

**44 ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும், 2016 - 2017 ஆம் ஆண்டுக்கான உத்தியோகத்தர் தெரிவும்**

எமது வருடாந்த பொதுக்கூட்டம் 22.10.2016 சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு KINGSBURY HOTEL, இல.48, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01 இல் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்கள்

**கௌரவ. சந்திம வீரக்கொடி அவர்கள்**
**பெற்றோலிய வளத்துறை அமைச்சர்**
**மற்றும்**
**டாக்டர் அனோமா கமகே**
**பிரதி பெற்றோலிய வளத்துறை அமைச்சர்**

குறிப்பு: இதுவரை அங்கத்துவம் பெறாத முகவர்கள் 19.10.2016 ஆம் திகதிக்கு முன்னர் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் அவர்கள் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு இலவசமாக Fellowship இலும் மதிய உணவிலும் கலந்து கொள்ள முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தலைவர் - 072 772 2154**
**செயலாளர் - 077 777 4282**

பெற்றோலிய முகவர்களின் சங்கம்,
இல.534, புதிய குணுப்பிட்டிய வீதி, களனி.

## கட்டுரைப் போட்டி அகில இலங்கை இந்து மாமன்றம்

தீபாவளித் திருநாளை முன்னிட்டு **"மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு"** என்ற விடயத்தை முன்நிறுத்தி பாடசாலை மாணவர்களுக்கிடையே

**அ) கட்டுரைப் போட்டி ஆ) சித்திரப் போட்டி (இ) கவிதைப்போட்டி**

என்பவற்றை அகில இலங்கை இந்துமாமன்றம் ஒழுங்கு செய்துள்ளது.

**அ) கட்டுரைப் போட்டி**

தலைப்பு: **"மது மற்றும் போதைப் பொருள்களால் அழிவடையும் சமுதாயம்"**

பிரிவு - 1 ஆண்டு 6 - 8 : 300 சொற்களுக்கு மேற்படாமல்
பிரிவு - 2 ஆண்டு 9 - 11 : 1000 சொற்களுக்கு மேற்படாமல்
பிரிவு - 3 ஆண்டு 12 - 13 : 1200 சொற்களுக்கு மேற்படாமல் அமையவேண்டும்.

**ஆ) சித்திரப் போட்டி**

**மது மற்றும் போதைப் பொருள்களால் சமுதாயச் சீரழிவு ஏற்படுவதைச் சித்தரித்து,** மக்கள் - குறிப்பாக இளம் சமுதாயம் எதிர்கொள்ளும் இன்னல்களை வெளிப்படுத்தும் சுலோகங்களுடன் கூடிய சித்திரங்கள். பிரிவுகள் கட்டுரைப் போட்டியில் குறிப்பிட்டவாறு அமையும்.

**இ) கவிதைப் போட்டி**

சித்திரப் போட்டிக்குரிய தலைப்புடன் கூடிய சொந்தக் கவிதைகளாக இருக்க வேண்டும். பிரிவுகள் கட்டுரைப் போட்டியில் குறிப்பிட்டவாறு அமையும்.

மாணவர் ஒருவர் ஒருபிரிவில் மட்டும் பங்கு பற்றமுடியும் ஆக்கம், மாணவரது சொந்த முயற்சியாக இருக்கவேண்டும் வகுப்பாசிரியர் மற்றும் அதிபர் ஆகியோர் உறுதிப்படுத்தவேண்டும் கட்டுரைகள், கவிதைகள் A4 தாளின் ஒருபக்கத்தில் அமைவதுடன், தெளிவான கையெழுத்துப் பிரதியாகவும் இருக்கவேண்டும்.

மாணவர்கள் தமது பெயர், வகுப்பு, பாடசாலை, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு 28.10.2016 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

ஒவ்வொரு பிரிவுக்குமான பரிசு விவரம் வருமாறு

முதலாவது பரிசு - ரூபா 5,000/= + சான்றிதழ்
இரண்டாவது பரிசு - ரூபா 3,000/= + சான்றிதழ்
மூன்றாம் பரிசு - ரூபா 1,000/= + சான்றிதழ்

**அனுப்பவேண்டிய முகவரி:**
**பொதுச் செயலாளர்,**
**அகில இலங்கை இந்து மாமன்றம்,**
**91 / 5, சேர். சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு - 02**

**தொலைநகல்: 011 234 4720**

**வே. கந்தசாமி**
**பொதுச் செயலாளர்.**

மின்னஞ்சல்: hinducongress@gmail.com

## University Of Jaffna, Sri Lanka
## Faculty of Medicine

### Academic Programme

The Academic Programme for the New Batch (2015 A/L) of Medical Students will commence on Monday, 31st of October 2016. An Inauguration Programme will be held on the same day at 8.30 am in the Hoover Auditorium, Faculty of Medicine. It is appreciated that the Parents (Father & Mother) of each student attend this Inauguration Programme.

Registrar,
University Of Jaffna.
17.10.2016


## சிறிகுமரன் ரெக்ஸ்

**தித்திக்கும் தீபாவளியை "சிறிகுமரன் ரெக்ஸ்" உடன் கொண்டாடி மகிழுங்கள்**



Office wear
சாறி ரூபா 590/= இலிருந்து
(With Blouse)

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய சாறி, சல்வார் மற்றும் ஆடைத் தெரிவுகளை அதிரடி விலைகளில் பெற்றிட.

இச்சலுகை **19.10.2016 - 29.10.2016** வரை மட்டுமே.

**சிறிகுமரன் ரெக்ஸ்**
**770, K.K.S. வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.**



## வெகுவிரைவில்

**யாழ் நகரில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட விசாலமான காட்சியறையை**



ROYAL Collection

**இல. 223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

ஆண்கள் / பெண்களுக்கான ஆடைத்தினுசுகள் மற்றும் அழகு சாதனப்பொருள்கள்




**தீபத்திருநாளை முன்னிட்டு விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படும்.**

ROYAL COLLECTION
NO.223, POWER HOUSE ROAD
(Behind Jaffna Teaching Hospital) T.P : 021 2225573


### மைத்திரி...

பெற்ற சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க மற்றும் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா ஆகியோர் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

நாட்டை தீக்கிரையாக்குவதற்கு சரியான சந்தர்ப்பம் வரும்வரை சில இனவாத சக்திகள் காத்திருக்கின்றன. அவற்றுக்குச் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் இராணுவ அதிகாரிகளை அடிக்கடி பொலிஸ் நிலைய வாயிலுக்கு இழுக்கின்றமை தவறாகும்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, நிதி மோசடி விசாரணைப் பிரிவு என்பவை மேற்கொண்ட சில விசாரணைகள் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தப்படவில்லை. இதனால் ஜனாதிபதியின் கட்டளைக்கு அமையவே இவை இடம்பெறுவதாக நினைத்து மக்கள் அவருக்கு எதிராகக் கருத்துக் களை முன்வைத்தனர். பல சிவில் அமைப்புக்கள் ஜனாதிபதியிடம் இது தொடர்பில் விளக்கம் கோரியிருந்தன. அதனாலேயே அவர் இந்த அறிவித்தலை விடுத்தார். இதில் நாங்கள் குறை காணவில்லை. அவரது கருத்து சரியானதே.

நிதி மோசடி விசாரணைப் பிரிவு சுயாதீனமாக இயங்குவதை மேலும் உறுதி செய்து கொள்வதற்கு வெலியமுனி தலைமையில் இது தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சுயாதீனமான ஆணைக் குழுக்கள் ஊடாக எவ்வித அரசியல் பழிவாங்கல்களும் இடம்பெறாது இருப்பதை உறுதிப்படுத்தி அதன் சுயாதீனத்தன்மையை பாதுகாக்கவே முயற்சிக்கின்றோம்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவு தற்போது பிரதமர் தலைமையிலான குழுவொன்றின் மேற்பார்வையின் கீழே இயங்கி வருகின்றது. இதுவும் சுயாதீனமாக இயங்கும் வகையில் பொலிஸ் திணைக் களத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்என்றேசுதந்திரக் கட்சி தொடர்ந்தும் கோரிக்கை முன்வைத்து வருகின்றது - என்றார். (உ-5)

### பொலிஸ்மா...

விலகல் தொடர்பில் நேற்று கருத்து வெளியிடுகையிலேயே மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இவ்வாறு தெரிவித்தார். 'இலஞ்ச, ஊழல் ஆணைக் குழு, நிதி மோசடி விசாரணைப் பிரிவு உள்ளிட்ட சில நிறுவனங்கள் அரசியல் நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் செயற்படுகின்றன. அதை தற்போது ஜனாதிபதி உறுதிப்படுத்தியுள்ளார். நீண்ட நாள்கள் சென்ற பின்னராவது, பதவிதுறக்கும் முடிவை இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் எடுத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். அதேபோல், சட்டத்தை நிலை நாட்டுவதாகப் பொய் கூறிவரும் பொலிஸ்மா அதிபரும் விரைவில் தனது பதவிலிருந்து விலகவேண்டும்'' என்றார். (வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

*கடந்த வாரம் வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை ரீதியாக எமக்குக் கிடைத்த பெறுபேறுகளின் விவரம்*

**யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்**

கி.லி.வி.ப.டில்சாந் பற்றிக் - 191, ம.ஏகாச்சரி - 188, அ.மெல்ஷா- 188, ர.பரத் - 187, ர.திலக்ஷான்- 187, சி.கொலுசனன் -186, க.வித்தகன் - 187, ஜெ.கேதுஷாந்-185, ஹ.ஜெகப்பிரியன் - 184, சி.மிஷாலி - 183, கெ.சங்கவி- 183, டெ.துஷாரி- 182, வதிஷனா - 182, டு.டுஷிக்கா- 182, கி.கிறிஸ்ரினா அனுஜிற்றா- 181, ம.வாசனா- 180, ஆ.நிவேதன் - 180, பி.டிவேஷ் - 179, வ.தேனுஹர்சன் - 179, கி.கபிசாந் - 179, சு.நிவேதிகா - 179, ப.தருணிகா- 178, சி.ராகுலன் - 178, நி.அபிஷரோன் - 178, ர.பஷ்மித்திரன் - 177, கே.பிறென்யா- 177, இ.திலக்சி -177, இ.சங்கவி - 177, சி.மருதபரணி - 176, வ.பிரகோபன் - 176, சி.வர்ஷினி- 176, ல.லக்ஷணா - 176, தி.சுவேதிகா- 176, ப.அஞ்சனா - 176, செ.அட்சயன் - 176, ஹ.ஐங்கரன் - 175, ஜெ.சுமித் - 175, ஜெ.அபிசன் - 175, அ.அக்ஷெயா - 175, ச.புதியவன்-175, கி.ஹரிஷ்ணவி - 174, சி.மானசிகா -174, ம.மேதினிகா - 174, ஜெ.சதுர்ணா - 174, றெ.சானுஜன் -173, சோ.தனுஷிகன் - 173, வி.அபிஷேக்-173, கோ.யதுவர்ஷி -173, பி.மதிஷன் - 173, இ.கரிஸ்ணன் - 173, வை.அபிஷாயினி - 173, பி.சப்தவி - 172, அ.கோபிசன் - 172, யூ.தாகினி -172, இ.சங்கவி - 171, பி.சதுர்ணா - 171, சி.வைஷ்ணவி- 171, கு.பவிசன் - 170, சா.அபிஷாந் - 170, நா.சுபகோபிகன் -170, செ.விஷ்வாதிகா- 170, ஶ்ரீ.ஶ்ரீசுவிஜா- 170, இ.ஜெனிஸ்ரன் - 170, ச.சர்வேஸ்ராம் - 170, ஜெ.தேனுஜா -170, கி.லி.வி.ப.கிருஷாந் பற்றிக் - 169, கி.திவ்யன் - 169, யூ.ஜெருண் பிறின்ரன் - 169, வ.ஹெர்சல்ஷரோன் - 169, யோ. அபிஷனா- 168, த.மோகன மயூரிகா - 168, மோ.ருக்சிகா - 168, ர.அபிசாந் - 168, மொ.வேஜின் சாருகா - 167, த.இந்துஜன் - 167, ஜ.திவாகினி - 167, த.ஆகாஷ் -167, அ.கம்சவர்த்தனி -167, ப.ஆராதனா -167, ம.கேசரன் -166, ம.அனிஸ்ரன் - 166, ச.சத்தியஜனனி - 166, த.சமிக்ஷா-166, ரா. அபினயன் - 166, ஶ்ரீ.திவ்ஜனன்-166, ம.அபிவர்ஷினி -166, செ.ஆரபி -166, கி.அடம்கபிரியோ - 165, ம.அரன் - 165 , ம.கிதுர்ஷன் - 165, கி.சோபிகா - 165, மோ.பிரகஷ்வினி - 165, க.டிரோஜன் - 165, கே.காவேரி - 165, ரோ.தர்ணியா -164, நி.நிலானி -164, ஜெ.அக்கிஷன் - 164, அ.தரணிகா - 164, வி.சுவீற்றனா - 164, ஶ்ரீ.கஸ்மிலா - 164, ஜெ. கஜானன் - 164, செ.அஸ்மிதா - 164, ல.கோதையழகி - 163, ச.அர்ஜயன் - 163, இ.அக்ஷயன் - 163, இ.வினோஜன் - 163, ந.பிரியங்கா -163, ச.அதிசயா - 163, தே.கஜவர்த்தனன் - 163, பி.அபிசனா - 163, ற.ஆதித்தன் - 163, ப.தாரகன் - 162, க.அபினயா - 162, ஞா.வைஷ்ணவி -162, ச.சிவானுஜா- 162, அ.செரோமியா - 162, அ.ஆதித்யா - 162, ச.அம்சனா - 161, அ.அல்றின் றொஷ்னி - 161, த.ஸ்யாமளி - 161, பா.கிருஷானி - 160, ப.லக்ஷானி - 160, பி.ஜெய்சன் டிவறயஸ் - 160, உ.கரோஜன் - 160, ச.ஜானுசா - 160, றீ.இன.வென்.ஜஸ்மின் - 160, நா.கேசவர்த்தனி - 159, கு.பிரவீனா - 159, பி.நிருஷ்ரிகா - 159, ச.கருணிகா - 159, ச.சசிந்த - 159, கே.ஷதுசன் - 159, சி.யோகிதன் - 158, அ.கோபினி- 158, செ. வைஷாலி - 158, இ.பானுஷிகா - 158, தி.காருண்யன் - 158, ம.ஹரினி - 158, மா.மாரக்பிரவீன் - 158, ச.நிருஜா - 157, சு.சுபர்னன் - 157, இ.நிஜிதா - 157, கி.பெலிக்ஸ் கொணஸ்ரா - 157, ப.தரணிசன் - 157, ஜோ.அனந்திகா -157, றொ.வினோஜன் - 157, சி.டக்சிகா - 156, யோ.சிவகாமி - 156, வி.விதுஜனன் - 156, ஶ்ரீ.ஶ்ரீசந்தோஷிகன் - 156, ச.ஹரிசன் - 156, ச.மதுமிதா -156, சு.ஹசோன் - 155, பா.சபேசசர்மா - 155, செ. அனற் ஷவோலின் - 155, சு.சிவஸ்திகா - 154, ஜெ.அஸ்வினி - 154, ச. துஷிதா - 154, ஜெ.திஷாரகி - 153, உ.கேதுஜா - 153, சி.பவிநயனி 153, ர.நிதுசன் - 153, ர.கஜனிகா - 153, க.பூஜிதா - 153, அ.பெறின்ரா - 152, சி.சிவனயா -152, க.அம்பிகா - 152, செ. விசாலன் - 152, யோ.ஆன் ஜெரால்ரின் - 152.


## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் சிவக்கொழுந்து மகேந்திரன்

அன்னை மடியில் : 01.08.1956 ஆண்டவன் அடியில்: 18.09.2016

திதி : துதியை

கடந்த 18.09.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் சிவக்கொழுந்து மகேந்திரன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 18.10.2016 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.மேலும் எமது குடும்பத் தலைவரின் மறைவு செய்தி அறிந்து பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார்கள். உறவினர்கள். நண்பர்களுக்கும். தொலைபேசி ஊடாகவும் வேறு வழிகளிலும் எமது துக்கத்தில் பங்குகொண்டவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அப்பா அப்பா நீங்கள் எங்கள் அப்பா!
உங்களை விட்டால் எமக்கு வேறுயாரு அப்பா!
அப்பா உயிர் பிரிந்தாயே எம்மை தனியாக தவிக்கவிட்டாயே!
தேடிப் பார்க்கின்றோம் உங்களைக் காணவில்லை அப்பா!
நீங்கள் போனபாதையை எண்ணி என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழ்கின்றோம் எம் ஆசை அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சித்தன் மாவடி வீதி,
கல்வயல், சாவகச்சேரி. 077 561 4593

அப்பாவின் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.

(c.23918) (15.18)

## துயர் பகிர்கின்றோம்



மக்கள் வங்கி பிரதான வீதிக்கிளையில்
பணியாற்றி 15.08.2016 சனிக்கிழமை
இறைபதம் அடைந்த எமது சக ஊழியர்

அமரர்
கணேசதாசன்
சுகந்தன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிசங்கம்,
மக்கள்வங்கி,
யாழ்பிரதான வீதிக்கிளை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



திருமதி
இராஜேஸ்வரி
சிவகுகதாசன்

மலர்வு
11.11.1935

இறைவனடி
30.10.2015

நாளை (19.10.2016) புதன்கிழமை எமது இல்லத்தில் ஆத்மசாந்திக் கிரியைகள் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வித்தனை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்
076 6630275

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
ஆறுமுகம் குணலிங்கம்

(உரிமையாளர் :
குணலிங்கம் பல்பொருள் வாணிபம்-
ஆனைப்பந்தி சந்தி)

அன்னை மடியில்
11.11.1941

ஆண்டவன் அடியில்
29.10.2015

திதி: திருதியை (ஐப்பசி - 02)
18.10.2016

கடந்த 29.10.2015 இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு சிராத்த தின நிகழ்வு இன்று (18.10.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வு சொர்ணாம்பிகை மண்டபத்தில் (T.C.T. Food City. 527, Navalar Road, Jaffna) நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றாம்.

குடும்பத்தினர்.
(மகன் - கு.சபேசன்.
குணலிங்கம் பல்பொருள் வாணிபம்
ஆனைப்பந்தி சந்தி)

இல.298, நாவலர் வீதி,
ஆனைப்பந்திச் சந்தி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஏல விற்பனை

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு உரிய கறவைப் பசுமாடுகள், கன்றுகள்(கிடாரி) 23.10.2016 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய முன்றிலில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை தொடர்பான நிபந்தனைகளையும் விற்பனைக்கு விடப்படும் பசுமாடுகள், மாட்டுக்கன்றுகளையும் ஆலய காரியாலய நேரங்களில் பார்வையிடலாம்.

(J 5488) (14,17,18) தர்மகர்த்தா சபை.

## அலுவலக தேவைக்கு வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் பிரபல கைத்தொழில் சார்ந்த சேவை வழங்கும் நிறுவனம் தனது அலுவலக தேவைக்காக சுமார் 2500- 3000 சதுர அடி கொண்ட வீடு வாகனத் தரிப்பிட வசதிகளுடன் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் தேவை. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

021 222 6609 (C/25963)(11,16)

## பதவி வெற்றிடம்

நீங்கள் O/L தகைமையுடையவரா எமது American நிறுவனமானது தனது புதிய கிளைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கவுள்ளது.

*வயதெல்லை : 18 - 30
*அனுபவம் அவசியமற்றது
*தங்குமிடம் இலவசம்
*20 வெற்றிடங்கள் மட்டும்

தொடர்புகளுக்கு - 077 6644442, 076 6781042

(J/5495)(07.19.20)

## வேலையாள்கள் தேவை

சிறந்த தொழிலை அமைத்துக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் அரிய வாய்ப்பு. எமது நாட்டில் பிரசித்தி பெற்ற தயாரிப்பு தொழிற்சாலைகளில் லேபல் பொதியிடல், உற்பத்தி மற்றும் Hotel களில் Waiters, Kitchen - Helper, Cook மற்றும் Sales man, Insurance, பணிப்பெண்கள், சாரதிகள், உதவியாள்கள் போன்ற துறைகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. வயது 18 - 55 வரை. ஆண் / பெண் வேலையாள்கள் தேவை. சம்பளம் 15,000/=. 32 ,000/= வரை. தொழிலடிப்படையில் உணவு. தங்குமிடம் வழங்கப்படும்.

077 683 8226, 077 799 9159 (C/25670)(11,17,18)
No.157, Kandy Road, Thekawaththa, Vavuniya.

## சம்பந்தனை...

யினதும் கவனத்துக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் கொண்டுவந்துள்ளார் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்தக் கொலையைச் செய்வதற்கு கொலையாளிக்கு 25 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளே இந்தக் கொலையைச் செய்தனர் என்று கூறுவதன் மூலம் அந்த அமைப்பு உயிர்ப்போடு இருப்பதாகக் காட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தனக்குத் தொலைபேசி மூலமும் மின்னஞ்சல் மூலமும் ஒருவர் தகவல் தந்துள்ளார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அந்த முறைப் பாட்டில் தெரிவித்துள்ளார். ஆங்கிலப் பத்திரிகையான "சிலோன் ருடே" இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளததாவது:

செப்ரெம்பர் மாதம் பலப்பிட்டி யவை சேர்ந்த சிங்கள நபர் ஒருவரிடமிருந்து மின்னஞ்சலொன்று வந்தது. பின்னர் அதை அனுப்பியவர் எனக் கருதப்படத்தக்க ஒருவர் அலைபேசியிலும் பேசினார்.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனைக் கொலை செய்வதற்குத் தீட்டப்பட்டுள்ள சதித் திட்டம் குறித்துத் தனக்குத் தெரியும் என்று கூறினார். இதற்காக நபர் ஒருவருக்கு 25 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. கொலையை மேற்கொண்ட பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பழிபோடத் திட்டமிட்டுள்ளனர் என்று அந்த நபர் குறிப்பிட்டார். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இன்னமும் இயங்குகின்றது என்பதைக் காண்பிக்கவே அவ்வாறு திட்டமிடப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

தொலைபேசியில் பேசும் அந்த நபர், தானே குறிப்பிட்ட மின்னஞ் சலை அனுப்பினார் எனவும் தெரிவித்தார். தனக்கு இது குறித்து எவ் வாறு தெரிய வந்தது, எதிர்க்கட்சி தலைவரை கொலை செய்யும் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது போன்ற பல விவரங்களையும் அவர் என் னிடம் தெரிவித்தார்.

நான் இந்த விடயம் குறித்து ஆராய்ந்த பின்னர் பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டேன். அந்த முறைப்பாட்டின் பிரதியை ஜனாதி பதிக்கும் அனுப்பி வைத்தேன். இது எனது கடமை என்று நினைத்தே செய்கிறேன் என்றும் அதில் குறிப்பிட்டேன்.

சில நாள்களுக்கு முன்னர் அந்த நபர் மீண்டும் என்னுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். பயங்கரவாத விசாரணை பிரிவின் தலைவர் எனக் கூறும் டி சில்வா என்பவர் தன்னைத் துன்புறுத்துகிறார் என்று அவர் குறிப்பிட்டார். சிங்களவராக இருந்து கொண்டு தமிழ் மக்களுக்கு ஆதரவாக ஏன் செயற்பட்டு ஏன் துரோகம் செய்கின்றாய் என்ற தொனியில் தன்னைத் துன்புறுத்துகின்றனர் என்றார். இந்த விடயங்களையும் நான் பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள் ளேன்" என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

மிகவும் பாரதூரமான இந்த விடயத்தை அரசியல் கோமாளித்தனத்துக்குப் பயன்படுத்த எவரும் முயலக் கூடாது என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார் என அந்தச் செய்தி கூறுகின்றது.

இதேவேளை இந்த மாதம் முதலாம்திகதியாழ்ப்பாணத்தில்நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவுக்கு அனுப்பி வைத்திருந்த செய்திக் குறிப்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தன்னைக் கொலை செய்வதற்கு சதி முயற்சிகள் நடப்பதாகவும், அந்தக் கொலைப் பழியை விடுதலைப் புலிகள் மீது போடுவதற்கு முயற்சிக்கப்படுவதாகவும் தெரிவித்திருந்தார். (உ-5)

## ஊழல்...

முன் னெடுப்பதாகச் சாரப்படக்கூடிய வகையில் குற்றம் சுமத்தியிருந்தார். அவ்வாறு செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர், தான் பதவியிலிருந்து விலகப்போகிறார் என அரசின் உயர்மட்டங்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தார். அவரை சமாதானப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஜனாதிபதியின் உரையினால் ஏற்பட்டிருந்த முறுகலைத் தீர்ப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் களத்தில் குதித்திருந்தார்.

இந்த முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில் பணிப்பாளர் தனது பதவியைத் துறந்துள்ளார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளரின் பதவி விலகல் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும், அவரது நல்லாட்சிக் கோட் பாட்டுக்கும் பலத்த அடியாகவும் பின்னடைவாகவும் அமையும் என்று சிவில் சமூக அமைப்புக் கள் சுட்டிக்காட்டி யுள்ளன.

இதேவேளை அவரது பதவி விலகல் குறித்துக் கருத்துத் தெரிவித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தொப்பி சரியாக இருந்தால்அதனை அவர்போட்டுக்கொள்ளட்டும் என்று தெரிவித்துள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், நெடுஞ் சாலைகள் இராஜாங்க அமைச் சருமான டிலான் பெரேரா மற்றும் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்தே இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் பதவி விலகுவதற்கு ஏது வாக இருந்திருப்பின் அதை அரசின் தலையீடாகவோ - ஜனாதிபதியின் தலையீடாகவோ இருக் காது. பணிப்பாளரின் பதவி நிய மனமானது சுயாதீன பதவி நிய மனமல்ல. அவர் தொடர்பில் ஜனாதிபதி இங்கு எதுவும் குறிப்பிடவில்லை. தொப்பி சரியாக இருந்தால் அவர்களே அதனைப் போட்டுக் கொள்ளட்டும் " என்றனர் அவர்கள்.

இதேவேளை நேற்று இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய ஜனாதிபதி மைத் திரி பால சிறிசேன லஞ்ச ஊழல் ஆணைக்குழுத் தலைவரின் பதவி விலகலை ஏற்றுக் கொண்டார் என்று ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்தார். (உ-5)

## வட மாகாணம்...

கடந்த 13ஆம் திகதி முதல் நேற்று வரை நடைபெற்றது. 855 புள்ளிகளுடன் மேல் மாகாணம் முதலிடத்தைப் பிடித்தது. மத்திய மாகாணம் 492 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தையும், சப்ரகமுவ மாகாணம் 304 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தையும் பிடித்தன.

வடமேல் மாகாணம் 275 புள்ளிகளுடன் நான்காமிடத்தையும், தென் மாகாணம் 238 புள்ளிகளுடன் ஐந்தாமிடத்தையும், வடமாகாணம் 122 புள்ளிகளுடன் ஆறாமிடத்தையும் பிடித்தன. அடுத்த மூன்று இடங்களை முறையே ஊவா மாகாணம், வடமத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகியன உள்ளன. வடக்குக்கு நான்கு தங்கப் பதக்கங்கள், ஒன்பது வெள்ளிப் பதக்கங்கள், எட்டு வெண்கலப் பதக்கங்கள், ஏழு வர்ண விருதுகள் கிடைத்தன. (ம-422)

## வீடு விற்பனைக்கு உண்டு

சுண்டுக்குளி பழைய பூங்கா வீதியில் வீடு விற்பனைக்கு உண்டு.

(J 5491) (16,17,19)

தொடர்பு: 077 7998386

## தேவை

வீட்டு வேலைக்கு பெண் பிள்ளை தேவை. வயதெல்லை: 25-40

(J 5489) (16,17,19)

தொடர்பு: 070 2924589

## வாடகைக்கு தேவை

அலுவலகம் ஒன்றிற்கு வீடு அல்லது கட்டடம் ஒன்று வாடகைக்கு தேவை. (கே.கே.எஸ் வீதியை அண்மித்த மருதனார் மடத்துக்கும் தாவடிக்கும் இடையில்)

தொடர்பு: 077 693 6722

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 . 04 . 1932



மறைவு
01 . 11 . 2012

### திருமதி கனகம்மா கந்தசாமி

பாதம்பட்ட இடமெல்லாம் பார்த்து மனம் ஏங்குதம்மா!
கண்பார்க்கும் இடமெல்லாம் - உந்தன்
அழகு முகம் தெரியுதம்மா!
காட்டிநின்ற உங்கள் அன்பு கைத்தடியாய்
வழி நெடுக வந்திடாதோ!
கானல் நீராய் எமையெல்லாம் கலங்க வைத்து
போனதென்ன?
எம் பாசம் கசந்ததுவோ ஏங்குதம்மா எங்கள் மனம்
உங்கள் அன்பு பாசத்தை சிந்தையிலே ரசித்தோமே!
இன்று தனியே தவிக்கவிட்டு நீர் மட்டும் எமைப்பிரிந்த
மாயமென்ன?
உங்கள் வதனம் காணது எம் உள்ளம் வாடுதம்மா
இனி எங்கு காண்போமோ
என்ன சொல்லி அழைப்போமோ உங்களை!
வார்த்தை ஏதுமில்லை. எம் துயர் துடைக்க
தேற்றுவார் யாருமின்றி தேம்பி அழுகின்றோம்
தேடுகின்றன விழியெல்லாம் உம் வதனம்
காணமுடியவில்லை.
ஈர விழிகளுடன் உறக்கம் தொலைத்த இரவுகளுடன்
உருகும் உம் பிள்ளைகளின்
குரல் உங்களின் செவிகளில்
விழவில்லையோ
உங்கள் வரவினில் சாத்தியமில்லை என்றாலும்
மறுஜென்மம் உண்டென்பதை மனதார நம்புகின்றோம்
வண்ணை வீரகாளி அம்மன் அருளால்
மீண்டும் வருவீர்கள் எனக் காத்திருக்கும்

171/6, முதலாம் ஒழுங்கை,
அரசடி றோட் நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[illegible]
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலக ஊழியராகக் கடமையாற்றிய

அமரர் சிவகுமாரன்
வர்னேந்திரன்



அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயருடையுடன் குடும்பத்தினருக்கு அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அஞ்சல் சமூகம்,
பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நேற்றுப் பேரணி

மன்னார், ஒக். 18

அனைத்துலக வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு மன்னாரில் மக்கள் பேரணியும்,விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நேற்று நடத்தப்பட்டன.

மன்னார் பிரதேச செயலகத்தின் வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மன்னார் சமாதான அமைப்பின் அனுசரணையுடன் இந்தப் பேரணி நடத்தப்பட்டது. மன்னார் பிரதான பாலத்தின் நுழைவாயிலில் மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பீ.ஏ.அந்தோனி மார்க் தலைமையில் முற்பகல் 10 மணியளவில் பேரணி ஆரம்பமானது. நூற்றுக்கணக்கானவர்கள் அதில் கலந்து கொண்டனர். பேரணி மன்னார் பஸார் பகுதியூடாக மன்னார் நகரசபை மண்டபத்தைச் சென்றடைந்தது.

நகர சபை மண்டபத்தில் வறுமை ஒழிப்புத் தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம் பெற்றது. மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜந்த றொற்றிகோ, மன்னார் சர்வோதய அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் உதயகுமார், அரச சார்பற்ற ஒன்றியத்தின் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டு அனைத்துலக வறுமை ஒழிப்புத் தொடர்பில் உரை நிகழ்த்தினர். சமுர்த்தி அதிகாரிகள், சமுர்த்திப் பயனாளிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் அதில் கலந்து கொண்டனர். (ற-4,56)

# முன்னணிப் பாடசாலைகள் தற்போது சவால் மிக்கனவாக மாறியுள்ளன

## கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்பாணம், ஒக்.18

கிளிநொச்சி கல்வி வலயத்துக் குட்பட்ட பாடசாலைகளில் முன்னுதாரணமாகக் காணப்பட்ட பாடசாலைகள் தற்போது சவால் நிறைந்த பாடசாலைகளாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்தார்.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலையில் தற்போது நிலவுகின்ற பௌதீக வள நெருக்கடிகளால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டு வருவது தொடர்பில் கடந்த வியாழக் கிழமை குறித்த பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசியர்கள் மற்றும் நலன் விரும்பிகளுடனான சந்திப்பொன்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் கடந்த காலங்களில் ஒரு முன்னுதாரணமான பாடசாலைகளாகக் காணப்பட்ட கனகபுரம் மகா வித்தியாலயம், பரந்தன் இந்து மகாவித்தியாலயம், கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை போன்ற பாடசாலைகள் இன்று சவால் நிறைந்த பாடசாலைகளாகக் காணப்படுகின்றன.

> பெற்றோர்கள் மாணவர்கள் இந்த விடயத்தில் மிகவும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும். இந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில்கள் பரீட்சையில், 5 மாணவர்களே சித்தி பெற்றுள்ளனர். 86 வீதமான மாணவர்கள் 70க்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்தப் பாடசாலைகள் முன்னர் முன்னணிப்பாடசாலைகளாகக் காணப்பட்டதுடன் கல்வியிலும் பல சாதனைகளைப் படைத்திருந்தன.

நகரப் பாடசாலைகளை விடவும் இவை திறமையாகச் செயற்பட்டுள்ளன. தற்போது இந்தப் பாடசாலைகள் சவால் நிறைந்த பாடசாலைகளாகக் காணப்படுகின்றன.

பெற்றோர்கள் மாணவர்கள் இந்த விடயத்தில் மிகவும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும்.

இந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில்கள் பரீட்சையில், 5 மாணவர்களே சித்தி பெற்றுள்ளனர். 86 வீதமான மாணவர்கள் 70க்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவற்றை கருத்தில் எடுத்து பெற்றோர்கள், பழைய மாணவர்கள் இந்தப் பாடசாலைகளை முன்னுதாரணமான பாடசாலைகளாக்குவதற்கு உழைக்க வேண்டும் - என்றார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்றஉறுப்பினர்சிவஞானம் சிறிதரன், கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் க.முருகவேல், கோட்டக் கல்வி அதிகாரி அமிர்தலிங்கம்,பெற்றோர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி3,35)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் தர்மலிங்கம் தர்மராஜா

பிறப்பு 15.03.1958
இறப்பு 18.09.2016

அன்பிற்கு இலக்கணமாய் பாசத்திற்கு உறைவிடமாய்
எம் நெஞ்சில் பதிந்தீரே
பாசமிகு கணவராய் அருமையான தந்தையாய்
எம்முடன் வாழ்ந்தீரே
உற்றார்க்கு உதவுபவராய் உறவினர்க்கு இனியவராய்
அருமைத் தோழனாய் இப்பூவுலகில் இருந்தீரே
இப் பூவுலகை விட்டு மறைந்தாலும் எம் மனதைவிட்டு
என்றும் மறையாது உம் நினைவுகள்

எம் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (2016.10.18) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்..

*(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)*

"பன்னாலை வாசம்"
தாவடி தெற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.
071 282 8017

(c/ 25921)(12.18.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 17

ஒன்லைன் பிரீன்லான்சிங் வாய்ப்புக்கள் சேவைத் துறையில் வேலைவாய்ப்புக் களுக்கான முதல்படி பற்றிய கலந் துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடை பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. யாழ். முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. இந்தக் கலந் துரையாடலில் பேராசிரியர் றொகான் சமரஜீவா மற்றும் ஆராய்ச்சியாளர் பே.சுதாகரன் வளவாளர் களாகக் கலந்து கொள் வர் என்று தெரிவிக்கப் பட்டது. (வ-ரி)

# ஊற்று இல்லாத கிணற்றுக்கு சிமெந்துக் கட்டு எதற்காக?

## திருவையாற்று மக்கள் கேள்வி

கிளிநொச்சி, ஒக். 18

திருவையாற்றில் 30 அடி ஆழத் தில் கிணறு வெட்டி அதற்குச் சிமெந்தாலான கட்டு அமைக் கப்படுகிறது. ஆனால் கிணற்றில் தண்ணீர் ஊற்று சிறிதளவுகூட வரவில்லை. பிரதேச செயலரும் கட்டு அமைக்க அனுமதி வழங்கி யுள்ளார்.

இவ்வாறு பிரதேச மக்கள் குற் றஞ்சாட்டினர்.

கிளிநொச்சியில் பொதுக் கிணறு அமைக்கும் திட்டத்தில் கிணறு கள் நிர்மாணிக்கப்படுகிறன்றன. திருவையாறு கிராமத்திலும் கிணறுகள் அமைக்கப்படுகின் றன. தண்ணீர் ஊற்று இல்லாத கிணற்றுக்கு கட்டு அமைக்கப்படு கின்றது என்று திருவையாறு கிராம மக்கள் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

எமது மாவட்டத்தில் பல பொதுக் கிணறுகள் அமைக்கும் பணி பிர தேச செயலகமூடாக முன்னெடுக் கப்படுகின்றது. திருவையாற்றுக் கிராமத்துக்கும் ஒரு பொதுக் கிணறு அனுமதிக்கப்பட்டு கடந்த வாரம் அதன் பணிகள் தொடங்கப்பட்டன. கிணறு தோண்டும் பணிகள் நேற்று நிறுத்தப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனை அவதானித்த கிராமத் தவர்கள் தண்ணீர் சிறிதளவுகூட வரவில்லை. எப்படி அதனைக் கட்டுவீர்கள் என்று கேட்டுள்ளனர். ஒப்பந்தத்தின் பிரகாரம் குறிக் கப்பட்ட அளவு தோண்டப்பட்டுவிட் டது. அதனால் கட்டும் பணி ஆரம் பிக்கவுள்ளது என்று பதிலளிக்கப் பட்டுள்ளது. தண்ணீர் சிறிதளவு கூட வந்திருக்காத நிலையில் எதற்காகக் கட்டுவேலை? இது மக் களை ஏமாற்ற அரசு முன்னெடுக் கும் மோசடியான திட்டத்தில் ஒன்றா? - எனக் கேள்வியெழுப் பினர்.

குறித்த கிணறு ஒப்பந்தத்தின் பிரகாரம் 30 அடி தோண்டப்பட் டுள்ளது. இருப்பினும் தண்ணீர் வரவில்லை என்பதும் உண்மை. குறித்த திட்டத்துக்கு 3 லட்சம் ரூபா மட்டும் அனுமதிக்கப்பட் டுள்ளதால் மேற்படி அளவு நிர்ணயம் செய்யப்பட்டது.

இதற்குமேல் அகழ்வதற்கு மேல திக நிதி தேவை. அதற்கான அனு மதி பெறப்படும் வரை காத்திருந் தால் மழையால் கிணறு தூர்ந்து விடும் சந்தர்ப்பம் உண்டு. அத னால் குறித்த அளவுடன் கட்டுமா னப் பணிகளை மேற்கொண்டு குறித்த கிணற்றை பாதுகாப்பதற்கு மேற்கொண்டு அனுமதியை பெற திட்டமிடப்பட்டது - என்று கரைச்சிப் பிரதேச செயலாளர் கோ.நாகேஸ் வரன் தெரிவித்தார். (ம-4,101)

## பொலிஸில் சரணடைந்தார் காணாமற்போன வர்த்தகர்

கிளிநொச்சியில் காணாமற்போனதாக தெரிவிக்கப்பட்ட வர்தகர் நேற்று கிளி நொச்சி பொலிஸ் நிலையத்தில் சரண டைந்தார் என்று கிளிநொச்சிப் பொலி ஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் - இடைக்குறிச்சி - வரணி யைச் சேர்ந்த கி.ரதீஸ் என்ற வர்த்தகர் கடந்த 13ஆம் திகதி கிளிநொச்சியில் காணாமற்போயிருந்தார் என்று உறவி னர்களால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது.

கிளிநொச்சியில்உள்ள தனது வர்த்தக நிலையத்திலிருந்து வீட்டுக்கு திரும்பிய போதே அவர் காணமற்போனார் என்று முறைப்பாட்டில் உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் பொலிஸாரும் விசா ரணைகளை மேற்கொண்டிருந்தனர். குறித்த வர்த்தகர் நேற்றையதினம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரரணடைந்தார். வர்தகர்கரை யாரும் கடத்தவில்லை என்பது ஆரம்ப விசா ரணைகளில் தெரியவந்தது. அவர் தலைமறைவாகியிருந்துள்ளார். அது தொடர்பான விசாரணைகள் இடம் பெறுகின்றன என்று பொலிஸார் தெரி வித்தனர். (வ-21)

## மகிந்தவின் மைத்துனர் நடேசன் கைதாகிப் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஒக். 18

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மைத்துன ரும், பிரபல வர்த்தகருமான திருக்குமரன் நடேசன் நேற் றுக் காலை கைது செய்யப்பட்டு மதியமளவில் பிணை யில் விடுவிக்கப்பட்டார்.

மல்வான பகுதியிலுள்ள 16 ஏக்கர் காணி மற்றும் அங் குள்ள சொகுசு மாளிகை தொடர்பிலான வழக்கிலேயே கைது செய்யப்பட்டு, ஐம்பதாயிரம் ரூபா ரொக்கம் மற் றும் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணைகளில், பூகொட நீதிவான் டி.ஏ.ருவான் பதிரன வினால் விடுவிக்கப்பட்டார்.

பசில் ராஜபக்சவிற்கு சொந்தமற்றது என்று கூறப்பட்ட மல்வான 16 ஏக்கர் காணி மற்றும் சொகுசு மாளிகை தொடர்பிலான விசாரணைகளுக்காக, திருக்குமரன் நடேசன் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு நேற்றுக் காலை முன்னிலையானார். விசாரணைகளின் பின்னர் அவர் கைது செய்யப்பட்டு பூகொட நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கம்பகா மாவட்டத்தின் மல்வான பகுதியில் களனி கங்கையின் கரையை அண்மித்த பகுதியில் அமைந் துள்ள 16 ஏக்கர் காணி மற்றும் அங்கு நிர்மாணிக்கப் பட்டுள்ள சொகுசு மாளிகை ஆகியவற்றை நாடாளு மன்ற உறுப்பினர் நிரூபமா ராஜபக்சவின் கணவரான, வர்த்தகர் திருக்குமரன் நடேசனிற்கே விற்றதாக காணி உறுதிப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தவர்கள் பொலிஸாருக்குத் தெரிவித்திருந்தனர்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதி நடை பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோல் வியடைந்ததை அடுத்து காணி மற்றும் வீட்டின் உரிமை யை முதித ஜயகொடி என்பவருக்கு குமார் நடேசன் சட்டரீதியாக பொறுப்பளித்துள்ளதாகவும் விசாரணைகள் மூலம் தெரிய வந்தது.

முதித்த ஜயகொடி குறித்த காணி மற்றும் சொகுசு மாளி கைக்கான உரிமையைக் கோர மறுத்ததை அடுத்து, காணி யையும், வீட்டையும் ஏலத்தில் விற்று கிடைக்கும் பணத்தை அரச வைப்பிலிடுமாறு பூகொட நீதவான் உத் தரவிட்டிருந்தார். (வ-5)

## சண்டிலிப்பாய் இந்துவின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.14

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை மதியம் 1.30 மணியளவில் பாட சாலை மண்டபத்தில் அதிபர் கு.விமலன் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக சண்டிலிப் பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசாவும் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

# பாருங்கள்! பயனடையுங்கள்!

*"ஞாலத்தில் புதுமைபுகும் தாலம்"*
*ஆய்வரங்கும் கண்காட்சி மற்றும் விற்பனையும்.*

பனை எங்கள் பரம்பரைச் சொத்து.

பனை வளம் என்பது எமது பிராந்தியங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பிரதான இயற்கை வளமாகும். கடல்வளமும், பனைவளமும் எமது உணவாகப் பயன்படுத்தப்பட்டன. பனைவள இயற்கை உணவுகளுடன் மரக்கறி, தானியங்களும் கடல்உணவுகளும் சேரும்போது அதற்கான சுவை மெருகூட்டப்படுவதுடன் எமக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களும் கிடைக்கப்பெறுகின்றன.

எமது முன்னோர்களின் தேசிய உணவாக பயன் படுத்தப்பட்டுவந்த பனை வள உணவுகளை நிராகரித்து காலத்தின் கோலத்தால் நவீன உணவு முறைகளை நாடி யதன் விளைவுதான் இன் றைய சந்ததியினருக்கு ஏற் பட்டுள்ள புதுப்புது நோய் களாகும். பரம்பரை நோயாக கருதப்பட்டு வந்த நீரிழிவு (சலரோகம்) போன்றவை தற்போதைய உணவு முறை களால் பெரும்பாலான மக்க ளுக்கு சிறு வயதிலேயே ஏற் பட்டு, இளம் சந்ததியை வாட்டி உயிர்ச் சேதம் ஏற்படுத்தி வருவதனை நாம் அனைவரும் அறியக்கூடியதாக இருக்கின்றது. இந்த நோய்களில் இருந்து மக்களைக் காப்பாற்ற பனை வள மற்றும் இயற்கை உண வுப் பாவனையை அதிகரிக்கச் செய்ய வேண்டியது நம் அனைவரதும் பொறுப்பாகும்.




அந்த வகையில் பனை அபிவிருத்திச் சபையால்
பதநீர்சார் உற்பத்திகள்.
பனம்பழம்சார் உற்பத்திகள்.
பனங்கிழங்குசார் உற்பத்திகள்.
போன்ற பனம் உணவுசார் உற்பத்திகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கி உற்பத்திகள் மேற் கொள்ளப்பட்டு, சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**பதநீர் சார் உற்பத்திகள்**

பதநீரில் இருந்து பின்வரும் உற்பத்திகள் மேற் கொள்ளப்படுகின்றன.

பதப்படுத்திய பதநீர்: சுண்ணாம்பை நீக்குவதன் மூலம் தயாரிக்கப்படுகின்றது. இது நேரடியாகப் பருகுவதற்கு உகந்தது.

**பனம் பாணி :** பதப்படுத்திய பதநீரை வெப்ப மாக்குவதன் மூலம் தயாரிக்கப்படுவதாகும்.

**பனஞ்சீனி :** பனம் பாணியினை வெப்பமேற்றி பிரத்தியேகமான தொட்டியிலிட்டு 48 மணித்தி யாலங்களின் பின் பெறப்படுவது.

**பனை வெல்லம் :** பனம் பாணியினை வெப்ப மேற்றிக் கட்டியாக்கிப் பெறப்படுவது.

**பனம் பழம்சார் உற்பத்திகள்**

பனம் பழத்திலிருந்து பெறப்படும் சாற்றிலிருந்தான உற்பத்திகளாகும். இதிலிருந்து பின்வரும் உற்பத்தி கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பதப்படுத்திய பனங்களி:** பனம்பழச் சாற்றை அங் கீகரிக்கப்பட்ட பாதுகாப்புப் பதார்த் தம் சேர்த்து காய்ச்சி பெறப்படுவது.

**பனாட்டு :** பனம்பழச் சாற்றை பாயில் பரவி நன்கு வெய்யிலில் காயவிட்டு தயாரிக்கப்படுவது.

**பாணிப்பனாட்டு :** பனாட்டுடன் பனம் பாணி மற்றும் இதர அனு மானங்கள் சேர்த்துத் தயாரிக் கப்படுவது.

**இதர உற்பத்திகள் :** ஐஸ்கிரீம், யோக்கட், கேக், இனிப்பு வகை கள் மற்றும் சிற்றுண்டி வகைகள் தயாரிக்கலாம்.

**பனங்கிழங்கு சார் உற்பத்திகள்**

பனம் விதையிருந்து பெறப்படும் உற்பத்தியாகும். இதிலிருந்து பின்வரும் உற்பத்திகள் மேற் கொள் ளப்படுகின்றன.

**பனங்கிழங்கு :** அவிப்பதன் மூலம் உணவாகப் பயன்படுத்த முடியும்.

**புழுக்கொடியல் :** அவித்த பனங்கிழங்கை வெய் யிலில் காயவிட்டு பெறப்படுவது. இதிலிருந்து பின் வரும் உணவுப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.

**புழுக்கொடியல் மா :** புழுக்கொடியலை அரைத்து சீனி தேங்காய் பூ கலந்து உணவுக்குப் பயன்படுத்த முடியும். அத்துடன் லட்டு, கேசரி போன்ற உணவு வகைகளும் மேற்கொள்ளலாம்.

இவ்வாறான பனம் உணவுகள் பருவகால உற்பத்தி களாக இருந்தபோதிலும் வருட முழுமைக்கும் பாவிப்பதற்கு ஏற்றவகையில் பனை அபிவிருத்திச் சபையால் உற்பத்தி செய்யப்படுகின் றன.

*"பனை மரம் எமது தேசத்தின் வளம்*
*பனம் உணவு எமது தேகத்தின் பலம்"*

ஊடக அனுசரணை: உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுண் நிதி நிறுவனங்களுக்கு எதிராக

# வவுனியாவில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்

வவுனியா, ஒக். 18

உழைக்கும் பெண்களின் பொருளாதாரத்தை இலக்கு வைத்து நுண் நிதி நிறுவனங்கள் சுரண்டுகின்றன என்று தெரிவித்து வவுனியா மத்திய பஸ் நிலையம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வறுமை ஒழிப்பு என்ற பெயரில் பெண்களின் வாழ்வாதாரத்தை சிதைக்காதே, அதிக வட்டி வசூலிக்காதே, நுண் நிதி கடன் ஒரு தூக்குக்கயிறு, உழைக்கும் பெண்களின் பொருளாதாரத்தை சுரண்டாதே, சிறுகடன்களை அரசே பொறுப்பெடு, மக்களையும் நாட்டையும் நிதிக் கம்பனிகளிடம் அடகு வைக்காதே, மக்களின் உணவு, பாதுகாப்பை உறுதிப்படுத்து, கிழமைக் கடன் கொடுத்து பெண்களை சீரழிக் காதே, போசாக்கு என்பது மக்களின் உரிமை! கடன் கொடுத்துப் பட்டினி ஆக்காதே, மைக்ரோ கிரடிற் கம்பனிகளைக் கட்டுப்படுத்து, நுண்நிதிக் கடன் சட்டங்களை கடுமையாக்கு, அரசே நுண்நிதி நிறுவனங்களை இறுக்கமாக கண்காணி, பெண்கள் மீதான கடன் சுமையை நீக்கு, அரசே வாழ்வாதாரத் திட்டங்கள் எங்கே?.- போன்ற கோசங்களை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பினர்.

வடக்கு, கிழக்கு மக்களின் பொருளாதாரத்தைச் சுரண்டும் ஆயுதமாக நுண் நிதிக் கடன்கள் மாறியிருக்கின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட நுண் நிதிக் கடனைப் பெற்றுக் கொள்ளும் மக்கள் அவற்றை நிதி நிறுவனங் களுக்கு வழங்க முடியாமல் தங்களது உடைமைகளை விற்க வேண்டியது அல்லது தற்கொலைக்கு முயற்சி செய்தல் என உயிர்களையும் காவு கொடுக்கின்ற நிலை அரங்கேறியிருக்கின்றது.

வன்னி மாவட்டங்களில் மந்த போசாக்கு நிலை அதிகரித்துள்ளது. சிறுவர் போசாக்கின்மை 19.5 வீதமாகவும் பெண்களின் போசாக்கின்மை 22 வீதமாகவும் அதிகரித்துள்ளது. கிராமங்களில் பாடசாலையில் வழங்கப்படும் மதிய உணவை மட்டும் நம்பியே பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்கின்றனர் என மாவட்ட சுகாதார வைத்திய நிலையம் தெரிவித்துள்ளது,

கிழக்கு மாகாணத்தில் நாளொன்றுக்கு சராசரியாக மூவர் தற்கொலை செய்யும் முயற்சிக்கு காரணம் தனியார் நிதி நிறுவனங்கள் அதிக வட்டிக்கு வழங்கும் கடன்களே. இதனைத் திருகோணமலை பொது வைத்தியசாலைப் பிரிவின் உள நலப்பிரிவு தெரிவித்துள்ளது. சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பு 2014 ஆம் ஆண்டு தரவுகளின் படி நாட்டின் உற்பத்தியில் 42 சதவீத பங்கிகை வழங்கும் மேல் மாகாணத்தை விட நாட்டின் உற்பத்தியில் 4 சதவீத பங்கினை மட்டுமே வழங்கும் வடமாகாணத்தில் உள்ள நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை மக்கள் தொகை வீதத் துக்கு அதிகமாகவே உள்ளது. இது வட பகுதி மக்கள் திட்டமிட்ட சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுகின்றார்களா என்ற சந்தே கத்தை எழுப்புகின்றது.- என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.



(ற-4)

## கூட்டு எதிர்க்கட்சியின் கட்சி இந்த ஆண்டு அறிவிக்கப்படாது!

கூட்டு எதிர்கட்சியால் உருவாக்கப்படும் புதிய அரசியல் கட்சியை இந்த வருடத்தில் அறிவிப்பதில்லை என்று என அதன் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த அரசியல் கட்சியின் உரு வாக்க வேலைகள் முடிவுக்கு வந்துள்ள போதும், ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன, இந்த ஆண்டு டிசம்பர் வரை முன் னெடுக்கும் தீர்மானங்கள் தொடர்பில் அவதானத்துடன் இருந்து மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க அவர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர் வரும் நாள்களில், மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட அவரின் ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுப்பாரா என்பது தொடர்பில் காத்திருப்பதாகவும், அவ்வாறு அழைப்பு விடுக்காமல் வெறும் நாடகம் மட்டுமே ஆடுவார் எனில், அதற்கு ஏற்றால்போல் பதிலளிப்பது தொடர்பிலும் கூட்டு எதிர்க் கட்சியினர் கலந்தாலோசித்துள்ளனர் என்று தெரியவருகிறது.

2017 ஜனவரி மாதம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் விசேட வேலைத்திட்டம் ஒன்றை நாட்டு மக்களுக்கு முன்வைக்க கூட்டு எதிர்கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. (ற)

மாபெரும்
பெற்றோல் மற்றும் டீசல் மோட்டார் வாகனங்கள்
ஏல விற்பனை
ஒக்டோபர் 19ஆம் திகதி
LOLC வாகன வளாகத்தில்
ஸ்டேசன் வீதி, வைரவபுளியங்குளம்,
வவுனியா
ப்ளோரா - 0245 11 81 81
திமோதி - 0766 58 23 29
அஜித் - 0773 13 64 04
பார்வையிடல் ஒக்டோபர் 16, 17 மற்றும் 18ஆம் திகதிகளில்
(வாகனங்கள் தொடர்பான முழு விபரங்களை 15.10.2016 திகதிய வீரகேசரியில் பார்க்கலாம்.)
LOLC MICRO CREDIT
LOLC FINANCE
சொக்மன் & சமரவிக்கிரம
ஒரே தேசம் ஒரே ஏலவிற்பனையாளர்.
124 வருட மகோன்னத சேவையின் கொண்டாட்டம்
பிரதான அலுவலகமும் காட்சியறையும்
இல.24, டொரிங்டன் வீதி, கண்டி.
தொ.பே: 081 2227593,
பெக்ஸ்: 081 2224371
ஈமெயில்: schokmankandy@sltnet.lk
நகர கிளையும் காட்சியறையும்:
இல.290, ஹெவ்லொக் வீதி, கொழும்பு-05.
தொ.பே: 2502680, 2585408
பெக்ஸ்: 011-2588176
ஈமெயில்: schokman@samera1892.com
இணையதளம்: www.sandslanka.com
D.ads

## சீருடைக்கான பண வவுச்சர் அடுத்த மாதம் முதலாம் திகதி

பாடசாலை மாணவர்களின் சீருடைக்காக வழங்கப்படும் பண வவுச்சர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

கடந்த வருடத்தையும் விட இலகுவாக மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில் குறித்த வவுச்சர்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவா விதான தெரிவித்தார். 2017ஆம் ஆண்டில் புதிய பாடசாலைத் தவணை ஆம்பமாகும் போது, புதிய சீருடைகளுடன் பாட சாலைக்கு வரக்கூடிய வகையில் வவுச்சர் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரம் 1க்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களுக்கான பண வவுச்சர் அவர்கள் பாடசாலைகளுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் வழங்கப்படுமென்று செயலாளர் தெரிவித்தார். (ற)

## மரக் குற்றிகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக.18

கிளிநொச்சி அக்கராயன் குளப் பகுதியில் இருந்து அறிவியல் நகர் பகுதிக்கு கடத்தி வரப்பட்ட சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகள் கிளிநொச்சி பொலிஸாரால் கைப்பற்றப் பட்டன.



பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து நேற்று முன்தினம் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே மரக்குற்றிகளும், அவற்றை எடுத்து சென்ற கப் வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. குறித்த கப் வாகனத் தில் மரக்குற்றிகளைப் பாதுகாப்பாக எடுத்து செல்ல உதவிய மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப் பட்டது. மீட்கப்பட்ட மரக் குற்றிகளின் பெறுமதி 4 லட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி3)

பஸ் டிக்கட் வாங்க வரிசையில் காத்திருக்க வேண்டிய அவசியம் இப்போது இல்லை
எந்தவொரு நேரத்திலும் எந்தவொரு இடத்திலிருந்தும் Dialog மொபைலில்
444 க்கு அழைத்து பஸ் டிக்கட்டுக்களை முன்பதிவு செய்துக்கொள்ளுங்கள்
TRC/D/Promo/15/21

கட்டணங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது
இந்த சேவையின் மூலம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், அனுராதபுரம், கண்டி, காலி மற்றும் இன்னும் அதிகமான நகரங்களுக்கு பிரயாணிக்க பஸ் ஆசனங்களை முன்பதிவு செய்துக்கொள்ள முடியும்.
Dialog
எதிர்காலம் இன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும்

## பெண்கள் அபிவிருத்திக்கான யாழ். மாவட்ட இணைப்பாளர் உதயனி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.18



உலகின் முதல் பெண் பிரதமரையும், ஜனாதிபதியையும் உருவாக்கிய பெருமை கொண்ட இலங்கைப் பெண்கள் அரசியலில் பங்களிப்பது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த நிலைமை எதிர்காலத்தில் மாற்றப்பட வேண்டும்.

இவ்வாறு பெண்கள் அபிவிருத்திக்கான யாழ்.மாவட்ட இணைப்பாளர் உதயனி நவரத்தினம் தெரிவித்தார்.

அரசியலில் பெண்களின் பங்களிப்பு தொடர்பிலான கலந்துரையாடல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உதயனி நவரத்தினம் உரையாற்றினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியலில் ஈடுபடும் பெண்கள் தொடர்பில் சமூகத்தின் தவறான பார்வை, பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை குடும்பத் தலைவர்கள் விரும்பாமை, அரசியல் வன்முறைக் கலாசாரம், அரசியல் ஊழல்கள் போன்ற காரணிகளால் பெண்கள் அரசியலில் ஈடுபட முடியாத நிலை உள்ளது.

இலங்கைப் பெண்கள் எழுத்தறிவு வீதம், வாழ்க்கை எதிர்பார்ப்புக் காலம் மற்றும் ஆரோக்கியம் என்பவற்றில் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு இணையாக உள்ளனர். இலங்கைஆட்சி அமைப்பில் சகல மட்டங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. கடந்த 78 வருட காலப் பகுதியில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை ஆராய்ந்தால் அவர்களின் அரசியல் பிரநிதித்துவம் 6 வீதத்தைத் தாண்டாத தன்மையே காணப்படுகின்றது.

பெண்களை அரசியலில் ஈடுபட வைப்பதற்கு முதலில் பெண் அடிமைத்தனத்தை ஒழிக்க வேண்டும். பெண்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகளை சிறுவயதிலிருந்து வழங்க வேண்டும். அரசியலில் ஈடுபடும் பெண் வேட்பாளர்களைத் தூற்றுவதைத் தவிர்க்க வேண்டும்.

வாக்காளர்கள் என்ற ரீதியில் பெண்கள் அதிகமாகக் காணப்பட்டாலும், தற்காலத்திலும் அரசியல் பிரதிநிதித்துவத்தில் குறைவான தொகையினரே காணப்படுகின்றனர். இதனை மாற்ற வேண்டுமானால், எதிர்காலத்தில் சமூகம், அரசியல் கட்சிகள், பெண்கள் குழுக்கள் அமைப்புக்கள், சட்டங்கள் என அனைத்துத் தரப்பும் ஒருமித்துச் செயற்படவேண்டும் – என்றார்.

யாழ்.மாவடச் செயலர் நா.வேதநாயகன் உரையாற்றிய போது தெரிவித்ததாவது:

அரசியல் விடயத்தில் பெண்களின் பங்களிப்பு மிக அரிதாகவே காணப்படுகின்றது. திணைக்களங்களின் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு ஆண்களை விட அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. எதிர்காலத்தில் திணைக்களங்களில் ஆண்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் எனச் சொல்கின்ற நிலைமை கூட ஏற்படலாம். எனினும் உள்ளூராட்சி தேர்தலில் கூட பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

எதிர்காலத்தில் உள்ளூராட்சி தேர்தல்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறான கருத்தரங்குகள் நடைபெறுகின்றன. இது தொடர்பில் பெண்கள் விழிப்புணர்வைப் பெற்றுக் கொண்டு, எதிர்காலத்தில் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டும் என்பதே அனைவரதும் நோக்கமாகும் – என்றார்.

மூத்த ஆய்வாளர் சிறியானி விஜேசுந்தர உரையாற்றியபோது தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் படித்த பெண்கள் அதிகமாக உள்ளனர். வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் போர் காரணமாக அதிகளவான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளன. அவர்கள் தமது குடும்ப சூழ்நிலை காரணமாக அரசியலில் ஆர்வம் காட்ட முடியவில்லை. 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் உள்ளூராட்சி அதிகார சபைகள் சட்டத்துக்கு புதிதாக ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதில் நூற்றுக்கு இருபத்தைந்து வீதம் பெண் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட வேண்டும் என மாற்றப்பட்டது.

பெண்கள் எதிர் காலத்தில் நடைபெற வுள்ள தேர்தல்களில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு – என்றார். (ற-4,ரி)


**கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலை விடுதிகளின் அழுக்குத் துணிகளை சலவை செய்வதற்கான கேள்விகோரல் 2016/ 2017**

கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான தகைமை வாய்ந்த விடுதிகளின அழுககுத்துணிகளை சலவை செய்வதற்கான கேள்விதாரர்களை 10.11.2016 தொடக்கம் 09.11.2017 வரையான காலபகுதிக்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைக் கோருகின்றார்.

| தொ.இல | பெறுகை இல | கேள்விகள் | உத்தரவாத வைப்பு பணம் |
|---|---|---|---|
| 01 | L/2016/DGH KOC /01 | சலவை சேவை | 50,000.00 |

1. அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சலவை சேவை வழங்கியிருக்க வேண்டும்
2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலை அலுவலகத்தில் கிடைக்க பெறும் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,000.00 தைச் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 18.10.2016 தொடக்கம் 01.11.2016 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
3. சலவை சேவைக்கான மீளளிக்கப்படும் வைப்புத்தொகை 50000.00 செலுத்தப்பட வேண்டும். மீளளிக்கப்படும் வைப்புத்தொகை செலுத்தப்படாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
4. விலைக்கேள்விகள் 02.11.2016ம் திகதி மு.ப 11.30 மணிக்கு முன்பதாக இம் மாவட்ட வைத்தியசாலையின் கணக்கு கிளையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்பட வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.
5. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும், நடைமுறைகள் தொடர்பான படிவத்தினையும், விலைக்கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் மாவட்ட பொதுவைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல 0212285327 ) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
6. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

Dr.Mythily Sivananthan
தலைவர், பெறுகைகள்குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி.
(C/25922)(11.17,18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றமும் தண்டனையும்

யாழ்ப்பாணம், ஒக்.18

யாழ். நகரப் பகுதி வர்த்தக நிலையங்கள் மீது சுகாதாரப்பிரிவினர் மேற்கொண்ட திடீர் சோதனையில் தரமற்ற, காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்த 6 வர்த்தகர்கள் சிக்கினர்.

யாழ்.நகரப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆறு முகதாசன் தலைமையிலான குழுவே கடந்த சனிக்கிழமை சோதனைகளை மேற்கொண்டது. குறித்த வர்த்தகர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான சோதனைகள் தொடர்ந்து நடைபெறும் என்றும், சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

(ற-4.17)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.18

சட்டவிரோதமான முறையில்மணல்ஏற்றியஇளைஞருக்கு 54 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது யாழ். நீதிமன்று.

அனுமதிப் பத்திரம் இன்றி மணல் கொண்டு சென்றார் என்ற குற்றச்சாட்டில் கடந்த வியாழக்கிழமை அரியாலையில் குறித்த இளைஞரைக் கைது செய்த யாழ்ப்பாணப் பொலிஸார், டிராக்டரையும் கைப்பற்றினர்.

இது குறித்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இளைஞர் நீதிமன்றால் குற்றவாளியாக இனங்காணப்பட்டு தண்டம் விதிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட மணலை அரசுடமையாக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-103)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.18

யாழ். நகரில் பழுதடைந்த, காலாவதியான பொருள்களை விற்பனை செய்த 20 வர்த்தகர்களுக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது யாழ்.நீதிமன்று.

பொது சுகாதார பரிசோதகர்களால் இந்த வழக்குகள் யாழ்.நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

தரமற்ற உணவுகள், பழுதடைந்த உணவுகள், காலாவதியான உணவுகள் விற்பனைக்காக வைத்திருந்தமை, உணவுகளைத் திறந்து வைத்து வியாபாரம் செய்தமை போன்ற குற்றச்சாட்டுகள் வர்த்தகர்கள் மீது சுமத்தப்பட்டன. அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அவர்களுக்குத் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

(ற-4,ரி3)

## தனியாகச் சென்ற பெண்ணை தாக்கி, தாலிக்கொடி கொள்ளை

கொழும்பு, ஒக்.18
கோப்பாய்ப்பகுதியில்தனியாகச்சென்றபெண்ணை, மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தாக்கி, நீண்ட போராட்டத்தின் பின்னர் பெண்ணின் தாலிக் கொடியை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்என்றுபொலிஸில்முறையிடப்பட்டுள்ளது. சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்றது.
கோப்பாய் வைத்தியசாலையின் பின் வீதியில் பெண் ஒருவர் தனியாக ஆலயத்துக்குச் சென்றுள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், பெண்ணைத் தாக்கி, தாலிக் கொடியை அபகரித்துத் தப்பிச் செல்ல முயன்றனர். அவர்களிடம் இருந்து தாலிக் கொடியைப் பறித்துக் கொண்ட பெண் அவலக் குரல் எழுப்பினார். அச்சமடைந்த திருடர்கள் தப்பியோடினர்.
சிறிது தூரம் சென்ற திருடர்கள் பெண்ணின் அவலக் குரல் கேட்டு எவரும் வராததை அவதானித்துள்ளனர். மீண்டும் பெண்ணிடம் திரும்பி வந்து பெண்ணைத் தாக்கி தாலிக் கொடியை அபகரித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இதுகுறித்து பெண் கோப்பாய் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார். (ு-4,101)

# வன வளத் திணைக்கள பிடியில் வயல் நிலங்கள்

## வாழ்வாதாரம் இன்றி முல்லை. விவசாயிகள்

யாழ்ப்பாணம், ஒக்.18
முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்களின் வாழ்வாதாரமாக விளங்கிய 2 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் வன வளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்று பிரதேச செயலாளர்கள் தெரிவித்தனர்.
போர்ச் சூழலால் வடக்கில் பல கிராமங்களுக்கு மக்கள் செல்ல முடியாத நிலைமை காணப்பட்டது. அங்கிருந்த வயல் நிலங்கள், மரங்கள் அடர்ந்து, வளர்ந்து, காடுகள் போன்று காட்சியளிக்கின்றன. அதைக் காரணம் காட்டி வன வளத் திணைக் களத்தினர் காணிகளைக் கையகப் படுத்தியுள்ளனர் என்று சுட்டிக்காட்டப் படுகின்றது.
வன வளத் திணைக்களத்தின் வயல் நில அபகரிப்பால் தமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவிலும் பல வயல் நிலங்கள் இவ்வாறு வன வளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளன- என்று முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள் தெரிவித்தனர்.
கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஆண்டாள்குளத்தில் 800 ஏக்கர் நிலமும், முள்ளியவளையில் 40 ஏக்கர் நிலமும், கொக்குத்தொடுவாய் வடக்கில் 40 ஏக்கர் நிலமுமாக மொத்தம் 880 ஏக்கர் வயல் நிலம் வன வளத் திணைக்களத்தினர் வசம் உள்ளது.
மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அம்பலவைத்தகுளம், கொல்லவிளாங்குளம் என்பவற்றில் தலா 200 ஏக்கர் நிலம் - மொத்தமாக 400 ஏக்கர் வயல் நிலம் வன வளத் திணைக்களத்தினர் வசம் உள்ளது.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் ஒதியமலை, பெரியகுளம் என்பவற்றில் 450 ஏக்கர் வயல் நிலங்கள் வன வளத் திணைக்களத்தினர் வசம் உள்ளது.
துணுக்காய் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் குறிப்பிடக் கூடிய அளவு வயல் நிலங்களை வன வளத் திணைக்கத்தினர் கையகப்படுத்தியுள்ளனர் என்று பிரதேச செயலாளர்கள் தெரிவித்தனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயமே அங்குள்ளவர்களின் பிரதான வாழ்வாதாரத் தொழிலாக உள்ளது. போரால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டமாகக் காணப்படும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள், பல்வேறு வகையில் தற்போதும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். அவர்களின் காணிகள் தற்போதும் பாதுகாப்புத் தரப்பினராலும், வேறு தரப்பினராலும் கையகப்படுத்தப்பட்டுள்ளன.
பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப முயன்று வரும் நிலையில், வன வளத் திணைக்களத்தினர் வயல் நிலங்களைக் கையகப்படுத்தி, விவசாயத்துக்கு அனுமதிக்காதுள்ளனர் என்று-விவசாயிகள் கவலை தெரிவித்தனர். வயல் நிலங்களை மட்டுமல்லாது இரு குளங்களையும் வன வளத் திணைக்களத்தினர் அபகரித்தனர் என்றும்-அவர்கள் குற்றஞ்சாட்டினர். அவற்றை மக்கள் பாவனைக்கு விடுவிக்க வேண்டும் என்றும்-அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ு-101)

## முதிய தம்பதியை மிரட்டி பணம், நகை கொள்ளை

### பல்லவராயன்கட்டில் சம்பவம்

கிளிநொச்சி, ஒக்.18
முழங்காவில், பல்லவராயன்கட்டில் முதிய தம்பதிகள் வசிக்கும் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் அவர்களை அச்சுறுத்தி பணம், நகைகளைக் கொள்ளையடித்துத் தப்பினர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றது. 4 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பணம், 36 பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப் பட்டது.
முகத்தை துணியால் மறைத்துக் கட்டியவாறு வந்த கொள்ளையர்கள் தொலைபேசியை முதலில் அடித்து நொறுக்கினர். வீட்டிலிருந்த வயோதிபத் தம்பதியை கொட்டன்களால் அடித்து அச்சுறுத்திஉட்காரவைத்து விட்டு, கொள்ளையடித்தனர் என்று தெரிவிக்கப் படுகின்றது.
இது தொடர்பில் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.
முதியோர் தனித்திருக்கும் வீடுகளைக் குறிவைத்து கொள்ளையடிக்கும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன என்று சுட்டிக்காட்டப் படுகின்றது.
கடந்த சனிக்கிழமை இரவு ஜெயபுரம் தெற்கில் வயோதிப தம்பதி வசிக்கும் வீட்டில் அவர்களை அச்சுறுத்தி நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இது தொடர்பாக நாச்சிக்குடா பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.
கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி, முரசுமோட்டையில் வயோதிபத் தம்பதியினர் வசிக்கும் வீட்டில் கொள்ளையர்கள் கொட்டன்களால் அடிப்போம் என்று அச்சுறுத்தி 20 ஆயிரம் ரூபா பணத்தையும், ஐந்தரைப் பவுண் நகைகளையும் கொள்ளையடித்திருந்தனர். இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ு-4,35)

## வீதிச் சீரமைப்புத் தொடர்பான கருத்தறியும் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஒக்.18
ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள தச்சடம்பன் கிராம அலுவலர் பிரிவிலுள்ள வீதிகளைச் சீரமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.



சிற்றூர்வீதி, கரிப்பட்ட முறிப்பு முதல தமபனை, புதிய நகர், கற்சிலங்கு ஆகிய கிராமங்கள் ஊடாகக் கனகராயன் குளம் ஆறு வரை செல்லும் வீதி ஆகியவை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் சீரமைக் கப்படவுள்ளன. அது தொடர்பில் கிராம மக்களின் கருத்தறியவே கலந்துரையாடல் இடம்பெற்றது.
வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த வெளிக்கள உத்தியோகத்தர்களும், கிராம அலுவலரும் சந்திப்பில் கலந்துகொண்டனர். புதியநகரில் நடைபெற்ற கருத்தறியும் அமர்வில் மணவாளன் பட்டமுறிப்பு கிராம அலுவலர் செந்தில்நாதன், இந்துபுரம் கிராம அலுவலர் சிறிபாலினி ஆகியோரும் கலந்துகொண்டனர்.
வீதி சீரமைப்பில், மக்கள் முழு ஒத்துழைப்பை வழங்குவர் என்று தெரிவித்தனர். வீதிகளின் சீரமைப்பு எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ு-102)

## பாரிசவாத நோய் சிகிச்சைக்கு வந்தவர் சடலமாக மீட்பு

தென்மராட்சி, ஒக்.18
பாரிசவாத நோயைக் குணப்படுத்துவதற்காக லண்டனில் இருந்து வந்தவர், கயிற்றில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் கொடிகாமம், எருவனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
பாரிசவாதத்தை குணமாக்குவதற்கு குறித்த நபர் சொந்த ஊர் வந்துள்ளார். நோய் குணமடைந்து வந்துள்ளது. முழுமையாகக் குணமடைந்ததும் மீண்டும் லண்டன் செல்ல வேண்டும் என்று அவர் கூறியிருந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
சகோதரியின் வீட்டில் கட்டப்பட்டிருந்த தொட்டில் ஏணைக் கயிற்றில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டார் என்றும்-சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றபோது, அவர் உயிரிழந்ததமை உறுதிப் படுத்தப்பட்டது என்றும்-தெரிவிக்கப்பட்டது. (ு-9)

## இ.போ.சபை பஸ் தாக்குதலுடன் தனியார் பஸ் நடத்துநர் தொடர்பு

### வவுனியாப் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.18
இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீது நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடத்தப்பட்ட தாக்குதலுடன் தனியார் பஸ் நடத்துநர்கள் தொடர்பு பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணத்தில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா பயணித்த இ.போ.ச. பஸ் மீது தாண்டிக்குளத்தில் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் பஸ்ஸில் பயணித்த பயணிகளால் மடக்கிப் பிடிக்கப் பட்டார். அவர் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட ஆரம்ப விசாரணையின் பின்னரே பொலிஸார் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.
பிடிக்கப்பட்டவர் தனியார் பஸ் நடத்துநர் என்றும், தன்னுடன் இணைந்து தாக்குதல் நடத்தியவர்களின் விவரங்களை தெரிவித்தார் என்றும் - பொலிஸார் தெரிவித்தனர். ஏனையவர்களும் தனி யார் பஸ் சேவையைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.
மேலதிக விசாரணைகள் நடை பெறுகின்றன என்றும் - தாக்குதலுடன் தொடர்புடைய ஏனையோரைக் கைது செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ு-101)

## போதையில் சாரத்தியம்; இரு மாத கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், ஒக்.18
மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய 4 இளைஞர்களுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று தண்டப்பணமும், இரண்டு மாத கால கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்தது.
யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸாரும், கோப்பாய் போக்குவரத்துப் பிரிவு பொலிஸாரும் போதையில் சாரத்தியம் செய்த குற்றச்சாட்டில் கடந்த வாரம் இவர்களைக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் வேறு வேறு வழக்குகளில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் குற்றச்சாட்டை ஏற்றதை அடுத்து, 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. நால்வருக்கு 2 மாத கால கடூழியச் சிறைத் தண்டனை விதித்ததுடன் சாரதி அனுமதிப் பத்திரங்களை 12 மாதங்களுக்கு தடுத்து வைக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டது.
அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் என்பதால் சிறைத் தண்டனை விதிக்காது எச்சரித்து விடுவிக்கப் பட்டார். (ு-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நிலைமையை விரைந்து சரிப்படுத்த வேண்டும்

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் தெரிவித்திருந்த கருத்தின் எதிர்வினை உடனடியாக வெளித்தெரிய ஆரம்பித்திருக்கிறது. ஆணைக் குழுவின் தலைவர் டில்ருக்சி டயஸ் விக்கிரமசிங்க தனது பதவியிலிருந்து விலகியிருக்கிறார்.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு என்பவை அரசியல் நோக்கங்களுக்காகச் செயற்பட்டால், இந்த மூன்று நிறுவனங்கள் தொடர்பிலும் நான் கடுமையான தீர்மானங்களை எடுக்கவேண்டியிருக்கும் என்று ஜனாதிபதி கடந்த புதன்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு சுயாதீனமான ஓர் அமைப்பு. அதன் செயற்பாடுகளில் ஜனாதிபதி உட்பட எவரும் தலையீடு செய்ய முடியாது; கூடாது. அரசியல் தலையீடுகள் இடம்பெற்றால் சுயாதீனம் என்பது கேள்விக்குறியாகிவிடும். அதனால்தான் சுயாதீன ஆணைக்குழுக்களை முடக்கி அனைத்து அதிகாரங்களையும் 18ஆவது திருத்தத்தின் மூலம் தன தாக்கிக்கொண்டார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

அதனை எதிர்த்துத்தான் தற்போதைய அரசில் உள்ளவர்களும் ஜனாதிபதியும் 2015ஆம் ஆண்டில் தேர்தலைச் சந்தித்து அதில் வெற்றியும் பெற்றனர். அந்தத் தேர்தலில் அவர்கள் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையிலேயே அரசமைப்பில் 19ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்கள் மீள நியமிக்கப்பட்டன.

மகிந்த ராஜபக்ச சிதைத்துச் சின்னாபின்னமாக்கிய ஜனநாயகத்தை மீண்டும் நிலைநிறுத்தும் முயற்சியாகவே சுயாதீன ஆணைக்குழுக்கள் மீளவும் சுயாதீனமாக்கப்பட்டன. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு அவை அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இவற்றுக்கு மாறாக இப்போது ஜனாதிபதியின் உரையின் விளைவாக சுயாதீன ஆணைக்குழு ஒன்றின் தலைவர் தனது பதவியிலிருந்து விலகியிருக்கிறார். இதுவும் ஒருவிதத்தில் சுயாதீன ஆணைக்குழுக்களில் இடம்பெறும் அரசியல் தலையீட்டின் விளைவெனக் கொள்ளத்தக்கதே.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அரசியல் தலையீட்டுடன் இயங்கினால் அது தொடர்பில் தான் கடுமையான தீர்மானங்களை எடுக்கவேண்டியிருக்கும் என்று ஜனாதிபதி தெரிவித்ததன் விளைவாகவே ஆணைக்குழுவின் தலைவர் பதவி விலகியிருக்கிறார்.

இது புதிய நெருக்கடிகளைத் தோற்றுவித்திருக்கிறது. சுயாதீன ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அத்தோடு அதன் பெறுமதியையும் மதிப்பிறக்கம் செய்வதாகியிருக்கிறது. அவற்றின் மீதான மக்களின் நம்பிக்கையையும் சிதைக்கும் வகையில் அமைந்துள்ளது.

தனது பதவியில் தொடர்ந்திருந்து ஆணைக்குழு எந்தவொரு அரசியல் அழுத்தத்திற்குள்ளும் செயற்படவில்லை என்பதை அதன் தலைவரான டில்ருக்சி நிரூபித்திருக்கவேண்டும் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அவரது பதவி விலகல் இனிமேல் ஆணைக்குழுவின் தலைவராகப் பொறுப்பேற்பவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் ஓர் அரசியல் அழுத்தமாகவே நின்று நிலைக்கப்போகிறது.

அத்தகையதொரு நிலையில் ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மை பெரும் கேள்விக்குள்ளாகிவிடும்.

ஜனாதிபதி மைத்திரி தனது உரையின் மூலம் ஏற்படுத்திய இந்த இக்கட்டு நிலையை அவரே தீர்க்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது. அதற்கான முயற்சிகள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையேல் இந்த ஆட்சியின் மீதான நம்பிக்கையையும் மக்கள் இழக்கத் தொடங்கிவிடுவர். அது மகிந்த அணிக்கே சாதகமாகிவிடும்.

### தமிழகத்தின் அரசியல் தூணான ஜெயலலிதா நலமடைய

# தமிழ் மக்கள் பிரார்த்தனை

மு.ஈழத்தமிழ்மணி



ஜெயலலிதாவின் உண்மையான உடல் நிலை புரியாத புதிராகவே இருக்கின்றது. ஜெயலலிதா எத்தகைய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது ஜெயலலிதாவுக்குச் சிகிச்சையளித்து வருகின்ற ஒரு சில மருத்துவ நிபுணர்களுக்கும் சசிகலா குடும்பத்தினருக்கும் மட்டுமே தெரிந்த உண்மை

தமிழக முதல்வர் ஜெயலலிதா, எப்போது சுகமடைந்து வைத்திய சாலையை விட்டு வெளியேறுவார்? என்ற தமிழக மக்களது கேள்விக்கு மக்கள் நம்பக்கூடியவாறான திருப்திகரமான பதிலெதுவும் இதுவரை ஜெயலலிதா தரப்பினரால் வழங்கப்படவில்லை. அப்பலோ மருத்துவமனை வட்டாரம் வெளியிடுகின்ற அறிக்கைகளை மட்டும் வைத்தே, ஜெயலலிதாவின் உடல்நிலை பற்றி தமிழக மக்களால் கூட்டிக் கழித்துக் கணக்கிட முடிகின்றது. ஜெயலலிதாவின் தற்போதைய உடல் நிலை குறித்த விவரங்கள் எவையும் தமிழக மக்களுக்கு தமிழக அரசின் சார்பிலோ அல்லது கட்சி சார்பிலோ வெளியிடப்படவில்லை.

ஜெயலலிதாவின் உண்மையான உடல் நிலை புரியாத புதிராகவே இருக்கின்றது. ஜெயலலிதா எத்தகைய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது ஜெயலலிதாவுக்குச் சிகிச்சையளித்து வருகின்ற ஒரு சில மருத்துவ நிபுணர்களுக்கும் சசிகலா குடும்பத்தினருக்கும் மட்டுமே தெரிந்த உண்மை.

இந்த விடயம் அ.இ.அ.தி.மு.க தொண்டர்கள் மத்தியிலும், அமைச்சரவையிலும், குழப்பங்களை ஏற்படுத்தி வருவதையும் உணர முடிகின்றது.

முதலமைச்சர் ஜெயலலிதா, தமிழகத்திலுள்ள ஏழு கோடி மக்களுக்கும் உரித்துடையவர். தமிழ் நாடு மாநிலத்தின் தலைவியுமாவார். ஜெயலலிதாவின் உடல்நிலை குறித்து அவரைப் பார்வையிடுவதற்கு அப்பலோ மருத்துவ மனைக்குச் சென்ற புதிய கவர்னர் வித்தியாசாகராலும் இந்திய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர், உட்பட தமிழக அரசியல் கட்சிகளின் தலைவர்களாலும் அவரை நேரில் சந்திக்க இயலவில்லை.

ஜெயலலிதாவின் உற்ற நண்பியும், தோழியுமான சசிகலா குடும்பம், ஜெயலலிதாவின் சகல நலன்களையும் கவனித்து வருவதாகத் தெரிகின்றது. ஜெயலலிதாவின் உடல் நிலையில் முன்னேற்றமிருப்பதாகவும், செயற்கைச் சுவாசம் வழங்கப்படுவதாகவும் மட்டுமே அப்பலோ மருத்துவமனை வட்டாரம் தினமும் அறிவித்து வருகின்றது.

அப்பலோ மருத்துவமனை வட்டாரத்தின் தகவல்களின்படி 24 [illegible] மருத்துவ [illegible]யவர்களும் தீவிரமாக சிகிச்சை அளித்து வருவதாகவும், லண்டனிலிருந்து எந்த விசேட வைத்திய நிபுணர் மெடல் எய்ம்ஸ், மருத்துவ நிபுணர்கள் எல்லோரும் ஜெயலலிதாவுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகளை வழங்கி வருவதாகவும் தெரிய வருகின்றது.

**மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு ஏறக்குறைய ஒரு மாதகாலம் நிறைவடைகிறது**

கடந்த செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி உடல் நலக்குறைவு காரணமாக ஜெயலலிதா, தமிழ் நாடு, அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். சாதாரணமானதொரு சுகவீனமாக ஆரம்பத்தில் கூறப்பட்டாலும், தற்போது மூச்சுத்திணறலால் அவஸ்தைப்படுவதனால், செயற்கைச் சுவாசம் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில், அவரது உடல் நிலை குறித்து தமிழக மக்கள் அறிய ஆவலுறுவதை எவராலும் தவறாகக் கணிக்க இயலாது.

எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்துக்கு தமிழகம் எவ்வாறு கட்டுப்பட்டிருந்ததோ, அதேபோல் 'அம்மா' என்ற மூன்றெழுத்துக்கும், 'ஜெ' என்ற ஒரு வார்த்தைக்கும் ஏழு கோடி தமிழ் மக்கள் கட்டுப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். எப்போது அவர் சுகமடைந்து வருவார், மக்கள் மத்தியில் எப்போது தோன்றுவார் என்ற குரல்கள் தமிழகமெங்கும் ஒலிக்கின்றன. தமிழகத்தின் முதலமைச்சராக இரண்டாவது தடவையாகவும் பதவியேற்று, நான்கு மாதங்கள் கடந்த நிலையில், ஜெயலலிதாவின் இந்தத் திடீர்ச் சுகவீனம் தமிழக மக்களைப் பாதித்துள்ளது. கடந்த வருடம் ஊழல் சொத்துக் குவிப்பு வழக்கால் நீதிமன்றம் வழங்கிய தண்டனையை குறுகிய காலம் அனுபவித்ததும், அதிலிருந்து மீண்டு அமைதியான, தீவிரமான அரசியலில் ஈடுபட்டு மே மாதம் நடைபெற்ற தமிழக சட்ட சபைத் தேர்தலில் போட்டியிட்டு, மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது போன்றவை அவரது உறுதியான உழைப்புக்கும் தன்னம்பிக்கைக்கும் எடுத்துக்காட்டாகும். அதனால் பெரு வெற்றியை அவர் சாதித்திருந்தார்.

தமிழகத்தின் சட்டசபைத் தேர்தல்களின்போது தாம் வழங்கிய வாக்குறுதிகளில் பலவற்றை, மீண்டும் ஆட்சியேற்றதும் படிப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஒக்ரோபர் மாதம் நடைபெறவிருந்த தமிழகத்தின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தமது கட்சி, அமோக வெற்றியைப் பெற வேண்டும் என்ற இலட்சியத்துடன் ஜெயலலிதா தொண்டர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்.**
**இப்படிப்பட்ட சூழலில்தான் முதலமைச்சர் ஜெயலலிதா உடல் நலம் குன்றி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். உள்ளூராட்சித் தேர்தல்களில் அ.தி.மு.கவே நூற்றுக்கு நூறு வீதம் வெற்றி பெறவேண்டும் எனவும் ஜெயலலிதா முழக்கமிட்டிருந்தார். இந்த நேரத்தில் ஜெயலலிதா முழுமையாக சுகமடைய வேண்டி தமிழக மக்களால் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.**

படியாக செயற்படுத்துகின்ற நட வடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். தமிழகத்தில் பெண்களின் தலைவியாகவும், தாய்க்குத் தாயாகவும், உயர்ந்த நிலைக்கு சென்ற அவரது தற்போதைய உடல் நலக்குறைவு தமிழகத்தில் இன்று பெண்களைப் பெரிதும் பாதித்துள்ளது எனலாம். தமிழகத்தின் திராவிடக் கட்சிகள் இரண்டுமே 1967 ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தை ஆண்டு வந்திருக்கின்றன. பேரறிஞர் அண்ணாத்துரையும் புற்று நோய்க்குள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது, மக்களுக்கு அவரது சுகவீன செய்தி தெரிந்திருந்தது. பின்னர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக பதவியிலிருக்கையில் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவரது நோய் சம்பந்தமாக தமிழக மக்களால் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. எம்.ஜி.ஆருக்கு சிறுநீரகம் மாற்றப்பட்டது கூட அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போதைய முதல்வரான ஜெயலலிதா எந்த வகையான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிய தமிழக மக்கள் அவதிப்பட நேர்ந்துள்ளது.
பிரதமர் மோடி, நாட்டின் பிரதமராகவும், ஜெயலலிதாவுக்கு வேண்டியவராகவுமிருப்பதனால் ஜெயலலிதாவைப் பார்ப்பதற்கு அவர் அனுமதிக்கப்படலாம். அதற்குப் பின்னர் அப்பலோ மருத்துவமனையினரால் ஜெயலலிதாவின் உடல் நலக்குறைவு பற்றிய சகல விவரமும் வெளியிடப்படலாம்?
மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுவதூடாக தமிழகத்தின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவரும் பெண்மணியான ஜெயலலிதா, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 25 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசத்தை அனுபவித்து வருகின்ற முருகன், நளினி, சாந்தன் பேரறிவாளன் உட்பட ஏழுபேரினது விடுதலை பற்றியும் எந்நேரமும் கவனமெடுத்து வந்தவர்.

**உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் கட்சியை வெற்றிபெற வைக்கக் கடும் முயற்சி**

ஒக்ரோபர் மாதம் நடைபெறவிருந்த தமிழகத்தின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தமது கட்சி அமோக வெற்றியைப் பெறவேண்டும் என்ற இலட்சியத்துடன் ஜெயலலிதா தொண்டர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்.
இப்படிப்பட்ட சூழலில்தான் முதலமைச்சர் ஜெயலலிதா உடல் நலம் குன்றி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இந்தநேரத்தில் ஜெயலலிதா முழுமையாக சுகமடைய வேண்டி தமிழக மக்களால் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வரிசையில் புரட்சித்தலைவி ஜெயலலிதாவும் தமிழக அரசியலில் பெரும் தூணாகக் கொள்ளப்படுபவர். நான்காவது வரிசையிலுள்ள ஜெயலிலதா தமிழகத்தில் ஓர் இரும்புப் பெண்மணியாகவும், அம்மாவாகவும் இருக்கின்றார்.

# வடபகுதிக்கு வரும் அரச பஸ்களில் சிங்கள ஊழியர்களின் அடாவடி! பரிதவிக்கும் பயணிகள்

எது எப்படியோ, போர் முடிவுக்கு வந்த பின்னர் வடபகுதியில் பெரும்பாலான வீதிகள் செப்பனிடப்பட்டு அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளன. மக்கள் எந்த நேரத்திலும் பயணம் செய்யக் கூடிய வசதி காணப்படுகிறது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் அரச, தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.
ஆனால், இந்த பஸ்களில் பணியாற்றும் சிங்கள ஊழியர்கள் சிலரின் அடாவடித்தனமான செயல்களால் பயணிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.
*உதாரணத்திற்கு ஒரு சம்பவம்:*
கடந்த (14.10.2016) வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் டிப்போவிலிருந்து சரியாக மாலை 6.20 மணிக்கு கதிர்காமம் நோக்கிப் புறப்பட்ட பஸ் பளையைக் கடந்து பயணித்தது. இயக்கச்சியாக இருக்கவேண்டும் (இருட்டில் சரியாக இடம்தெரியவில்லை) பெருமளவான பயணிகள் முண்டியடித்துக்கொண்டு இறங்கினார்கள். அவ்வாறு இறங்கும் போது சாரதிக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த பயணப்பொதிகளில் (ட்ரவலிங் பாக்) ஒன்று தட்டுப்பட்டு உருண்டு கீழே வீதியில் விழுந்துவிட்டது. அப்போது உடனடியாக நடத்துநர் அதை எடுத்து பஸ்ஸக்குள் போட்டிருக்க வேண்டும். அவர் அதற்கு மாறாக உரத்த குரலில் பயணிகளைப் பார்த்து சிங்களத்தில் பயணப்பை ஒன்று கீழே விழுந்துவிட்டது... யார் முன்பக்கத்தில் பையை வைத்தீர்கள்? எத்தனை தடவை சொன்னாலும் விளங்காது... யாருடைய பை? யாருடைய பை எனக் கத்தினார். ஆனால் பயணிகளுக்கு சிங்களம் புரியாததால் எவருமே பதில் கூறவில்லை. அப்போது நடத்துநர் மீண்டும், சரி, பைக்கு சொந்தக்காரர் இல்லைத்தானே.... போகட்டும் பஸ்ஸை எடு எனக்கூறவும், சாரதி பஸ்ஸை எடுத்துவிட்டார்.
பஸ் கிட்டத்தட்ட 10 நிமிடங்கள் (அதிவேகத்தில்) பயணித்திருக்கும். பின்னால் இருந்து சன நெரிசலில் முண்டியடித்துக்கொண்டு வந்தார் பைக்குச் சொந்தக்காரர்.
அவரைப் பார்த்த நடத்துநர் பை உங்களுடையதா? நான் எத்தனை முறை கேட்டேன்... இப்போ ஒன்றும் செய்யமுடியாது... [illegible] விட்டது என்று ஏளனமாகக் கூற, சாரதி என்ன நினைத்தாரோ. பஸ்ஸை நிறுத்தி அவரை இறக்கிவிட்டுப் போய்விட்டார்கள். அவர் எங்கு போவதற்கு டிக்கட் எடுத்தாரோ தெரியாது. மிகுதிப்பணம் கொடுபடவும் இல்லை.
அவர் எங்கு செல்லவிருந்தார்?
அந்தப் பைக்குள் எவ்வளவு பெறுமதிமிக்க பொருட்கள் இருந்தன?
எதுவும் தெரியாது. அந்தப் பயணியின் பை கிடைத்ததா இல்லையா என்பது ஒருபுறம் இருக்க, அந்த இடத்தில் அந்தச் சாரதி மற்றும் நடத்துநரின் அலட்சியத்தையும் பொறுப்பற்ற செயலையும் இங்கு குறிப்பிட்டுக் கூறவேண்டும்.
பை யாருடையதாக இருந்தாலும், அது பஸ்ஸிலிருந்துதானே விழுந்தது. எனவே, அதை எடுத்து உள்ளே போட்டிருக்கலாம். உரிமையாளர் இல்லாவிட்டால் எங்காவது பொலிஸிலோ அல்லது டிப்போவிலோ ஒப்படைத்திருக்கலாம். அதை விடுத்து இவ்வாறு அடாவடித்தனமாக நடந்துகொண்டமைக்கு காரணம், இவர்களெல்லாம் தமிழர்கள் தானே என்ற இளக்காரமாக அல்லாது வேறு என்னவாக இருக்கமுடியும்?
மேலும், அந்த பஸ்ஸின் முன் ஆசனத்தில் சிங்களவர் ஒருவர், இரண்டுபேர் அமரும் ஆசனத்தைப் பிடித்து தலையணை போட்டுப்படுத்துக்கொண்டு, கால்களை தூக்கி வாசலில் வைத்துக்கொண்டு வருவதுடன், அடிக்கடி பயணிகளுக்கு உத்தரவு இடுவது போல் செயற்படுவதும் உண்டு. பஸ்ஸில் அவருக்கு என்ன பதவி என்பது தெரியாது. பயணிகள் பிள்ளைகளுடன் ஆசனமின்றி நின்றுகொண்டு பயணிக்கையில் அவர் இரு ஆசனங்களைப் பிடித்து படுத்துக்கொண்டு செல்வது எந்தவகையில் நியாயம்?
எனவே, அரச பஸ் ஊழியர்கள் நடந்துகொள்ளும் முறைதொடர்பில், வடமாகாண போக்குவரத்து அமைச்சு சம்பந்தப்பட்ட சபைகளுக்கு அறிவுறுத்தவேண்டும். அல்லாவிடின், இவ்வாறான செயற்பாடுகள் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்ற பதத்திலிருந்து சிறுபான்மை மக்களை விலகிச்செல்லவே தூண்டும் என்பதில் ஐயமில்லை.

**மாலதி ஜெயக்குமார், கிளிநொச்சி.**

[illegible] தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். [illegible] குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விபரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கத் தேர்தலை தீர்மானிக்கும் பெண்கள்

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் பகடைக் காய்களாகவும் பெண்கள் உள்ளனர்.

உலகமே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் அடுத்தமாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அமெரிக்காவின் இரு பெரும் கட்சிகளில் குடியரசுக் கட்சியின் தலைமை வேட்பாளராக டொனால்ட் ட்ரம்பும் ஜனநாயகக் கட்சியின் தலைமை வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் உள்ளனர். தேர்தல் பரப்புரைகள் ஒரு முனையில் சூடுபிடித்துள்ளது. மறுமுனையில் டொனால்ட் ட்ரம்பின் தோல்வி உறுதியாகிக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது.




கடந்த 2005 ஆம் ஆண்டு டொனால்ட் ட்ரம்ப் வானொலி நிகழ்ச்சியொன்றைத் தொகுத்து வழங்கியபோது பணமுடையராகவும், பிரபலமானவராகவும் இருந்தால் உலகில் எத்தகைய பெண்களையும் வலையில் வீழ்த்திவிடலாம் எனத் தெரிவித்திருந்தார். இவரது இந்தக் கருத்து ஜனநாயகக் கட்சியின் தேர்தல் முழக்கங்களில் பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. ட்ரம்பின் கருத்துக்கு எதிராக நாட்டின் ஒட்டுமொத்த பெண்களும் பெண்ணிய வாதிகளும் கிளர்ந்தெழச் செய்யப்பட்டுள்ளனர். அமெரிக்காவின் பல பகுதிகளில் ட்ரம்புக்கு எதிராக போராட்டங்கள் வெடித்தன. ஹிலாரிக்கான ஆதரவு இரு மடங்காக உயர்ந்துள்ளது.

பெண்கள் தொடர்பாக இவ்வாறான ஒரு கருத்தை வைத்திருக்கும் ட்ரம்ப், அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவானால் நாடு பெரும் பின்னடைவைச் சந்திக்கும். ஒட்டுமொத்தப் பெண்களும் பெண்ணிய வாதிகளும், பெண்களை மதிப்பவர்களும் ட்ரம்புக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று ஒபாமாவும், ஒபாமாவின் மனைவியான மிச்செல் ஒபாமாவும் பகிரங் கமாக அறிவித்துள்ளனர். அவர்களது இந்த அறிவிப்பு ட்ரம்ப் ஓரங்கட்டப்படபிரதான காரணங்களாக அமைந்துள்ளன.

அயல் நாடான மெக்சிக்கோவுக்கு எதிராக சுவர் எழுப்பப்படும் என்று தெரிவித்தமை, உரோமன் கத்தோலிக்கர்களின் தலைவரான பாப்பரசரை விமர்சித்தமை, அமெரிக்காவில் குடியேறி குடியுரிமை பெறாமலிருக்கும் அகதிகள் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவர் என்று தெரிவித்தமை, அமெரிக்கர்களின் பரம எதிரியான ரஷ்யாவையும் அதன் தலைவரான புடினையும் புகழ்ந்தமை ஆகியவையும் ட்ரம்ப்பின்னடைவைச் சந்திக்க ஏனைய பிரதான காரணங்களாக அமைந்துள்ளன.

ட்ரம்புக்கான வாய்ப்பு ஆரம்பத்தில் இருந்த போதிலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவர் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளார். தற்பொது அவர் ஜனாதிபதியாவதற்கான வாய்ப்புக் குறைவாக உள்ளது என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

"தேர்தல் முடிவுகளில் வெளிப்படைத்தன்மை இருக்காது. ஊழல் இடம்பெறும். மக்களே அதை ஏற்காதீர்கள்" என ட்ரம்ப் அண்மையில் தெரிவித்திருந்தார். அவரது இந்தக் கருத்து டரம்ப், தன் தோல்வியை உணர்ந்துள்ளார் எனக் கருதப்படுகிறது. (ம-ரி4)



## சீறிப் பாய்ந்தது ஷெங்ஸோ -II

சீனாவின் ஷெங்ஸோ என்ற விண்கலம் ஜிங் ஹாய்பிங் மற்றும் சென் டாங் ஆகிய இரண்டு விஞ்ஞானிகளுடன் நேற்று வெற்றிகரமாக விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

விண்வெளியில் நிரந்தரமான ஆய்வு நிலையத்தை நிறுவிடத் திட்டமிட்டுள்ள சீனா கடந்த 2013 ஆம் ஆண்டு டியாங்காங் - 1 என்ற ஆய்வு விண்கலத்தை விண்ணில் செலுத்தியது. இந்த விண்கலத்தில் சென்ற மூன்று சீன விஞ்ஞானிகள் 15 நாள்கள் விண்வெளியில் தங்கியிருந்து பல்வேறு கட்ட ஆராய்ச்சிகளை நடத்தி முடித்து, வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பினர்.

ஜிகுவான் மாகாணத்தில் உள்ள கோபி பாலைவனம் பகுதியில் இருந்து டியாங்காங் - 2 என்ற விண்கலத்தை கடந்த மாதம் 15 ஆம் திகதி சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

இதனையடுத்து, ஷெங்ஸோ – II என்ற விண்கலத்தில் இரண்டு விஞ்ஞானிகளை விண்வெளிக்கு அனுப்பி டியாங்காங் -2 விண்கலத்துடன் இணைத்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள சீனா பரிசீலனை செய்தது. இதன்படி நேற்று அதிகாலை 5 மணியளவில் ஷெங்ஸோ – II விண்ணுக்கு வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது. எதிர்வரும் 2022 ஆம் ஆண்டுக்குள் விண்வெளியில் நிரந்தரமான ஆய்வு நிலையத்தை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)

# பிரேசில் சிறையில் கலவரம் 25 பேர் கொடூரக் கொலை

பிரேசிலியா, ஒக். 18

பிரேசில் சிறைச்சாலையில் இரு தரப்பினருக்கு நடுவில் மோதல்கள் இடம்பெற்றதில் 25 சிறைக் கைதிகள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர் என உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

றொராமியா மாநிலத்தில் அமைந்த சிறைச்சாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. குறித்த சிறைச்சாலையில் அதிக எண்ணிக்கையில் கைதிகள் சிறைப்பட்டிருந்தனர். இந்த நிலையில் இரு தரப்பினருக்கிடையில் இடம்பெற்ற மோதலில் 25 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 7 பேர் கழுத்து அறுக்கப்பட்டும், 6 பேர் எரியூட்டப்பட்டும் கொல்லப்பட்டனர்.

வெளிநபர்கள் சந்திப்பு நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட வெளி நபர்களை பிணைக்கைதிகளாகவைத்து இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இறுதியில் பொலிஸாரின் நடவடிக்கை மூலம் மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட் டனர். 740 பேர் மட்டுமே தங்கக்கூடிய சிறையில் ஆயிரத்து 400 பேர் தங்க வைக்கப்பட்டமையே கலவரத்துக்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது. உலகில் அதிக சிறைக் கைதிகளைக் கொண்ட நாடுகளில் 6 லட்சம் கைதிகளுடன் பிரேசில் 4 ஆவது இடத்தை வகித்து வருகின்றது. (ம-ரி4)



## 4,550 கிலோ போதைப்பொருளை அழித்தது ஆப்கான்

பல்வேறு வகையான 4 ஆயிரத்து 550 கிலோ போதைப் பொருளை வெடி வைத்து அழித்தது ஆப்கானிஸ்தான். ஒரு பக்கம் போதைப் பொருள் உற்பத்தி மற்றும் கடத்தலை தடுக்க அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்தாலும், மறுமுனையில் அங்கு கடத்தல்கள் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. கடந்த ஆண்டு உலக அளவில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களில் 80 சதவீதம் ஆப்கானிஸ்தானிலிருந்து கொண்டுசெல்லப் பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் அந்த நாட்டின் இந்த நடவடிக்கை பன்னாடுகளாலும் வரவேற்கப் பட்டுள்ளது. எமதுநாட்டில் போதைப் பொருள்களை கட்டுப்படுத்தும் விதமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. போதைப் பொருள் கடத்தலை தடுப்பதற்கான அனைத்து வழிகளையும் நாங்கள் கண்டறிந்துள்ளோம் என ஆப்கானிஸ்தான் தெரிவித்தது. (ம-ரி4)

# ஜெயாவின் உடல்நிலையில் பெரும் முன்

## அப்பல்லோ அறிக்கை

அப்பல்லோ மருத்துவமனையில் நீண்ட நாள்களாக சிகிச்சை பெற்றுவரும் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடல் நிலையில் சொல்லிக்கொள்ளும் படியான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என அப்பல்லோ மருத்துவமனை அறிக்கை சமர்ப்பித்தது.

உடல்நலக் குறைவால் கடந்த மாதம் 22 ஆம் திகதி சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் முதலமைச்சர் ஜெயலலிதா சேர்க்கப்பட்டார். அவர் எந்த வகை நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பது தொடர்பாக ஆரம்பத்தில் அறிவிக்கப்படவில்லை. ஆனால் பன்னாட்டு மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது.



இதனால் மு
தமிழ்நாட்டில்
ஜெயாவின் உ
மருத்துவமன
பித்து வந்த
மாலை வழங்
உரையாட அ
பட்டது. தனச்
களுக்கு நல்
அவர்களும்
தொடர்பாக
பல்லோ மேலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறப்பட்டது ஈராக் பெரும் படை; மோசூலைக் கைப்பற்றுவதற்காக

பக்தாத், ஒக். 18
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து மோசூலைக் கைப்பற்றுவதற்காக புறப்பட்டது ஈராக்கின் பெரும் படை.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடாக ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரியா இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு அறிவித்து அங்கு தனது கொடூரத்தனமான ஆட்சியை அரங்கேற்றி வருகிறது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரின் பலமாகவும் தலைமையகமாகவும் ஈராக்கின் மோசூல் நகரமே உள்ளது. இந்த நிலையில் அதை மீட்க 30 ஆயிரம் சிப்பாய்களை உள்ளடக்கிய ஈராக் இராணுவப்படை நேற்று தனது தாக்குதலை ஆரம்பித்தது.
2003 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஈராக் இராணுவத்தின் மிகப்பெரும் நடவடிக்கையாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது. அண்மையில் குவயாராப் பகுதியை இராணுவத்தினர் ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து கைப்பற்றினர். இதன் தொடர்ச்சியாக மோசூலைக் கைப்பற்றும் நோக்கில் இந்தத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. கூட்டுப்படையும் தனது தாக்குதலை ஆரம்பித்துள்ளது.
மோசூல் நகரில் 6 லட்சம் குடியிருப்புகள் உள்ளன. அவர்களைத் தமது பாதுகாப்புக் கேடயமாகப் பயன்படுத்தி, அவர்களை வைத்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் தமது இருப்பைத் தக்கவைத்துள்ளனர்.
இதனால் ஈராக் இராணுவம் மக்களைப் பாதுகாக்கும் அதேநேரம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைக் கொன்று குவிக்கவேண்டிய இருமுனைப் போரில் ஈடுபட வேண்டிய அவசியம் உள்ளது.
மோசூல் நகர மக்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை தனது கவலையைத் தெரிவித்தது. இது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இறுதித் தருணம். மிகவும் ஆபத்தான போர் என அமெரிக்கா தெரிவித்தது. (ம-ரி4)



*மியன்மாரில்*

# 175 தொன் எடையுள்ள இரத்தினக்கல் கண்டெடுப்பு



நைப்பிடௌ, ஒக். 18
மியன்மாரில் 175 தொன் எடையுள்ள மிகப்பெரிய பச்சை இரத்தினக்கல் கண்டெடுக்கப்பட்டது.
பச்சை இரத்தினக் கல்லுக்கு மியன்மார் பெயர் போனது. நாட்டின் பாதிப் பிரதேசங்களில் பச்சை இரத்தினக் கல் சுரங்கங்கள் உள்ளன. இந்த நிலையில் 4.3 மீற்றர் உயரமும், 5.8 மீற்றர் நீளமுடைய இந்தக் கல் 170 மில்லியன் டொலர் பெறுமதி உடையதாகும். கச்சின் மாநிலத்திலேயே இந்தக் கல் கண்டுபிடிக்கப்பட்டது. (ம-ரி4)

# பாகிஸ்தானில் பஸ் விபத்து 30 பேர் சாவு: பலர் காயம்

லாகூர், ஒக்.18
பாகிஸ்தானில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 30 பேர் சாவடைந்தனர். பலர் காயமடைந்தனர்.
ரகிம் யார்கான் எனும் பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றது. பயணிகளை ஏற்றி வந்த பஸ்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. 30 பேர் உயிரிழந்தனர். 30 பேர் படுகாயமடைந்தனர். இதனால் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.
மோசமான சாலையே விபத்துக்குக் காரணம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார். (ம-ரி4)

# நடுங்கியது நியூகினியா

பப்புவா நியூ கினியா கடலோரப் பகுதியில் நேற்று 6.9 ரிச்டர் அளவிலான பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. தீவின் வடக்கு கடலோரப் பகுதியையொட்டி, கடலுக்கு அடியில் சுமார் 35 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.9 ஆக பதிவாகியது. சுனாமி எச்சரிக்கை ஏதும் விடப்படவில்லை. (ம-ரி4)

# ...னேற்றம்

...தல்வரின் உடல்நிலை குறித்து ... பதற்றநிலை ஏற்பட்டது.
...டல்நிலை தொடர்பாக அப்பல்லோ ...ன அவ்வப்போது அறிக்கை சமர்ப் ...து. இறுதியாக நேற்றுமுன்தினம் ...கப்பட்ட அறிக்கையின்படி, ஜெயா ...ஆரம்பித்துள்ளார் என குறிப்பிடப் ...கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் ...றியைத் தெரிவித்தார் எனவும் ...அவருக்கு வழங்கப்படும் சிகிச்சை ...விளக்கமளித்தார்கள் எனவும் அப் ...லும் குறிப்பிட்டது. (ம)



பன்னாட்டு தற்காப்புக் கலைத் திருவிழா சீனாவின் ஹெனான் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பல நாடுகளிலும் இருந்து வந்திருந்த தற்காப்புக் கலை வீரர்கள் இந்த போட்டியில் பங்குபற்றினர். தற்காப்புக் கலையின் பிறப்பிடமான சாகுவான் மடாலயத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்ரோபர் மாத




# ராசி பலன்

## கும்பம்

கேட்பவர்களுக்குக் கொடுத்து உதவும் கும்பராசிக்காரர்களே 24ஆம் திகதி வரை செவ்வாய் லாப வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால் மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களை செய்து முடிப்பீர்கள்.

அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். சகோதரங்கள் மனம் விட்டு பேசுவார்கள். எதிர்பார்த்த விலைக்கு பழைய மனையை விற்றுப் புது மனை வாங்குவீர்கள். ராசிநாதன் சனிபகவான் சாதகமாக இருப்பதால், புது வேலை அமையும். வேற்றுமொழி, மாற்று மதத்தவர்களால் உ தவிகள் உ ண்டு.

வெளி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். புதனும், சுக்கிரனும் சாதகமாக இருப்பதால் பணவரவு திருப்திகரமாக இருக்கும். அடைவிலிருந்த நகையை மீட்க வழி கிடைக்கும். பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். சொந்த-பந்தங்கள் மதிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். ராகு, கேது மற்றும் குரு உங்களுக்கு சாதகமாக இல்லாததால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச் சுமையும், பணப்பற்றாக் குறையும் வந்துப் போகும்.

உங்களின் ஆலோசனைகளை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். பணவரவு உண்டு. பூர்வீகச் சொத்தில் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்துக் கொள்வார்கள். சின்ன இடமாவது வாங்க வேண்டுமென நினைப்பீர்கள். வெளியூர்ப் பயணங்கள் செல்ல திட்டமிடுவீர்கள். சகோதரிக்குத் திருமணம் முடியும். சூரியன் சாதகமாக இல்லாததால் மன இறுக்கம், பெண்கள் சம்பந்தமான நோய்கள் வந்து செல்லும். அரச காரியங்கள் தாமதமாக முடியும். வழக்கால் நெருக்கடிகள் வந்து நீங்கும். குரு 8 இல் மறைந்திருப்பதால் உங்களைப் பற்றிய விமர்சனங்கள் அதிகமாகும்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட இழப்புக்கள், ஏமாற்றங்களை நினைத்து அவ்வப்போது பெருமூச்சுவிடுவீர்கள். சளித் தொந்தரவும், தோலில் நமைச்சலும் வந்து நீங்கும். வழக்கில் தீர்ப்பு தள்ளிப் போகும். திடீர் பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். அத்தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். மனைவிவழி உறவினர்களுடன் மனஸ்தாபங்கள் ஏற்படும்.

**பெண்களுக்கு**

உங்களின் புது முயற்சிகளை பெற்றோர் ஆதரிப்பார்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். வேலையாள்கள் அடிக்கடி விடுப்பில் செல்வார்கள். உத்யோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். அலுவலக சூட்சுமங்கள் அத்துபடியாகும். சக ஊழியர்கள் உங்களைப் பற்றி விமர்சித்தாலும் அனுசரித்துப் போங்கள். விட்டுக் கொடுத்து இலக்கை எட்டிப் பிடிக்கும் மாதம் இது.

**நாளை**

ஐப்பசி-03
புதன்கிழமை -19.10.2016
திதி: சதுர்த்தி பி.இ. 01.17
நட்சத்திரம்: கார்த்திகை மு.ப.07.46
ராகுகாலம்: 12.02-01.32 வரை
சுபநேரம்:04.32-06.
சங்கடஹர சதுர்த்தி

# பொலிஸார் மனம் வைத்தால் குற்றச் செயல்கள் குறைவடையும்

வடக்கில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த ஏராளமான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். புதிய பொலிஸ் அணியினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவென நியமிக்கப்பட்டுள்ளனர். அவசர பொலிஸ் பிரிவு நியமிப்பு, பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம்- இவ்வாறு பல செய்திகள் நாளாந்தம் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. இருந்தும் இன்றும் வாள் வெட்டுக்களும், கஞ்சாக் கடத்தல்களும், கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. அப்போது இந்தப் பொலிஸாருடைய செயற்பாடுகள்தான் என்ன? பொலிஸ் அதிகாரிகளுடைய கருத்துக்கள் வெறும் பத்திரிகைச் செய்திகள்தானா? இந்தச் சம்பவங்களுக்கு விமோசனமே கிடையாதா? போன்ற பல கேள்விகள் மக்கள் மத்தியில் எழத்தான் செய்கின்றன. மேற்கண்டவாறு நியமிக்கப்பட்ட பொலிஸாருடைய முக்கிய நோக்கம்- குற்றவாளிகளைப் பிடிப்பதாகவோ அவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதாகவோ இருப்பதில்லை. மாறாக அப்பாவி மக்களைப் பீதியில் ஆழ்த்துவதும், அப்பாவிகளைப் பிடித்து அடித்து பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தித் தண்டனைகளை வழங்குவதுமாகவே உள்ளது. இதை எவராலும் மறுக்க முடியாது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நகரப்பகுதியில் வாள் வெட்டுச்சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இந்த வாள் வெட்டுச் சம்பவத்தில் 3 பேர் படுகாயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் இடம்பெற்ற அடுத்த நிமிடமே, யாழ்ப்பாணப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். ஒரு மணித்தியாலத்தினுள் பல தடவைகள் பொலிஸாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இருந்தும் பொலிஸாருடைய வருகை தாமதித்திருந்தது. இவ்வாறு ஆமை போன்று பொறுப்பில்லாது செயற்படும் பொலிஸாரினால் எந்தக் காலத்தில் குற்றச் செயல்களைத் தடுக்க முடியும்? யாழ். போதனா வைத்திய சாலையில் காயமடைந்தவர்களை விசாரணை செய்துள்ளோம். அரைமணி நேரத்தில் வருவோம் எனப் பொலிஸார் கூறியுள்ளனர். அவர்கள் சம்பவ இடத்துக்கு வருகைதந்து, விரைந்து செயற்பட்டிருந்தால் அந்தக் குற்றவாளிகளைப் பிடித்திருக்கலாம் என்பதே சம்பவ இடத்தில் நின்றவர்களுடைய கருத்தாகும். மக்களே! இவ்வாறு சிந்திக்கும்போது பொலிஸாருடைய இந்த அசமந்தப் போக்கு அந்த மக்களை ஏமாற்றும் செயலாகவே அமைந்துள்ளது. ஒன்று, பொலிஸாருக்கும் குறித்த கும்பலுக்கும் தொடர்புகள் பேணப்பட்டிருக்க வேண்டும். மற்றது பொலிஸார் அசமந்தப் போக்கில் இருந்திருக்க வேண்டும். இந்த இரண்டுமே பொலிஸாரிடத்தில் மக்களுக்கும் நம்பிக்கையை இழப்பதாக அமைகின்றன.

பெரிய குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் பொலிஸாரிடம் இருந்து, எப்படியும் தப்பித்து விடுகின்றனர். ஆனால், அப்பாவிகள் பொலிஸாரால் அநியாயமாக பழிவாங்கப்படுகின்றனர். இதுதான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அண்மையில் கிளிநொச்சியில் ஓர் இளைஞனை குருதி வெளியேறும் அளவுக்குப் பொலிஸார் இரும்புச் சங்கிலியால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர். அந்த இளைஞன் பொலிஸாருக்குக் கிடைத்த அவல் ஆகையால், அவனை மென்று துப்பிவிட்டனர். பெரிய குற்றவாளிகள் அவ்வாறு அல்ல என்பதால் அவர்கள் தப்பவைக்கப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களிலும் உள்ள பொலிஸார் தவறாக நடந்து கொண்டு, குற்றவாளிகளைக் காப்பாற்றுவதாகவும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. முகமன் பார்த்துச் செயற்படுதல், வேண்டப் பட்ட நபரைக் காப்பாற்றுவதற்காக அப்பாவிகளைப் பலிக் கடாவாக்குதல் போன்ற செயற்பாடுகளும் தீவிரமாக இடம்பெறுகின்றன. எனவே பொலிஸார் மீது இதுவரை மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வில்லை, இதுவே உண்மை. இப்போது ஏராளமான தமிழ்ப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எமது இனத்தைச் சார்ந்தவர்கள் எமக்கு உறுதுணையாக இருப்பர் என்று எண்ணியிருந்தோம். அதுவும் மறானதாகவே உள்ளது. ஒருரிரு பொலிஸாரைத் தவிர, ஏனைய தமிழ்ப் பொலிஸார் பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த பொலிஸாருடன் கூட்டுச்சேர்ந்து தமிழ் தெரிந்திருந்தும் சிங்களத்தில் உரையாடுவதைப் பெருமையாக நினைக்கின்றனர்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா.பாலாஜினி

# வாழும் வரை வாசிப்போம்

ஒக்ரோபர் மாதம் முழுவதுமே தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. எது ஒன்று நடைமுறையில் இல்லையோ, அதற்குத் திரும்பப் புத்துயிர் கொடுப்பதற்கே அதற்குரிய வாரம் கொண்டாடப்படுகிறது. வாசிப்பும் இன்று எம்மை விட்டு வெகு தொலைவுக்குப் போய்விட்டது. அதனாலேயே வாசிப்பு மாதமும் அனுஷ்டிக்கப்படுகின்றது. வாசிப்பது என்றவுடன் நாம் தினமும் இணையத்தளங்களில் வாசிக்கின்றோம் தானே எனத் தவறாக எண்ணி விடாதீர்கள். இங்கு வாசிப்பு என்பது, புத்தகங்கள் பத்திரிகைகள் போன்றவற்றைப் படிக்கின்ற சிறந்த வாசிப்பு முறையையே எடுத்துக்கூறுகின்றது. இணையத்தளங்களில் எவ்வளவு தான் வாசித்தாலும் புத்தகங்களை வாசிக்க வருவது போன்ற பூரணமான அறிவை ஒருபோதுமே பெற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் புத்தகங்கள்தான் அனுபவ அறிவையும் சேர்த்துத் தரக்கூடியவை. இந்த வாசிப்புப் பழக்கமானது சிறுவயதில் இருந்தே பழக்கத்துக்கு கொண்டு வரவேண்டிய ஒன்றாகும். இதற்காகத்தான் பாடசாலைகளில் சிறுவயது முதலே மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை கொண்டு வருவதற்கான முயற்சி ஆரம்ப காலத்தில் இருந்தே எடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பான வாசிப்புப் போட்டிகள் கூட சிறுவர்களுக்கான ஆங்கில தினப்போட்டி, தமிழ்த்தினப் போட்டி ஆகியவற்றில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

என்னதான் இவை முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் இன்றைய காலகட்டத்தில் வாசிப்புப் பழக்கமானது சிறுவர் இளைஞர், முதியோர் என வயது வேறுபாடின்றி எல்லாப் பருவத்தினரிடையேயும் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இல்லை என்று கூடச் சொல்லிவிடலாம். மாணவர்கள் பரீட்சைக் காலப்பகுதியிலாவது சிறிது வாசிப்பார்கள். ஆனால் மற்றவர்களோ கொஞ்சமேனும் வாசிப்பதேயில்லை. இது மிகுந்த கவலைக்குரிய விடயமென்பதை எவராலும் மறுத்துவிடவே முடியாது. இதற்குக் காரணம் நவீன தொழிநுட்பங்களின் பயன்பாடு தான். நாம் அளவுக்கதிகமாக அவற்றிலே மூழ்கிப் போய் வீணாக எம் வாழ்நாள்களை கழித்துக் கொண்டிருக்கின்றோம். நல்ல நண்பர்களாகிய புத்தகங்கள் அருகிலே இருக்க அவற்றைக் கண்டு கொள்ளாது பயனற்ற வாழ்க்கை வாழ்கின்றோம்.

இன்று ஏராளமான புத்தகங்கள் வாசிப்பதற்காகக் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால் வாசிப்பதற்குத்தான் எவருமே இல்லை. உண்மையிலேயே மனித சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் புத்தகங்களை விட நல்ல நண்பர்கள் இந்த உலகத்தில் இல்லை என்பது தான். ஒவ்வொரு புத்தகத்தின் இதழ்களும் எமக்கு புதிய ஒரு வாழ்க்கையையும் தத்துவத்தையும் கற்றுத்தருகின்றன. அப்துல்கலாம், காந்தி முதலிய அனைத்துப் பெரியவர்களும் இந்தப் புத்தகங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தமது அனுபவங்களை எமக்குப் பாடமாகச் சொல்கின்றார்கள்.

இன்று எத்தனையோ பேர் போட்டி போட்டுக் கொண்டு கவிதை நூல்களையும் சிறுகதைத் தொகுதிகளையும் வேறு பல விடயங்களையும் நூல்களாக்கி வெளியிடுகின்றார்கள். அந்த நூல்களுக்காக பலர் பாராட்டுக்களையும், பரிசுகளையும் வழங்குகின்றார்கள். 'நூல்' வெளியீட்டையும் பெரிய கோலாகலமாக மேற்கொள்கின்றார்கள். ஆனால் அந்தப் புத்தகத்தின் முன்பக்கத்தையும் பின் பக்கத்தையும் மட்டுமே பார்த்துவிட்டு வைத்து விடுகின்றார்கள்.. அந்தப் புத்தகத்தினுடைய முதற் பக்கத்தையாவது ஆழமாகக் கருத்தூன்றி வாசிக்கின்றார்களா? என்றால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வாசிக்காது வெறுமனே புகழுக்காக மட்டும் புத்தகங்களை அச்சடிப்பதால் என்ன பயன்தான் ஏற்படப்போகின்றது. சிலர் மேடைப் பேச்சுக்களிலும், இணையங்களிலும் வாசிப்புப் பழக்கத்தை வளர்க்க வேண்டும் என்று கருத்துக்களை வெளியிடுகின்றார்கள். இது மிகத் தவறு. செயற்பாட்டு ரீதியாக வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட சில வருடங்களுக்கு முன்னதாக காலையில் எழுந்ததும் பத்திரிகையை வாசித்த பின்னரே பலர் மற்றைய காரியங்களைச் செய்ய முனைவார்கள். ஆனால் அந்தப் பழக்கம் இன்று ஒரு சிலரிடமே, அதிலும் குறிப்பாக வயது வந்தவர்களிடம் மட்டும் தான் காணப்படுகின்றது. பத்திரிகைகளும் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. இன்று பத்திரிகைகளில் வெளிவருகின்ற செய்திகள்தான் நாளை வரலாறாகப் பதியப்படப் போகின்றன.

இன்று இவ்வாறான வாசிப்புப் பழக்கமானது மக்களிடையே அருகிச் செல்வதனால் தான் பல சமூக கலாசாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. புத்தகங்கள் புரிந்துணர்வை வளர்க்கின்றன. தன்னம்பிக்கையைத் தருகின்றன. மேலும் மேலும் வாழ்வதற்கான வழிவகைகளை எடுத்துச் சொல்கின் றன. வாசிப்பதை மறந்தமையால் தான் இன்று மனித வாழ்வு தன்னம்பிக்கை, துணிவு, ஆழ்ந்த சிந்தனை எதுவுமே இன்றி படுகுழிக்குள் போய்க் கொண்டிருக்கின்றது. 'வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில்' என்று ஒரு கவிஞர் கூறியது போல நன்றாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கான வழிவகைகளை இந்த நூல்கள் எமக்குத் தருகின்றன.

எனவே வாசிப்புப் பழக்கத்தை மீண்டும் துளிர்க்கச் செய்ய வேண்டுமாயின் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு நல்ல மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டுமாயின் அதனை ஒரு புதிய தலைமுறையில் இருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். புதிய தலைமுறை என்று குறிப்பிடப்படுபவர்கள் மாணவர்களே.

எனவே மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்கு அவர்களின் குடும்பத்தினர் மட்டுமல்லாது ஆசிரியர்கள், பெரியவர்கள் எனச் சகலரும் பங்களிப்புச் செய்ய வேண்டும். வாசிப்பின் முக்கியத்துவத்தை விளக்கிச் சொல்லக்கூடிய விழிப்புணர்வு நாடகங்களை நடத்துதல் வேண்டும், பேரணிகளைச் செயற்படுத்தல் வேண்டும்.

இவ்வாறு எல்லோருமாக ஒன்று சேர்ந்து முயற்சித்தால் மட்டுமே வாசிப்புப் பழக்கத்தை மீண்டும் ஏற்படுத்த முடியும். வாசிப்பதற்கு வயதோ, காலமோ கிடையாது. எந்த வயதிலும் வாசிக்க முடியும். வாசிக்க வாசிக்க எமது ஆயுள் கூடிக் கொண்டே செல்லும். படுக்கையில் இருக்கின்ற ஒருவரால் கூட இறுதி நொடி வரை வாசிக்க முடியும். எப்போதுமே எவராலும் மறுக்க முடி யாத அரிய கருவூலங்கள் இந்த நண்பர்களே. எனவே வாழும் வரை வாசித்து நல்ல பயனைப் பெறுவோமாக.

**இணையத்தளங்களில் எவ்வளவு தான் வாசித்தாலும் புத்தகங்களை வாசிக்க வருவது போன்ற பூரணமான அறிவை ஒருபோதுமே பெற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் புத்தகங்கள் தான் அனுபவ அறிவையும் சேர்த்து தரக்கூடியவை. இந்த வாசிப்புப் பழக்கமானது சிறுவயதில் இருந்தே பழக்கத்துக்கு கொண்டு வரவேண்டிய ஒன்றாகும். இதற்காகத் தான் பாடசாலைகளில் சிறுவயது முதலே மாணவர் களிடையே வாசிப்புப் பழக்கத்தை கொண்டு வருவதற்கான முயற்சி ஆரம்ப காலத்தில் இருந்தே எடுக்கப்பட்டு வருகின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் மாறிய வேலாயுதம்

திருவையாறு என்ற ஊரிலே அருணாசலம் என்பவன் வாழ்ந்து வந்தான்.பரம ஏழையான அவன். மிகுந்த இறை நம்பிக்கையும் பக்தியும் கொண்டவன். வாழ்க்கையில் நிகழ்கின்ற இன்பமாக இருந்தாலும் சரி துன்பமாக இருந்தாலும் சரி அவை அனைத்தும் கடவுளின் செயல் என்று சொல்பவன். இந்த நம்பிக்கையின் பற்றுதல் காரணமாக எதைப் பற்றியும் அவன் கவலை கொண்டதில்லை. இறையருள் இன்றி எதுவும் சாத்தியமில்லை என்ற கொள்கையை ஏற்றிருந்தான். அதேசமயம் அவ்வூரிலேயே வேலாயுதம் என்பவனும் வாழ்ந்து வந்தான்



அவன். அருணாசலத்துக்கு நேர் எதிரான கருத்தும் குணமும் உடையவன். கடவுளே இல்லை என்று சொல்லும் கொள்கையுடையவன். அவன் வசதிக்கு என்றும் குறைவில்லை. அருணாசலத்தைக் காணும் போதெல்லாம் கிண்டல் செய்வான்.

நீ நம்பி இருக்கின்ற கடவுள் உன்னை மட்டும் ஏழையாகப் படைத்துவிட்டான்.ஆனால் என்னை மட்டும் பணக்காரனாக படைத்திருக்கிறான் பார்த்தாயல்லவா...? என்று பேசி நக்கல் செய்வான்.

அருணாசலம் இதற்கெல்லாம் ஒரு போதும் கலங்கியதில்லை. எல்லாவற்றிற்கும் ஏதோவொரு காரணம் இருக்கும். அதை இறைவனைத் தவிர யார்தான் அறிய முடியும் என்று எப்போதும் சொல்வான். இப்படியாக வேலாயுதம் கிண்டல் செய்வதும் அருணாசலம் அதற்குப் பதில் சொல்வதுமாக காலங்கள் கடந்தன.

ஒரு நாள் உச்சி வெயில், எங்கும் தகதகத்துக் கொண்டிருந்தது.அந்த வழியாக குடையைப் பிடித்தபடி வந்து கொண்டிருந்தான் வேலாயுதம். குடை வாங்க வசதியில்லாத அருணாசலம் வெயிலின் தகிப்பைத் தாங்கமுடியாது வியர்வை வழிந்தோட வந்து கொண்டிருந்தான்.இதனை அவதானித்த வேலாயுதம் வழக்கம்போல அருணாசலத்தை வம்புக்கு இழுத்தான். என்ன அருணாசலம் வெயிலில் வேர்க்க விறுவிறுக்க எங்கே போய் வருகிறாய்...? எல்லாம் கடவுள் செயல் என்று நம்பிக்கை வார்த்தைகளைச் சொல்லும் உனக்கு ஒரு குடையைக் கொடுக்க வேண்டும் என்று அந்த கடவுள் நினைக்கவில்லையே...? என்று நக்கல் செய்தான். பதிலுரைத்த அருணாசலம் அந்தக் கடவுளின் கருணை இல்லையென்றால் உன்னுடைய கையில் குடை இருந்தாலும் நீ அதை பிடித்து செல்ல முடியாத நிலை தோன்றும். இறைவனது கருணையை எப்போதும் கிண்டல் செய்யாதே என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்தான்.

இதனைக் கேட்ட வேலாயுதம் பெரிய தத்துவம் ஒன்றைச் சொல்லிவிட்டாய் என்று முணுமுணுத்தபடி சிரித்துகொண்டே நடந்தான். அப்போது தெருவோரமாய் நின்றிருந்த வெறி நாய் ஒன்று வேலாயுதத்தை முறைத்துப் பார்த்தது. அவனைத் துரத்த ஆரம்பித்தது. உயிர் மீது கொண்ட பயம் கலந்த பற்றுதல் காரணமாக அவன் ஓட்டம் பிடித்தான். நாயோ அவனை விடாமல் துரத்தியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் குடையைப் பிடித்துக் கொண்டு ஓடுவதற்கு வேலாயுதம் சிரமப்பட்டான்.குடையை மடக்கி கையில் வைத்துக்கொண்டு உயிர் தப்பினால் போதுமென்று ஒரே ஓட்டமாக ஓடித் தப்பினான். அருணாசலம் சொல்லிவிட்டுச் சென்ற வார்த்தைகளை நினைவுபடுத்திக்கொண்டான்.

கடவுளின் கருணை இல்லாவிட்டால் கையில் குடை இருந்தாலும் பிடிக்கமுடியாது என்பதை உணர்ந்தான். அவனை அறியாமலே இறைநம்பிக்கையின் பால் ஈடுபாடு கொண்டான்.அன்றிலிருந்து கடவுளின் அருள் என்ற கருணையின் வடிவத்தை நம்ப ஆரம்பித்தான்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1648 - சப்பாத்து உற்பத்தியாளர்களால் அமெரிக்காவின் முதலாவது தொழிற் சங்கம் தொடங்கப்பட்டது.

1775 - ஆபிரிக்க - அமெரிக்க கவிஞர் பிலிஸ் வீற்லி, அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

1867 - அலஸ்காவை. ரஷ்யாவிடமிருந்து 7.2 மில்லியன் டொலருக்கு அமெரிக்கா வாங்கியதையடுத்து அதனைக் கையேற்றது.

1898 - ஸ்பெயினிடமிருந்து பியோற்றா நிகோவை அமெரிக்கா கையேற்றது.

1921 - ரஷ்ய சோவியத் சமஷ்டி சோசலிஸ்ட் குடியரசின் ஒரு பாகமாக கிரிமியன் சுயாட்சி சோவியத் சோசலிஸ்ட் குடியரசு உருவாக்கப்பட்டது.

1922 - பிரித்தானிய ஒலிபரப்புக் கம்பனி, தேசிய ஒலிபரப்புச் சேவைக்கு நாடு தழுவிய வானொலி, ட்ரான்ஸ் மிட்டர்களை ஸ்தாபித்தது.

1954 - டெக்ஸாஸ் இன்ஸ்ருமன்ஸ் முதலாவது ட்ரான்சிஸ்டர் றேடியோ பற்றி அறிவித்தது.

1968 - "கறுப்பு சக்தி" வணக்கம் செலுத்தியதற்காக, அமெரிக்க ஒலிம்பிக் கமிட்டி, டொமி சிமித் மற்றும் ஜோன் கரோல்ஸ் ஆகியோரை நீக்கியது.

1992 - அணி வகுத்து வந்த 5 பொம்மர்கள் கொக்குவிலில் குண்டு வீச்சு: பெண் சாவு. நால்வர் காயம்: காலை பயங்கரம்.

- முஸ்லிம் இராணுவப் படை அமைக்கத் தவறினால் தனிப் போராளிப் படை அமைப்போம் என அஷ்ரப் அரசுக்கு எச்சரிக்கை.

2004 - பேச்சு மேசைக்கு முன்பதாக மாற்று யோசனையில்லையென பாலசிங்கத்திடம் லண்டனில் நோர்வே தரப்பு தெரிவிப்பு.

- ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி முழுமையாக சுரேஷ் பிரேமச்சந்திரனின் கைகளில். வரதர் அணி அவுட். சட்டச் சிக்கல் நீங்கியது.


2007 - அகதிகள் படகுகள் மீது கடற்படை சூடு. மூவர் சாவு. ஒருவரைக் காணவில்லை. பேசாலைக் கடலில் அதிகாலை இடர்.

- பத்திரிகைச் சுதந்திரம் மோசமாகியுள்ள நாடுகளில் இலங்கைக்கு 156 ஆவது இடம்.



# வர்ணம்

## தீட்டுவோம் வாங்க.....



# உயிர்கள் எல்லாம் ஒன்றாகும்



அன்பால் பகையை வென்றிடலாம் - இதை
அறிந்தால் உலகில் நின்றிடலாம்
என்பும் பிறர்க்குத் தந்திட்டால் - நல்ல
இதயம் கொண்டு முந்திடலாம்!

உயிர்கள் எல்லாம் ஒன்றாகும் - அதை
உணர்ந்து நடந்தால் நன்றாகும்!
துயரம் வருவது ஆசையினால் - அதைத்
துரத்திட வேண்டும் பூசையினால்!

புத்தர், காந்தி சொன்னவை - இந்தப்
புவியைக் காக்கும் நன்மொழிகள்
நித்தம் அவற்றை நினைத்திடுவோம் - நம்
நெஞ்சில் அன்பை விதைத்திடுவோம்

தன்னை எண்ணும் சுயநலத்தை - உடன்
தட்டி மண்ணில் உதிர்த்திடுவோம்!
பொன்னைப் போல மனம் கொண்டு - நாம்
புதிதாய் உலகை அமைத்திடுவோம்

நாட்டு நன்மை ஒன்றினையே எந்த
நாளும் மனதில் பதித்திடுவோம்
காட்டு விலங்காய் வாழாமல் - மனக்
கருணை கொண்டு வாழ்ந்திடுவோம்!



சிறுவர் புக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ட்ரம்புக்கு ஆதரவாக பிரபுதேவா

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. அந்த நாட்டின் இரு பெரும் கட்சிகளில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் உள்ளனர். தேர்தல் முழக்கங்கள் சூடு பிடித்துள்ளன. ஒவ்வொருவரும் தமக்கு ஆதரவாக பல பிரபலங்களை வைத்து பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த வரிசையில் டொனால்ட் ட்ரம்ப் தனக்கு ஆதரவாக பிரபுதேவாவை நாடியுள்ளார். அமெரிக்கா சென்ற பிரபுதேவா, டொனால்ட் ட்ரம்பின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றினார். அவருக்கு தனது ஆதரவைத் தெரிவித்தார். இந்தியாவுக்கும் இந்து மதத்துக்கும் தான் மிகப் பெரிய ரசிகன் என ட்ரம்ப் தெரிவித்தார். இந்தியாவிலுள்ள உலக அதிசயமான தாஜ் மஹாலை வெளித் தோற்றத்தை வைத்து டொனால்ட் ட்ரம், 'ட்ரம்ப் தாஜ் மஹால்' என்ற பெயரில் சூதாட்ட விடுதியொன்றைக் கட்டி நடத்தியமை குறிப்பிடத்தக்கது.












"என்னப்பா வரைந்து கொண்டிருக்கிறாய்?"
"சித்திரம் வரைந்து கொண்டிருக்கிறேன்"
"என்ன சித்திரம்?"
"பசு மாடு புல்லைத் தின்பது போல் ஒரு காட்சி"
"ஆனால் புல்லைக் காணோமே"
"புல்லை மாடு தின்று விட்டது"
"மாட்டையும் காணோமே"
"புல்லைத் தின்ற பிறகு அது எதற்காக அங்கே நிற்கப் போகிறது?"

Palani கிங் VJ
போடுகின்ற வேடத்தில் யாருடைய வேடம் சிறந்ததாக இருக்கிறதோ, அவர்களே இந்த உலகத்தில் "நல்லவர்கள்" எனும் நல்ல வேடக்காரர்கள்...
45 23



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். வீடு வாகன வகையில், செலவு ஏற்படும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும்.

**இடபம்:** அன்றாடப் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில், இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். மிதமான லாபம் கிடைக்கும். பெண்கள், நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**மிதுனம்:** எதிர்கால நலன் குறித்த சிந்தனை மேலோங்கும். நண்பர்களின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கடகம்:** நீண்டகால எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். உறவினர் பாசத்துடன் நடப்பர்.

**சிங்கம்:** மனதில் தற்பெருமை எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில், சுமாரான அளவில் வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். போட்டி, பந்தயத்தில் ஈடுபட வேண்டாம்.

**கன்னி:** வாழ்வில் மாறுபட்ட சூழ்நிலையைச் சந்திப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை, பாதுகாக்க வேண்டும். லாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு, அக்கம் பக்கத்தினருடன் கருத்து வேறுபாடு உருவாகலாம்.

**துலாம்:** உங்கள் பேச்சில் சாமர்த்தியம் நிறைந்திருக்கும். விடாமுயற்சியால், தாமதித்த பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், லாபம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழித்து, வருமானம் பெருகும். குடும்ப வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வீர்கள். இயன்ற அளவில் தான தர்மம் செய்வீர்கள். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.

**தனுசு:** சிலர் சுயநல நோக்கத்துடன் உங்களை அணுகுவர். தொழில், வியாபாரத்தில், தடை குறுக்கிடலாம். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள், பணிச்சுமைக்கு ஆளாகலாம். வாகன பயணத்தில், விழிப்புடன் இருக்கவும்.

**மகரம்:** உடல் நலத்தில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, கூடுதல் உழைப்பு தேவைப்படும். லாபம் மிதமாக இருக்கும். பிள்ளைகளின் செயற்பாடு, மனதை மகிழ்விக்கும். உறவினரால் உதவி கிடைக்கும்.

**கும்பம்:** நண்பர் எதிர்பார்த்த உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், லாபம் திருப்தியளிக்கும். புதிதாக வீடு, வாகனம் வாங்க வாய்ப்புண்டு. விரைவில் பிள்ளைகளின் வழியில், சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**மீனம்:** அறிமுகமில்லாதவரிடம், குடும்ப விடயம் பற்றி பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரால் பாராட்டப் படுவர்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | 3 | | | 7 | |
| 2 | | | | | | 6 | | 3 |
| | | | | | | | 5 | |
| 1 | | | | | | | | 7 |
| | 9 | | 3 | 6 | | 5 | | |
| | 8 | | 9 | | 2 | | | |
| | 6 | 2 | | 1 | 7 | | | |
| 7 | | 8 | 4 | | | | | 6 |
| | | | | | | | 1 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 3 | 7 | 1 | 4 | 9 | 2 | 5 |
| 4 | 1 | 5 | 6 | 9 | 2 | 8 | 3 | 7 |
| 9 | 2 | 7 | 8 | 3 | 5 | 6 | 4 | 1 |
| 5 | 8 | 9 | 1 | 4 | 6 | 3 | 7 | 2 |
| 2 | 4 | 6 | 3 | 5 | 7 | 1 | 8 | 9 |
| 7 | 3 | 1 | 9 | 2 | 8 | 5 | 6 | 4 |
| 1 | 9 | 8 | 2 | 7 | 3 | 4 | 5 | 6 |
| 6 | 5 | 2 | 4 | 8 | 1 | 7 | 9 | 3 |
| 3 | 7 | 4 | 5 | 6 | 9 | 2 | 1 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை [illegible] என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். [illegible] நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது புதுசு



ராஜஸ்தான் பஞ்சாபிகள் அறிமுகமாகியுள்ளன. முன்பக்க வெட்டுடன் குடைவெட்டு வடிவில் இவை உருவாகியுள்ளன. அத்துடன் நெற்துணியில், சிறிய கண்ணாடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இவை விலை 3ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றது.

# கிராம்பில் உள்ள பலவித மருத்துவ குணங்கள்



உடலைப் பருமனடையச் செய்யவும், வளர் சிதை மாற்றப்பணிகளுக்கு உதவவும், உடற் சூட்டை சமப்படுத்தவும், குருதி ஓட்டத்தை முறைப்படுத்தவும் இது பயன் அளிக்கிறது.

ஜீரண உறுப்புகளில் சுரக்கும் நொதிகளை கிராம்பு ஊக்குவிக்கிறது. இதனால் ஜீரணக்கோளாறுகள் நீங்குகின்றன.

கிராம்புப் பொடியை வறுத்து அரை கிராம் தேனில் குழைத்து சாப்பிட்டால் வாந்தி நிற்கும். கிராம்பில் உள்ள விறைக்கப் பண்ணும் ஒரு பொருள் வயிற்றிலுள்ள சில உறுப்புகளை விறைப்படையச் செய்து வாந்தியைத் தடுக்கிறது.

நான்கு கிராம் கிராம்பை மூன்று லீற்றர் தண்ணீரில் போட்டு அரை பங் காக சுண்டும் அளவுக்குக் கொதிக்க வைத்துப் பருகினால் காலரா குணமடையும்.

சிறிது சமையல் உப்புடன் கிராம்பை சப்பிச் சாப்பிட்டால் தொண்டை எரிச்சல், கரகரப்பு நீங்கி தொண்டை சரியாகும். தொண்டை அடைப்பால் ஏற்படும் எரிச்சலைத் தவிர்க்க, சுட்ட கிராம்பு மிகச் சிறந்தது.

கிராம்பு எண்ணெய் மூன்று துளியுடன் தேன் மற்றும் வெள்ளைப் பூண்டுச் சாறு சேர்த்து படுக்கைக்குப் போகும் முன்பு சாப்பிட ஆஸ்துமாவால் ஏற்படும் சுவாசக் குழல் அழற்சி சரியாகும்.

முப்பது மில்லி நீரில் ஆறு கிராம்புகளைப் போட்டு கொதிக்க வைத்து அந்தக் கசாயத்தில் தேன் கலந்து குடித்தால் ஆஸ்துமா கட்டுப்படும்.

கிராம்புப் பொடியை பற்பொடியுடன் கலந்து பயன்படுத்தி வர, வாய் நாற்றம், ஈறு வீக்கம், பல்வலி ஆகியவை குணமாகும். கிராம்பு எண்ணெயை பாதிக்கப்பட்ட ஈறுகளில் தடவி வர குணம் கிடைக்கும்.

3–5 துளி நல்லெண்ணெயில் ஒரு கிராம்பை சூடு காட்டி அந்த எண்ணெயை வலியுள்ள காதில் இட்டால் சுகம் கிடைக்கும்.

தசைப்பிடிப்புள்ள இடத்தில் கிராம்பு எண்ணெயைத் தடவி வர குணம் கிடைக்கும்.

கிராம்பு மற்றும் உப்பை பசும்பாலில் அரைத்து அந்தப் பசையைத் தடவினால் தலைவலி பறந்துவிடும். தலையிலுள்ள நீரை உப்பு உறிஞ்சி எடுப்பதால் தலைப்பாரம் குறைந்து குணம் கிடைக்கிறது.

கண் இமைகளில் ஏற்படக்கூடிய அழற்சிகளைப் போக்க கிராம்பை நீரில் உரசி அந்த நீரைப் பயன்படுத்தினால் குணம் கிடைக்கும்.

சமையலுக்கும், கறிகளுக்குச் சுவையூட்டவும், கறி மசாலா வகைகள் தயாரிக்கவும் கிராம்பு முக்கியம். வாசனைத் தயாரிப்பு, சோப்புத் தயாரிப்பிலும் இது பயன்படுகிறது.

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 40 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 60 | 60 | 70 | 40 | 50 | 90 | 35 |
| கரட் | 70 | 100 | 120 | 100 | 80–100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 60 | 60 | 50–60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 120 | 100 | 120 | 140 | 140 | 160 | 100 | 60 |
| பாகல் | 120 | 120 | 140 | 160 | 180 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 80 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 90 | 100 | 100 | 100 | 80–100 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 | 25–30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 80 | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 60 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 15 | 20 | 30 | 20 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 60 | 60 | 60 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 50 | 50 | 40 | 60 | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 160 | 120 | 160 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 80 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 30 | 40 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100–110 | 120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 500 | 350 | 300 | 400 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 90 | 120 | 100 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 100 | 80 | 80 | 200 | 80 | 100 |



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | 700 | 700 | 700 | 600 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 600 | 500 | – |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 500 | 400 | – |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 600 | – | – |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 300 | 400 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 400 | 400 | 600 |
| முரல் | 300 | 350 | 300 | 500 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 300 | 250 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 400 | 200 | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | 250 | 400 |
| திரளி | 300 | 250 | 100 | 150 | 200 | 150 | 350 |
| நகரை | 250 | 250 | 100 | 250 | 300 | 250 | 400 |
| சூடை | 150 | 130 | 100 | 200 | 100 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 200 | – | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 200 | 300 | 130 |
| மதனம் | 150 | 150 | – | 400 | 300 | 250 | 300 |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 100 | 50 | – |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 200 | 300 | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 300 | 250 | – |

# மோர்க்களி

### தேவையான பொருள்கள்

அரிசி மா – 1 கப்
புளித்த மோர் – ¼ கப்
கடுகு, உளுந்து, வற்றல் மிளகாய், கறிவேப்பிலை – தாளிக்க
நல்லெண்ணெய் – ¼ கப்
உப்பு – தேவையான அளவு

### செய்முறை

அரிசி மாவை மோர், உப்பு சேர்த்து கரைக்கவும். சட்டியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும், கடுகு, உளுந்து, வற்றல் மிளகாய், கறிவேப்பிலையை போட்டுத் தாளிக்கவும். இதில் கரைத்த மாவை ஊற்றி, நன்றாக கிளறவும். பக்கங்களில் ஒட்டாமல் வெந்ததும் இறக்கி பரிமாறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி ஆசையும் நிறைவேறவில்லை

## ஈ.பி.டி.பி அபகரித்துள்ள வீட்டில் உடலை வைக்கவாவது இடம் கேட்ட உரிமையாளருக்கு ஏமாற்றம்





யாழ்ப்பாணம், ஒக். 18

மானிப்பாயில் ஈ.பி.டி.பியினர் அடாத்தாகப் பிடித்து வைத்திருப்பதாகக் கூறப்படும் வீட்டை விடுவிக்குமாறு வீட்டு உரிமையாளர் பல தடவைகள் கேட்டும், அதனை ஈ.பி.டி.பியினர் வழங்க மறுத்த நிலையில், அந்த வீட்டில் இறுதிக் கிரியை நடத்தவேண்டும் என்ற ஆசையும் நிறைவேறாது அவரது உடல் நேற்று அடக்கம் செய்யப்பட்டது.

மானிப்பாய் பகுதியில் ஈ.பி.டி.பியினரின் முகாமாகத் தொழிற்படும் வீடு அதேபகுதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் கந்தசாமியின் சொத்து. போர்க் காலத்தைப் பயன்படுத்தி ஈ.பி.டி.பியினர் அந்த வீட்டைஅபகரித்து விட்டனர். அதில் முகாம் அமைத்து வீட்டைத் தக்க வைத்துக் கொண்டனர். போர் நிறுத்தம் மற்றும் போர் முடிவுற்றதன் பிற்பாடு ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தரான சுப்பிரமணியம் – கந்தசாமி குறித்த வீட்டை மீள ஒப்படைக்குமாறு ஈ.பி.டி.பியினரிடமும், அதனைப் பெற்றுத் தருமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் தொடக்கம் பொலிஸார் வரைக்கும் விண்ணப்பித்திருந்தார்.

அவரது கோரிக்கையின் பிரகாரம் வடக்கு மாகாண முதலமைச்சரால், சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு இது தொடர்பில் கடிதம் அனுப்பப்பட்டது. அதனைப் பரிசீலித்த சபாநாயகர், அந்த விடயம் தொடர்பில் ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்குக் கடிதம் அனுப்பியிருந்தார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு சபாநாயகர் கடிதம் அனுப்பியும் ஈ.பி.டி.பியினர் அந்த வீட்டை அதன் உரிமையாளரிடம் கையளிக்காது கையகப்படுத்தி வைத்துள்ளனர்.

இவ்வாறெல்லாம் அலைந்தும் எந்தப் பிரயோசனமும் கிடைக்காத நிலையில் வீட்டின் உரிமையாளர் பெரிதும் மனமுடைந்திருந்த நிலையில், மன ஏக்கத்துடன் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். தனது இறுதிக் கிரியைகளையாவது அந்த வீட்டில் நடத்த வேண்டும் என்று அவர் தனது கடைசி ஆசையாகக் கொண்டிருந்தார். அதன்படி அந்த வீட்டில் - தற்போது ஈ.பி.டி.பியினர் முகாம் அமைத்துள்ள வீட்டில் இறுதிக் கிரியைகளை நடத்த வேண்டும் என்று கோரிய போதும், அதற்குக்கூட ஈ.பி.டி.பியினர் விடவில்லை என்று இறந்தவரின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அதனால் அவரின் இறுதிக் கிரியைகள் ஈ.பி.டி.பியினரின் முகாமிட்டுள்ள வீட்டுக்கு நேர் எதிரே உள்ள வீட்டில் நேற்று இடம்பெற்றது.

இதேவேளை, கணவனின் இறுதிக் கிரியையைச் செய்வதற்கு தமது வீட்டை விடுவிக்குமாறு அவரது மனைவி விடுத்த கோரிக்கை தொடர்பில் நேற்றைய உதயன் பத்திரிகையில் செய்தி வெளியானது. அந்தப் பத்திரிகையை சாவு வீட்டுக்கு வந்த அனைவருக்கும் விநியோகித்த உறவினர்கள் அந்த வீட்டை விடுவிக்க இறுதிவரை போராடினர். எனினும் ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸின் மூர்க்கத்தனத்தால் அவர்களின் போராட்டத்தினாலும் பலன்கிடைக்கவில்லை.

(வ-4,10)

# ஆரம்பத் தகவல் திரட்டுக்களின் பகிர்வு

ஆரம்ப தகவல் திரட்டுக்களின் பகிர்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சிறப்புத் தேவையுடையோர் மற்றும் சிறப்பு வகைக்குட்பட்ட பெண்களை இனங்காணும் ஆரம்பக்கட்ட ஆய்வாக இது அமையும் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொள்கிறார்.

(வ-ரி)



**பூஜையும் அருள் வாக்கும்**
**சித்தன்கேணி**

அருள் மிகு ஸ்ரீ நாககன்னி அம்பாள்

ஆலயத்தில் வருகின்ற 21.10.2016 ஐப்பசி முதல் வெள்ளிக்கிழமை பூஜையுடன் அம்பாளின் அருள் வாக்கும் வெள்ளி, செவ்வாய், ஞாயிறு இடம் பெறும். என்பதனை அறியத்தருகின்றோம்.

**ஆலய பூசகரும் தொண்டர்சபையும்**

# யாழ். நகரில் நாளை விழிப்புணர்வு ஊர்வலம்

பன்னாட்டு வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306 பி1 மாவட்டத்தின் வட பிராந்திய லயன்ஸ் கழகங்கள் இணைந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றை நாளை புதன்கிழமை காலை நடத்தவுள்ளனர்.

இந்த விழிப்புணர்வு யாழ்.மாநகரசபை பொது நூலக மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

காலை 8.30 மணிக்கு யாழ்.ஆரியகுளம் சந்தியிலிருந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமாகி விழா மண்டபம் வரை செல்லும். நிகழ்வில் 150 விழிப்புலனற்றோர் கௌரவிக்கப்படவுள்ளனர். பன்னாட்டு லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்டத்தைச் சேர்ந்த பிராந்திய அணிகள் தத்தமது பிராந்தியங்களில் இந்த வருடம் வெள்ளைப் பிரம்பு தினத்தை கடைப்பிடித்து வருகின்றனர்.

கடந்த எட்டாம் திகதி கொழும்பு பிராந்திய லயன்ஸ் கழகங்கள் கொழும்பில் வெள்ளைப் பிரம்பு தினத்தை கடைப்பிடித்தனர். இதேபோன்று வயம்ப பிராந்திய லயன்ஸ் கழகங்கள் இணைந்து எதிர்வரும் 22 ஆம் திகதி வென்னப்புவ பிரதேசத்தில் வெள்ளைப் பிரம்பு தினத்தை கடைப்பிடிக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(வ 9)

**விற்பனைக்கு**

புதிய வெதுப்பக பாவனைக்குரிய
புதிய Gas Oven, Sinmag
மாக்குழைக்கும் இயந்திரம் மற்றும்
தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

077 549 0937

**தேவை**

சோடாப் பெட்டிகளை ஏற்றி இறக்குவதற்கு தொழிலாளர்கள் (Labours) உடன் தேவை.

* சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

பிள்ளையார் இன்,
இல 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2829

### சாவகச்சேரி பிரதேச சபை

### 01.01.2017 முதல் 31.12.2017 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தை, இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், களஞ்சிய அறை, பொது மலசலகூடம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல்-2017

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 18.10.2016 – 31.10.2016 வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 01.11.2016 மு.ப 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 01.11.2016 மு.ப 10.30 மணி

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (VAT,NBT தவிர) | கேள்விப் வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|
| | **கச்சாய் உப அலுவலகம்** | | | |
| 01 | கொடிகாமம் மத்திய மரக்கறிச்சந்தை, வண்டி வாகன தரிப்பு நிலையம் | 7930700.00 | 79300.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் மீன் சந்தை | 1243600.00 | 12400.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1156200.00 | 11600.00 | 750.00 |
| 04 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1471400.00 | 14700.00 | 750.00 |
| 05 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல – 01 | 17800.00 | 500.00 | 750.00 |
| 06 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 02 | 18500.00 | 500.00 | 750.00 |
| 07 | களஞ்சிய அறை இல - 01 | 36400.00 | 500.00 | 750.00 |
| 08 | களஞ்சிய அறை இல - 02 | 34700.00 | 500.00 | 750.00 |
| 09 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 10000.00 | 500.00 | 750.00 |
| | **வரணி உப அலுவலகம்** | | | |
| 10 | வரணி பொதுச்சந்தை | 111200.00 | 1100.00 | 750.00 |
| 11 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 3600.00 | 500.00 | 750.00 |
| | **கைதடி உப அலுவலகம்** | | | |
| 12 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 220100.00 | 2200.00 | 750.00 |
| 13 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 134200.00 | 1300.00 | 750.00 |
| 14 | கைதடிப் பொதுச்சந்தை | 14000.00 | 500.00 | 750.00 |
| | **மிருசுவில் உப அலுவலகம்** | | | |
| 15 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 403800.00 | 4000.00 | 750.00 |
| 16 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 71500.00 | 700.00 | 750.00 |
| 17 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 55100.00 | 600.00 | 750.00 |
| 18 | மிருசுவில் பொதுச்சந்தை | 3600.00 | 500.00 | 750.00 |
| 19 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 3000.00 | 500.00 | 750.00 |
| 20 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 3900.00 | 500.00 | 750.00 |
| | **நாவற்குழி உப அலுவலகம்** | | | |
| 21 | நாவற்குழி பொதுச்சந்தை | 3000.00 | 500.00 | 750.00 |
| 22 | நாவற்குழி மீன்சந்தை | 2000.00 | 500.00 | 750.00 |

**நிபந்தனைகள்:**

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 18.10.2016 தொடக்கம் 31.10.2016 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம். அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்வித் தொகை. படிவக் கட்டணம். என்பவற்றுடன் VAT 11%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
4. 01.11.2016 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ச முகமளிக்கலாம்.
5. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும் அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை **"செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்"** என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.
18.10.2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய போட் ரேஞ்சர் கார் இலங்கையில் அறிமுகம்




போர்ட் மோட்டார் கம்பனி மற்றும் அதன் உள்நாட்டு விநியோக பங்காளரான பியுச்சர் ஒடோமொபைல்ஸ் ஆகியன இணைந்து, புதிய ரேஞ்சர் ரக வாகனத்தை இலங்கையில் அறிமுகம் செய்திருந்தன. இந்த புதிய ரேஞ்சர் வாகனத்தை நாடு முழுவதிலுமுள்ள போர்ட் காட்சியறைகளில் பார்வையிட முடியும்.

புதிய போட் ரேஞ்சரில் பாதுகாப்பு, இயங்குதிறன் மற்றும் உயர் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு அம்சங்கள் பயணிகளுக்கும் சாரதிக்கும் சௌகரியத்தை வழங்கும் வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த போட் ரேஞ்சர் தொடர்பில், போர்ட் மோட்டார் கம்பனியின் ஆசிய பசுபிக் வளர்ந்து வரும் சந்தைகளுக்கான முகாமைத்துவ பணிப்பாளர் டேவிட் வெஸ்டர் மன் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் காணப்படும் இதர பிக்-அப்களுடன் ஒப்பிடுகையில், புதிய போட் ரேஞ்சர் என்பது எமது பாரம்பரியமுறைக்கமைய அதிகளவு வலிமையுடனும், அதிக எடையை ஏற்றக் கூடிய திறனையும் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய பாதுகாப்பு மற்றும் ஸ்மார்ட் தொழில்நுட்ப அம்சங்களைக் கொண்ட ஒரே பிக்கப் ஆகவும் திகழ்கிறது- என்றார்.

இந்த புதிய போட் ரேஞ்சர் தொடர்பில், பியுச்சர் ஒடோமொபைல்ஸ் பிரதம நிறை வேற்று அதிகாரி சமத் தென்னகோன் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையின் சாரதிகள் ட்ரக் ஒன்றின் திறனையும், பயணிகள் வாகனமொன்றின் சௌகரியத்தையும் எதிர்பார்ப்பதை நாம் அறிவோம். இதனை கவனத்திற் கொண்டு, புதிய போட் ரேஞ்சர் அவர்களின் அலுவலக பணிகளுக்காகவும், குடும்பத்தாருடனான பயணங்களின் போதும் மிகவும் இனிமையான பயண அனுபவங்களைச் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது-என்றார்.

புதிய போட் ரேஞ்சர் , அதிகளவு ஆறு வேக ஓடோமெடிக் அல்லது மெனுவல் கியர் கட்டமைப்பைக் கொண்டுள்ளது. அதிகளவு பாரங்களை கொண்டு செல்வதற்கு உதவும் வகையில், போர்ட்டினால், புதிய தொழில்நுட்பங்கள் பின்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (டு)

வணிகம்

# பன்னாட்டு மரம்சார் கண்காட்சிக்கு ஜற் ஹோல்டிங்ஸ் அனுசரணை

நான்காவது தடவையாகவும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இலங்கை சர்வதேச மரம் சார் கண்காட்சி 2016 நிகழ்வுக்கு ஜற் (JAT) ஹோல்டிங்ஸ் நிறுவனம் அனுசரணை வழங்கியது.

ஜற் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஈலியன் குணவர்தன கருத்துத் தெரிவிக்கையில், பெருமளவிலானோர் வருகைதந்த இந்தக் கண்காட்சியில் பங்கேற்பதானது எமக்கு மிகவும் மகிழ்ச்சிகரமானதாக அமைந்தது. இலங்கையின் மரவேலைப்பாடுகள் துறையில் உள்ள நிறுவனங்கள் தமது வணிகத்தை விஸ்தரித்துக் கொள்வதற்கும் இந்தத் துறையிலான புத்தாக்கங்கள் தொடர்பில் தமது அறிவை விருத்தி செய்து கொள்வதற்கும் மிகச் சிறப்பான தொரு வாய்ப்பை இக்கண்காட்சி வழங்கியது என்றார்.

மூன்று நாள்கள் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியானது மனதைக் கவரும் வகையிலான பரந்த வகைகளிலான மரம் மற்றும் மரவேலைப்பாடுகள் சார்ந்த இயந்திரம், தளபாட வன்பொருட்கள், பொருத்துக்கள் மற்றும் சேர்மானங்கள், மரங்கள் மற்றும் வெட்டு மரங்கள், மரத்துகளினால் செய்யப்பட்ட பலகைகள், பெனல்ஸ் மற்றும் பிளைவூட், மின் உபகரணங்கள், பல்வர்ண மரவேலை, வனீர் வகைகள் மற்றும் லெமினேட், மேற்பூச்சு மற்றும் ஒட்டும் தன்மையுள்ள பொருட்கள் போன்ற பெயர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மேலும் பல உற்பத்திகளை காட்சிப்படுத்தியது.

ஷோ கிராப்ட் இன்டநசனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கண்காட்சி, அங்கு வருகை தருகின்ற பார்வை யாளர்களைப் பல்வேறுபட்ட வழிமுறைகளின் ஊடாக தம்முடைய அறிவை விருத்தி செய்து கொள்வதற்கான சிறந்ததொரு வாய்ப்பை வழங்கியது. (டு)

# அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஜப்பான் முன்னுரிமை இலங்கைக்கு 46,622 மில்லியன் ரூபா நிதி உதவி



இலங்கையில் எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்கான அரசின் நிதிநிலைமையைச் சீர் செய்தல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னிறுத்தி ஜப்பான் அரசு கடனுதவியாக 46622 மில்லியன் ரூபாவை கடனுதவியாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இவைதவிர அநுராதபுரம் வடக்கு நீர்ப்பாசனத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயற்படுத்துவதற்கும் ஜப்பானின் ஜைக்கா என்ற சர்வதேச ஒத்துழைப்பு வழங்கலுக்கான நிறுவனத்திலிருந்து 32169 மில்லியன் ரூபா கடன் தொகையை அரசு பெற்றுக்கொண்டுள்ளதாகவும் நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது. வடமத்திய மாகாணத்தில் நிலவி வருகின்ற சிறுநீரக நோய்க்கு தீர்வினை முன்வைக்கும் முகமாக இந்தத் திட்டமானது முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கடன் பெறுகைக்கான மற்றும் அபிவிருத்தி சார் கொள்கை அடிப்படையிலான கடன் திட்டங்களுக்குரிய உடன்படிக்கைகளை கைச்சாத்திடும் நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை நிதியமைச்சில் இடம்பெற்றுள்ளன.

இலங்கை அரசை பிரதிநிதித்துவம் செய்யும் வகையிலே திறைசேரியின் பிரதிச்செயலாளரும், ஜப்பான் அரசு சார்பாக இலங்கைக் [illegible] கலந்து கொண்டு [illegible] கைகளில் கைச்சாத்திட்டுள்ளனர். (ரி - 2)

நுட்பம்



# உடல் வெப்பம் மின்சாரமாக நவீன ரீசேர்ட்

மனிதர்களின் சாதாரண உடல் வெப்பத்தை மின்சாரமாக மாற்றக்கூடிய நவீன ரீசேர்ட் ஒன்றை அமெரிக்காவில் அமைந்துள்ள வடக்கு கொரோலினா மாகாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இவை மின்சாரத்தை எடுத்துச்செல்லும் வகையில் மிகக் குறைந்த எடையுடைய மூலவளங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த ரீசேர்ட் அணியும் போது உடலின் வெப்பம் அதில் உள்ள மூலப்பொருட்களின் திறன் விருத்தி மூலம் மின்சாரமாக மாற்றப்படுகின்றது. குறிப்பாக ஒரு சதுர சென்ரிமீற்றர் பரப்பளவில் 20 மைக்ரோ வற் மின்சாரத்தை தயாரித்துக்கொள்ளலாமென நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மின்சாரத்தின் மூலம் மிக சிறிய அளவிலான இலத்திரனியல் கருவிகளை இயக்க முடியும்.




## சமூக வலையில் இலவச இணைய சேவை

பிரபல சமூகவலைதள வகையறையான பேஸ்புக், தன்னுடைய பயன்படுத்துனர்களின் நலன்கருதி இலவச இணைய சேவையை அறிமுகப்படுத்தவுள்ளது.

இதற்கு முன்பாக இந்தியாவில் இவ்வகையான இலவச இணைய சேவை அறிமுகம் செய்யப்பட்டிருந்த போதிலும் குறுகிய காலத்தில் அதனை மீளப்பெற்றிருந்தது பேஸ்புக். இந்த நிலையிலே ஐக்கிய அமெரிக்காவில் மீண்டும் குறித்த சேவையை அறிமுகம் செய்யவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக அமெரிக்காவில் குறைந்த வருமானம் உடையவர்கள் மற்றும் பின்தங்கிய கிராமங்களில் வாழ்பவர்கள் இதன் மூலம் பயன்பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் சேவையானது வெற்றியளிக்கும் சந்தர்ப்பத்தில் ஏனைய நாடுகளிலும் இந்த சேவை நடைமுறை விரைவில் அறிமுகம் செய்யப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனத்...

இந்தியாவின் கோவா நகரில் சந்தித்துப் பேசினார். இருதரப்பு விடயங்கள் பல குறித்து இந்தச் சந்திப்பில் உரையாடப் பட்டது. கோவாவில் நடைபெறும் எட்டாவது பிரிக்ஸ் மாநாட்டில் இலங்கை ஜனாதிபதியும் பார்வையாளராகக் கலந்து கொண்டுள்ளார்.

இலங்கை – சீன உறவு ஆரோக் கியமான முறையில் சாதகமான திசையில் வளர்ந்து வருகின்றது என்று மைத்திரியிடம் சீன ஜனாதிபதி எடுத்துக்கூறினார் என்று உத்தியோகபூர்வத் தகவல்கள் தெரிவித்தன.

"தலைமுறைகளைக் கடந்து நிற்கும் இலங்கையுடனான பாரம்பரிய நட்புறவை முன்னகர்த்துவதற்கு சீனா பணியாற்றும்" என்றும்சீனஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

வர்த்தகம், துறைமுக இயக்கம், உட்கட்டமைப்பு கட்டுமானங்கள். துறைமுகங்களை அண்டிய கைத்தொழில் பூங்காக்கள், உற்பத்தி ஆற்றல் மற்றும் வாழ்வாதாரத் துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் ஆழமான உறவுகளை வலுப்படுத்துவதற்கும் சீன ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் அழைப்பு விடுத்தார்.

"கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற பெரிய கூட்டுத் திட்டங்களை இரு தரப்புகளும் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும். சுற்றுலா, சமுத்திரம், பாதுகாப்பு மற்றும் இடர் தயார் நிலை மற்றும் குடிவரவு ஆகிய துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் விரிவாக்க வேண்டும்" என்றும் சீன ஜனாதிபதி எடுத்துக்கூறினார் என்று செய்திகள் தெரிவித்தன.

"அனைத்துலக மற்றும் பிராந்திய விவகாரங்களில் இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும்" என்றும் சீன ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் கோரிக்கை விடுத்தார்.

(உ-5)

## 4 நாள்களில்...

குள் மாத்திரம் 250 கிலோ வரையில் கேரளக் கஞ்சா யாழ்ப்பாணத்தில் கைப்பற்றப் பட்டுள்ளது.

வடக்கில் கடற்படையால் மட்டும் கடந்த 19 மாதங்களில் ஆயிரத்து 18 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. 36 தடவைகளில் இந்தப் பெருந்தொகை கஞ்சா கைப் பற்றப்பட்டதாக கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அச்சுவேலிப் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட தொண்டமானாறு கடற்கரையோரத்தில் இருந்து 5 பொதிகளில் கட்டப்பட்டிருந்த 15 கிலோ கேரள கஞ்சா நேற்று முன் தினம் மாலை மீட்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதியில் மேற்கொண்ட தேடுதலின்போது கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. (உ-5,10)

## முல்லை...

புல்மோட்டையிலிருந்து வந்த மீனவர்கள் தாக்கினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த முல்லைத்தீவு மீனவர்கள் மூவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து முல்லைத்தீவு மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கச் சமாசத் தலைவர் அன்ரனி மரியராசா தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு களப்பு பகுதிக்குள் இயந்திரம் பூட்டிய படகுகள் பயன் படுத்துவதும் கூட்டுவலைத் தொழிலில் ஈடுபடுவதும் வர்த்தமானி மூலம் தடைசெய்யப்பட்டுள்ளது. கொக்கிளாய், கருநாட்டுக் கேணி, குடாத்துறை மீனவர்கள் குல்லாவில் (ஒரு நபர் மட்டும் பயணிக்கக்கூடிய சிறிய படகில்) சென்று அந்தப் பகுதியில் தொழில் புரிவது வழமை. புல்மோட்டையைச் சேர்ந்த முஸ்லிம் மீனவர்கள் அந்தப் பகுதிக்குள் அடாத்தாகப் புகுந்து அனுமதிக் கப்படாத முறைகளில் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இது தொடர்பான முறைப்பாடுகளை அடுத்து இன்று (நேற்று) காலை பொலிஸார், கடற்றொழில் நீரியல்வளத் திணைக் களப் பிரதிநிதிகள் உள்ளூர் மீனவர்களின் உதவியுடன் மேற்படி பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

அந்தச் சமயத்திலேயே தடை செய்யப்பட்ட கூட்டு வலைகள் மட்டும் 107 அந்தப் பகுதியில் பாச்சப்பட்டிருந்தன. அவற்றை அதிகாரிகள் கரைசேர்க்க உள்ளூர் மீனவர்கள் உதவி புரிந்தனர். தடை செய்யப்பட்ட இயந்திரம் பூட்டி தொழிலில் ஈடுபட்ட 3 படகுகளையும் அதில் தொழில் புரிந்த 6 புல்மோட்டை மீனவர்களையும் பொலிஸார் கைதுசெய்தனர். அதற்கான படகுகள் மற்றும் ஓட்டி உதவிகளை உள்ளூர் மீனவர்கள் வழங்கினர்.

பொலிஸாரும், திணைக்களத்தினரும் தமது பணியை முடித்து திரும்பிக்கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் புல்மோட்டை மீனவர்கள் சுமார் 40 இற்கும் மேற்பட்ட இயந்திரப் படகுகளில் விரட்டி வந்து வாள்கள் கத்திகள் கொண்டு உள்ளூர் மீனவர்களைத் தாக்கினர். இதனால் மூவர் படுகாயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டனர். தாக்குதல் இடம்பெறும்போது பொலிஸார் சம்பவ இடத்தில் இருந்தனர். ஆனால் எதிர் நடவடிக்கை எடுக்கவில்லை – என்றார்.

அனுமதியற்ற உபகரணங்களைப் பயன் படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட புல்மோட்டை மீனவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ-5,101,ரி7,102)

## வடக்கு...

முரண்பாடு தோன்றியுள்ளது.

சபையின் பிரதி அவைத் தலைவராக இருந்தவர் அன்ரனி ஜெகநாதன். வடக்கில் உள்ள ஏனைய நான்கு மாவட்டங்களுக்கும் அமைச்சர் பதவிகள் கொடுக்கப் பட்டன என்ற அடிப்படையில் பிரதி அவைத் தலைவர் பதவி முல்லைத்தீவு மாவட்டத் திற்கு வழங்கப்பட்டிருந்தது.

அன்ரனி ஜெகநாதனின் மறைவுக்குப் பின்னர் அந்தப் பதவிக்கு முல்லைத்தீவில் இருந்தே ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கு ஒரு உறுப்பினர் உள்ளார். அதே போன்று புளொட் அமைப்பிற்கும் ஒரு உறுப்பினர் உள்ளார். இத னடிப்படையில் பிரதி அவைத் தலைவர் பதவி மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனுக்கு வழங்கப்படவேண்டும் என்று ஈ.பி.ஆர். எல்.எவ். கட்சியும், தனது கட்சியை சேர்ந்த உறுப்பினர் க.சிவ நேசனுக்கே அது வழங்கப்பட வேண்டும் என்று புளொட் கட்சியும் போட்டியிட்டு வருகின்றன.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கு வடக்கு மாகாண சபையில் எதுவித அமைச்சுப் பதவியும் வழங்கப் படாமையினால் (தற்போதைய விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் அந்தக் கட்சி சார்பில் போட் டியிட்டிருந்தாலும் அமைச்சுப்பதவியை அவர் தன்னிச்சையாகப் பெற்றுக்கொண்டமையினால், கட்சியிலிருந்து நீக் கப்பட்டிருந்தார்) தமது கட்சிக்கே பிரதி அவைத் தலைவர் பதவி வழங்க வேண்டும் என்று வலியுறுத்து கிறது. ஆனால், மாகாண சபையில் புளொட் அமைப்புக்கும் ஒரு அமைச்சுப் பதவியும் வழங்கப் படாததால் அந்தப் பதவி தமக்கே வழங்கப்படவேண்டும் என்று அந்தக் கட்சியும் விடாப்பிடியாக நிற்கிறது.

முன்னாள் பிரதி அவைத் தலைவரான ம.அன்ரனி ஜெகநாதன் இலங்கை தமிழ் அரசுக் கட்சி யைச் சேர்ந்தவர் என்பதால், அவரது இடத்திற்குத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தான் மீண்டும் நியமிக்கப் படவேண்டும் என்ற வாதமும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இந்த இழு பறியை அடுத்து பிரதி அவைத் தலைவரைத் தீர்மானிப் பதற்கான கலந்துரையாடல் ஓரிரு தினங்களுக்குள் நடத்தப்படவுள்ளது என்று அறியவந்தது. வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன், இந்த மாதம் முத லாம் திகதி மாரடைப்பினால் உயி ரிழந்தார். அவரது வெற்றிடம் இன்னமும் நிரப்பப்பட வில்லை.

கடந்த 5 ஆம் திகதி வடக்கு மாகாண அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், மறுநாள் (கடந்த 6ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைக் கூட்டத்தில் பிரதி அவைத் தலைவர் தெரிவு செய்யப்படவேண்டும் என்று தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரையில் பிரதி அவைத் தலைவர் நியமிக்கப்படவில்லை.

"பிரதி அவைத்தலைவரைத் தெரிவு செய்வது தொடர்பில் சில நடைமுறைகள் இருக்கின்றன. உயிரிழந்த உறுப்பினரின் வெற்றிடம் அறிவிக்கப்பட்டு புதியவர் நியமிக்கப்படவேண்டும். அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும். நாம் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடி புதிய பிரதி அவைத்தலைவரைத்தெரிவு செய்வோம்" என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

(உ-5)

## குருகுலராஜா...

பிரிட்டன் பயணமாகியுள்ளார். அவர் நாடு திரும்பி வரும் வரையில் பதில் முதலமைச்சராக கல்வி அமைச்சர் த.குரு குலராஜா கடமையாற்றுவார்.

முதலமைச்சரின் அமைச்சுக்கள் கல்வி அமைச்சர் மற்றும் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோ ருக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன.

இதையடுத்து அமைச்சர் ஐங்கரநேசனும் நேற்று அமைச்சுப் பொறுப்புக்களை அவைத் தலைவர் முன்பாக ஏற்றுக் கொண்டார்.

(உ-5)

### மரண அறிவித்தல்



**செல்வி அருந்ததி சண்முகம்**

நல்லூர் இல.80, செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அருந்ததி சண்முகம் நேற்று (17.10.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் (முன்னாள் மராமத்து இலாக்காவில் பணியாற்றிய ஓவசியர்)-யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சபாநாதன், கமலாம்பிகை, யோகநாதன் மற்றும் இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி மகாலக்ஷ்மி (கொழும்பு), திருமதி புளோரன்ஸ் யோகராணி (கொழும்பு) ஆகியோரது அன்பு மைத்துனியும் பூ.ஜெயராஜா (வேலை மேற்பார்வையாளர், யாழ் மாநகரசபை) அவர்களின் உடன்பிறவா அன்புச் சகோதரியும் திருமதி பத்மராணியின் (ஆசிரியர், யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்) அன்பு மைத்துனியும் ஜீவன் இமானுவேல் (பொறியியலாளர் அமெரிக்கா) திருமதி உமா ரூபினி யோகநாதன் (வைத்திய கலாநிதி அமெரிக்கா), திருமதி மைதிலி ஜெயலக்ஷ்மன் (கொழும்பு) ஆகியோரது அன்பு மாமியாரும் சண்முகப்பிரியன் (மாணவன், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), கம்சப்பிரியன் (மாணவன் யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), அருந்ததி (மாணவி, யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரது அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 11.00 மணிக்கு தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.80,
செட்டித்தெரு,
நல்லூர்.

தகவல்:
பூ.ஜெயராஜா
077 6103572

(J 5490) (16,17,19)

### மரண அறிவித்தல்கள்

திருமதி
**வசந்தமலர் பாலசுந்தரம்**

மாவிட்ட புரத்தைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தமலர் பாலசுந்தரம் நேற்று (17.10.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பாலசுந்தரத்தின் (தேவன்) பாசமிகு மனைவியும் கிரிதரன், கமலவரன், கார்த்திகா ஆகியோரின் அன்புத் தாயும் சௌமியா, கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் கிழக்கு,
வங்கியடி ஒழுங்கை. (J 5500) (16,17,19)

தகவல்:
குடும்பத்தினர்

### மரண அறிவித்தல்கள்

**தம்பாப்பிள்ளை யோகநாதன்**
**(யோகன்)**



வேலணை மேற்கு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5ஆம் வட்டாரம் வேலணை வடக்கை (வங்களாவடி) வசிப்பிட மாகவும் தற்போது மதவடி ஒழுங்கை சுதுமலை வடக்கு மானிபாயில் வசித்து வந்தவருமாகிய தம்பாப்பிள்ளை யோகநாதன் கடந்த (15.10.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை-பவளவல்லியம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு-பாலாம்பாள் தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற கோகிலாம்பாள் (கிளி)யின் பாசமிகு கணவரும் ஈஸ்வரன், ஆத்மசரன், தேவநாதன், வரதநாதன், செல்வநாதன், சாரதாம்பாள், ரமணி (வரதா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருந்தவலிங்கத்தின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2016) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடி ஒழுங்கை,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (J 5493) (16,17,19)

தகவல்:
ச.ஐங்கரன்
077 3726103

பிறப்பு
1936 . 04 . 07



இறப்பு
2016 . 10 . 16

**செல்லையா தங்கவேலு**

(ஓய்வு பெற்ற புகையிரத சாரதி - புகையிரத திணைக்களம்)

கடுகண்ணாவைப் பிறப்பிடமாகவும், காங்கேசன் துறையில் வசித்து வந்தவரும் தற்போது மொட்டைபுளியடி, உடுப்பிட்டியில் வசித்தவருமான செல்லையா தங்கவேலு 16.10.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - முத்தம்மா தம்பதியரின் அன்புமகனும் கதிரிப்பிள்ளை -இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலராணியின் அன்புக் கணவரும் இராஜரட்ணத்தின் அன்புச்சகோதரனும் சதீஸ் குமார், சசிலதா, சதீஸ்மோகன் காலஞ்சென்ற சசிகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிதர்சினியின் வளர்ப்புத் தந்தையும் கீதாஞ்சலி, மகேந்திரராஜா, நிர்மலவேணி ஆகியோரின் மாமனும் ஜிசானி, வாசனா, நிவேதன், அஜீவன், அனுப்பிரியன், சுகாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.10.2016 புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தொண்டமனாறு காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
மொட்டைப்புளியடி,
உடுப்பிட்டி. (N159) (17.19.20)

தகவல்
குடும்பத்தினர்.
077 8104209

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
**திருமதி மேகலா குணசிங்கம்**
**அவர்களின் அன்பு மாமியார்**
**திருமதி நாகம்மா சொக்கலிங்கம்**

அவர்கள் 12.10.2016 இறைபதமடைந்துவிட்டார். அவரது மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தின ருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

(ஜே.5484)
(13.18.17)

**பாடசாலை சமூகம்**
**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.**

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினர்
**செ.ஜெயநாதன்**
(உரிமையாளர் - நாதன் பல்பொருள் வாணிபம் -சந்தை உட்புறம் சாவகச்சேரி)

அவர்கள் 16.10.2016 அன்று காலமானார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 18.09.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு
**அமரர் அழகம்மா இராசையா**
அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று (18.10.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



குடும்பத்தினர்.
கீரிமலை வீதி, சித்தன்கேணி.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி
**ரஞ்சினி நரேந்திரன்**
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **அன்னமுத்து கதிர்காமர்**

அவர்கள் 15.10.2016 அன்று காலமானதையிட்டு அவரது குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**ஆசிரிய சகோதரத்துவம்**
**யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை**

(சி.138)
(13.18.17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

**ஞானேஸ்வரி செல்லையா**

பிறப்பு
08.06.1950

இறப்பு
18.09.2016



எமது குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (18.10.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.எமது குடும்பத் தலைவி சிவபதமடைந்த செய்தி கேட்டுத் தமது துயரை எம்முடன் பகிர்ந்து கொள்ள வெளிநாடுகளில் இருந்து ஓடோடி வந்த உறவுகளுக்கும், நோயுற்றவேளை நலம்பெற வேண்டி உழைத்திட்ட வைத்தியப் பெருமக்களுக்கும், ஊழியர்களுக்கும் இறுதிச்சடங்கு நடைபெற்ற வேளையில் உதவிய நன்மனத் தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் எமது துயரில் பங்கு கொண்ட அன்புள்ளங்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அழைப்புக் கிடைக்கப்பெறாதவர்களும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.
077 392 6455


### ஒன்றரை...

யான காலப் பகுதியில் ஒரு மணித்தியால மின் வெட்டும், பிற்பகல் ஆறு மணியிலிருந்து இரவு 10 மணி வரையான காலப்பகுதியில் அரை மணித்தியால மின் வெட்டும் நடைமுறைப்படுத்தப்படும்.

இதன்படி 'ஏ' வலயத்திலுள்ள பிரதேசங்களுக்கு முற்பகல் 8 மணி தொடக்கம் 9 மணி வரையான காலப் பகுதியி லும் மாலை 6 மணியிலிருந்து 6.30 மணி வரையிலும்,

'பி' வலயத்திலுள்ள பிரதேசங்களில் காலை 10 மணி தொடக்கம் 11 மணி வரையான காலப் பகுதியிலும் இரவு 7 மணி யிலிருந்து 7.30 மணி வரையிலும்,

'சி' வலயத்திலுள்ள பிரதேசங்களில் மாலை 1 மணி தொடக்கம் பி.ப. 2 மணி வரையான காலப் பகுதியிலும் இரவு 8 மணியி லிருந்து 8.30 மணி வரையிலும்,

'டி' வலயத்திலுள்ள பிரதேசங் களில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 4.30 மணி வரையான காலப் பகுதியிலும் இரவு 9 மணியிலிருந்து 9.30 மணி வரையிலும் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது.

மேலும் குறித்த காலப் பகுதிக்குள் மருத்துவமனைகள் அமைந்துள்ள பிரதேசங்கள் மற்றும் முக்கிய தொழிற்சாலைகளில் மின்வெட்டு இருக்காது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொத்மலை தொடக்கம் அநுராதபுரம் வரையில் மின் கடத்தும் அதிசக்தி வாய்ந்த மின்வடத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக அதிகூடிய கொள்ளளவுக்கு ஈடுகொடுக்க முடியாமல் நுரைச் சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் கருவிகள் செயலிழந்து போயுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தானியங்கி நிறுத்தல் கருவிகளின் திடீர் பழுது காரணமாக நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் நீராவி கடத்தப்படும் குழாய் உள்ளிட்ட முக்கிய உற்பத்தித் தொகுதி பழுதடைந்துள்ளது. இதனை சீரமைக்க சிலநாள்கள் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறுகளை சரிசெய்யவென மூன்று பேர் அடங்கிய தொழில்நுட்பக் குழுவினர் விரைந்துள்ளனர் எனவும் மின் சக்தி அமைச்சு அறிவித்தது. இந்தக் காலப் பகுதியில் மக்கள் மின்சாரத்தை அவதானமாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துமாறு மின்சார சபை வேண்டு கோள் விடுத்துள்ளது. (உ-5)


## மரண அறிவித்தல்

**சங்கரப்பிள்ளை சச்சிதானந்தமூர்த்தி**



வீமன்காமம் வடக்கு, தெல்லிப் பழையைப் பிறப்பிடமாகவும், G.P.S Road, வீரபத்திரர் கோயிலடி, கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சச்சிதானந்தமூர்த்தி 15.10.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சற்குணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - லீலாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும்; வசந்தகுமாரியின் அன்புக் கணவரும், ஆதவன் (பொறியியலாளர்), வெண்ணிலா (மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிரிஷா, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

G.P.S.Road,
வீரபத்திரர் கோயிலடி,கல்வியங்காடு.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 055 2348**
(J/5479)
(11,17,18)


### கொழும்பு....

அங்கிருந்து செல்லமாட்டேன் என்று தெரிவித்த அவர் கல்வி அமைச்சின் மேசையில் ஏறி அமர்ந்து கொண்டார். தான் முன்னெடுத்த இந்தப் போராட்டம் வெற்றியளித்துள்ளது என்று அவர் கூறினார்.

கிழக்கு மாகாணத்துக்கு வெளியே நியமனம் பெற்ற கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பான இறுதிக் காலக்கெடு இன்றுடன் முடிவடையவிருந்த நிலையில், முதலமைச்சர் நேற்று கல்வி அமைச்சுக்கு சென்றார். கற்கை நெறிகளை நிறைவு செய்து கல்விக் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு கிழக்கு மாகாணத்திலேயே நியமனம்வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே கிழக்கு மாகாண முதலமைச்சர் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தார். உரிய தீர்வு கிடைக்கும் வரை தான் கல்வி அமைச்சை விட்டு அகலப் போவதில்லை எனவும் அவர் இதன் போது கூளுரைத்தார்.

இதையடுத்து உடனடியாக முதலமைச்சரை சந்தித்த கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி, முதலமைச்சரின் கோரிக்கைகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சின் முதன்மை ஆணையாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

இதனையடுத்து விடயங்களை ஆராய்ந்த கல்வி அமைச்சின் முதன்மைஆணையாளர் எச்.எம். பண்டார மற்றும் கல்வி அமைச்சின் ஆசிரியர் பகிர்ந்தளிப்புப் பிரிவின் மூத்த உதவிச் செயலாளர் குசலானி ஆகியோர் முதலமைச்சரின் கோரிக்கைக்கு இணங்க வெளிமாகாணங்களில் நியமனம்பெற்ற கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்வியியற் கல்லூரிகளில் பயின்ற அத்தனை ஆசிரியர்களையும் கிழக்கு மாகாணத்திலேயே நியமிப்பதாக உறுதியளித்தனர் அத்துடன் கிழக்கின் ஆசிரியர்கள் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கான காலக்கெடுவை மேலும் 14 நாள்களுக்கு நீடிப்பதாகவும் கல்வி அமைச்சு உறுதியளித்தது. இதன்போது கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தை சந்தித்த கிழக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சருக்கு தமது நன்றிகளையும் தெரிவித்தார். (வ)


## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
26 . 10 . 1967



ஆண்டவன் அடியில்
16 . 10 . 2016

**ஸ்ரனிஸ்லாஸ் கொட்வின்**

றக்காவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரனிஸ்லாஸ் கொட்வின் 16.10.2016 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லாஸ் (ஸ்ரனிஸ் மாஸ்ரர் - ஒப்பனையாளர்) மற்றும் மாகிறேற் தம்பதிகளின் அன்பு மகனும் றவீந்திரன், சுவேந்திரன், றொசிற்றா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் செறீன், அஜித்தா ஆகியோரின் மைத்துனரும் நிதர்சன், கிளாட்வின், ஜெடன் ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஜெனலியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து இன்று (18.10. 2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இரங்கல் திருப்பலிக்காக புனித திரேசாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.1/1, றக்கா லேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(68232)(12.18)

தகவல்:
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# யாழ்ப்பாணம் மாநகரசபை

# சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2017

இதன் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2017ஆம் திகதிமுதல் 31.12.2017ஆம் திகதிவரையான காலப் பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்படிவக்கட்டணம் | - | ரூபா 500.00 (வரிநீங்கலாக) |
| கேள்விப்படிவம் விநியோகித்தல் | - | 18.10..2016–03.11.2016வரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | - | 04.11.2016மு.ப9.30மணிவரை |
| கேள்விதிறத்தல் | - | 04.11.2016மு.ப. 10.00மணிக்கு |

விண்ணப்பபடிவத்தினை பூர்த்திசெய்து கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ளகேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை,யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 04.11.2016ஆம் திகதி மு.ப9.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாககிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

**குறிப்பு :**

1. கூட்டுறவுச் சங்ககங்கள் தவிர்ந்ததனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும். அல்லதுசித்திபெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். 1/3 பகுதியை செலுத்தியவர்கள் மிகுதித் தொகையின் 1/8 பங்கை ஜனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையான 8 மாத காலப்பகுதிக்குள் 2017 ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் அடுத்தமாதம் 10ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும். தவறும்பட்சத்தில் மாதகுத்தகைப் பணத்தின் 10% தண்டமும் மேலதிகமாகஅறவிடப்படும்.
2. சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்குவரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 4சதவீத கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) நாள் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூபா 50.00 பெறலாம். மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு (5'X5') நாள் ஒன்றுக்குரூபா 50.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடப்படலாகாது.
3. சபையின் சைக்கிள் பாதுகாப்புநிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கரவண்டிகளுக்கு ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 10.00உம் அறவிடலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடப்படலாகாது.
4. சபையின் கடைகளில் இறைச்சி/கருவாடு/கோழி ஆகியன விற்பனைசெய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாதவாடகையை செலுத்துதல் வேண்டும்.
5. கேள்வியில் சித்திபெறுபவர் குத்தகைக்கு எடுக்கத் தவறின் இரண்டாவது கேள்விதாரருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.
6. சிற்றுண்டிச்சாலைகளை குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.
   - 6.1 சிற்றுண்டிச்சாலைகாலை 07.00 மணிதொடக்கம் மாலை 07.00மணிவரை வியாபாரம் செய்யஅனுமதிக்கப்படும்.
   - 6.2 சிற்றுண்டிச் சாலைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்துதல் வேண்டும்.
   - 6.3 மின்சார கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்பு கட்டணமாக ரூ.15000.00 ஐயும் உடனடியாகவேசெலுத்துதல் வேண்டும்.
7. கேள்விப்படிவக்கட்டணம். கேள்வித் தொகை. மாதவாடகை என்பவற்றுக்கு அக்காலப் பகுதிக்குரிய VAT.NBT சேர்த்துச் செலுத்துதல் வேண்டும்.
8. கேள்விப்பத்திரம் பெறவருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் புகைப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் தங்கள் பகுதிகிராம சேவையாளர் மூலம் தங்கள் வதிவிடத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.
9. சபையின் கடை இல்லாத இடமாகிய மானிப்பாய் வீதியில் உள்ளகடைக்கு(முஸ்லீம் கல்லூரி வீதி ஆட்டிறைச்சிக்கடை) கேள்விவிண்ணப்பம் சமர்ப்பிப்பவர்கள் குறிப்பிட்ட இடத்தின் காணி உரிமையாளரின் சம்மதக் கடிதத்தையும் இணைத்தல் வேண்டும்
10. துரையப்பாவிளையாட்டுஅரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடத்தப்படும் சிற்றுண்டிச் சாலைக்கான கேள்விகோருபவர் யாழ். நகரப்பகுதியில் அல்லது ஆகக்கூடியதாக நகரத்தின் மையத்திலிருந்து 10km சுற்றுவட்டத்தில் நிரந்தர உணவகம் வைத்திருத்தல் வேண்டும்.
11. யாழ்ப்பாணபொது நூலக சிற்றுண்டிச்சாலை. துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றிற்கான குத்தகை காலம் 01.01.2017 - 30.06.2017 ஆகும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்ப் பாணம் மாந கரசபைக்கே உரியது.
13. கேள்விப் பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகரசபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

**இறைச்சிக்கடைகுத்தகை - 2017**

| தொ.இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 183,000.00 |
| 2 | பண்ணைகருவாட்டுக் கடை | இல.02 | 5,000.00 | 58,500.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 208,800.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 237,120.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 155,500.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 75,200.00 |
| 7 | பண்ணைகோழிக்கடை | இல.07 | 5,000.00 | 876,340.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 82,100.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 877,050.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 888,340.00 |
| 11 | சொங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 144,000.00 |
| 12 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 802,800.00 |
| 13 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 487,800.00 |
| 14 | பூங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 92,430.00 |
| 15 | பூங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 315,000.00 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 793,050.00 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 305,100.00 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 251,850.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 360,000.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 320,000.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 225,100.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 225,000.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 200,150.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 222,300.00 |
| 25 | நாவாந்துறை கோழிக் கடை | இல.10 | 5,000.00 | 347,000.00 |
| 26 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை | இல.11 | 5,000.00 | 59,760.00 |
| 27 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 12,150.00 |
| 28 | ஆரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 566,490.00 |
| 29 | ஆரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 72,100.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 7,000.00 | 534,260.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.02 | 7,000.00 | 561,210.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.03 | 7,000.00 | 405,750.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.04 | 7,000.00 | 430,760.00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.05 | 7,000.00 | 475,500.00 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.06 | 7,000.00 | 530,610.00 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 408,600.00 |
| 37 | முஸ்லீம் கல்லூரிவீதி ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 265,560.00 |

**பொதுச்சந்தைக் குத்தகை 2017**

| தொ.இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக்க கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரிநீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பெரியகடைமரக்கறிச் சந்தை | 10,000.00 | 2,330,000.00 |
| 2 | பண்ணைமீன் சந்தை | 10,000.00 | 3,504,600.00 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 2,212,550.00 |
| 4 | சொங்குந்தாசந்தை | 10,000.00 | 1,803,000.00 |
| 5 | நாவாந்துறைமீன்சந்தை | 10,000.00 | 577,000.00 |
| 6 | அரியாலைமீன்சந்தை | 1,000.00 | 67,330.00 |
| 7 | பாசையூர் மீன்சந்தை | 2,000.00 | 323,000.00 |
| 8 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 65,700.00 |
| 9 | பண்ணைமீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 188,550.00 |
| 10 | பூங்கன் குளம் உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களின் சந்தை | 2,000.00 | 8,550.00 |
| 11 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாக உள்ளவாகன தரிப்பிட பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 49,975.00 |
| 12 | யாழ் கச்சேரிசிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 332,340.00 |
| 13 | யாழ். பொது நூலகசிற்றுண்டிச்சாலை (01.01.2017 - 30.06.2017) | 5,000.00 | 120,000.00 |
| 14 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (01.01.2017 - 30.06.2017) | 5,000.00 | 135,000.00 |

மேலதிக விவரங்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
18.10.2016.

பொ.வாகீசன்
ஆணையாளர்.
யாழ்ப்பாணம் மாநகர சபை.

(C/25926)(10.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீண்ட நேரத் துடுப்பாட்டம்; சாதனை படைத்தார் லாதம்


ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி நீண்டநேரம் துடுப்பெடுத்தாடிய வீரர் என்ற சாதனையைப் படைத்தார் லாதம்.

இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 190 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. ஆனால் ஆரம்ப வீரராகக் களமிறங்கிய லாதம் ஒரு முனையில் நிலைத்துநின்று இறுதிவரை ஆட்டமிழக்காமல் 79 ஓட்டங்களைச் சேர்த்தார். இவ்வாறு ஆரம்ப வீரராகக் களமிறங்கி இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்த 10 ஆவது துடுப்பாட்ட வீரராக லாதம் உள்ளார். நியூசிலாந்து வீரர்களைப் பொறுத்தவரை அவர் மட்டுமே இவ்வாறான ஓர் அரிய சாதனையைப் படைத்தார். (ம)

# வோஸ்னியாக்கி சம்பியனானார்

ஹொங்கொங் ரெனிஸ் தொடரைக் கைப்பற்றினார் கரோலின் வோஸ்னியாக்கி.

ஹொங்கொங் ரெனிஸ் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. டென்மார்க் வீராங்கனை கரோலினா வோஸ்னியாக்கியும், பிரான்சின் கிரிஸ்ரினாவும் மோதினர். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.



முதல் செற்றை 6:1 என்ற அடிப்படையில் வோஸ்னியாக்கி கைப்பற்றினார். இரண்டாவது செற்றை 7:6 என்ற அடிப்படையில் கிறிஸ்ரினா கைப்பற்றி பதிரடி கொடுத்தார். இதனால் மூன்றாவது செற்றில் வெற்றிபெறுபவரே ஹொங்கொங் சம்பியன் என்ற நிலை உருவானது. இறுதி செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதையடுத்து சம்பியனானார் வோஸ்னியாக்கி. (ம)


# பெரும் போராட்டத்துடன் நகர்ந்தது மே.தீவுகள் - பாகிஸ்தான் டெஸ்ட்

மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் ஐந்தாம் நாளான நேற்று மூன்றாவதுசெசனில் இருஅணிகளுக்கும்சமவாய்ப்புக்களுடன் திரில் நிலையில் இருந்தது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் பகலிரவு ஆட்டமாக கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 579-3 என்ற நிலையில் இருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக அசார் அலி 302 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் சார்பாக பிஸ்கூ 2 இலக்குகளை வீழ்த்தினார் பதிலுக்குக் களமிறங்கிய தீவுகள் மூன்றாம் நாள் முடிவில் 315-6 என்ற நிலையில் இருந்தது. டவ்ரிச் 27 ஓட்டங்களுடனும், கோல்டர் 10 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காகக் களமிறங்கினர். ஜாசிரின் சுழல் திடீர் எழுச்சி காண டவ்ரிச் 32 ஓட்டங்களுடனும், கோல்டர் 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். 357 ஓட்டங்களுடன் தீவுகளின் முதல் இன்னிங்ஸ் முடிவு கண்டது. பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் ஜாசிர் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

222 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தானை பிஸ்கூவின் சுழல் நன்றாகவே சோதித்தது. சமி அஸ்லாம், பாபர் அசாம் இருவரையும் தவிர வேறு எவரும் பதின்ம ஓட்டங்களைத் தாண்டவில்லை. சகிப், அசாம். மிஸ்பா, அஹமட், நவாஸ் என அத்தனை துடுப்பாட்ட நட்சத்திரங்களையும் வீழ்த்திய பிஸ்கூ, சிறிது நிலைத்துநின்ற அஸ்லாமையும் 44 ஓட்டங்களுடன் வீழ்த்தினார். 123 ஓட்டங்களில் பாகிஸ்தானின் இரண்டாவது இன்னிங்ஸ் முடிவு கண்டது. பந்துவீச்சில் தீவுகளின் சார்பாக பிஸ்கூ 8 இலக்குகளைக் கைப்பற்றினார்.

346 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுககுத் துடுப்பெடுத்தாடிய தீவுகள் நான்காம் நாள் முடிவில் 95-2 என்ற நிலையில் இருந்தது. ஐந்தாம் நாளான நேற்றும் பிராவோ சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். சாமுவேல்ஸ் பிளக்வூட் இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தாலும் பிராவோ, சேஸ் இணை, இணைப்பாட்டமாக 77 ஓட்டங்களைப் பகிர்ந்து பாகிஸ்தானை அச்சுறுத்தியது. 35 ஓட்டங்களுடன் சேஸ் ஆட்டமிழந்தார். பிராவோ சதம் கடந்தார். பத்திரிகை அச்சுக்கு செல்லும் போது பாகிஸ்தானின் வெற்றிக்கு 4 இலக்குகளும் தீவுகளின் வெற்றிக்கு 100 ஓட்டங்களும் தேவை என்ற நிலை இருந்தது.- (ம)





# பாண்டியாவுக்கு பாராட்டு மழை

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற பிரதான காரணமாக இருந்த பாண்டியாவுக்கு இந்திய அணியின் தலைவர் டோனி, உபதலைவர் கோக்லி, இந்தத் தொடருக்கான வர்ணனையாளரும் இந்திய அணியின் முன்னாள் தலைவருமான சுனில் கவாஸ்கர் ஆகியோர் தமது பாராட்டைத் தெரிவித்தனர்.

எங்களது வேகப்பந்து வீச்சாளர்கள் அற்புதமாகப் பந்து வீசினர். தர்மசாலா ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு ஒத்துழைக்குமா என்பது எங்களுக்கு முதலில் தெரியவில்லை. பாண்டியா, சரியான அளவில் பந்து வீசி நெருக்கடி கொடுத்தார். அவரை மூன்று வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவராக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே எங்களது திட்டம். அதற்கு அவர் தகுதியானவர்தான் என டோனி தெரிவித்தார்.

ரி-20 ஆட்டங்களில்விளையாடிய அனுபவம் பாண்டியாவுக்கு இருக்கிறது. ஆனால் ரி-20 வகை ஆட்டங்களிலிருந்து ஒருநாள் வகை ஆட்டங்கள் முழுவதும் வேறுபட்டவை. ஒருநாள் ஆட்டங்களில் விளையாடிய பழக்கம் பாண்டியாவுக்கு இல்லாத போதிலும் அவரது செயற்பாடு அவ்வாறு அமையவில்லை. சிறப்பாகச்செயற்பட்டார் என கோக்லி தெரிவித்தார். (ம)

# சாவகச்சேரி இந்துவின் மாணவர்கள் கௌரவிப்பு இன்று

பாடசாலைகளுக் கிடையிலான தேசியமட்ட தடகளத் தொடரில் தங்கப் பதக்கம் பெற்ற அ.புவிதரன் உட்பட பதக்கங்களும் வர்ணச் சான்றிதழ்களும் பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரிச் சமூகத்தினரால் இன்று செவ்வாய்கிழமை நடாத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இன்று காலை 8 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியிலிருந்து பதக்கம் பெற்ற மாணவர்கள் ஏ 9 வீதி ஊடாக இந்துக் கல்லூரி வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு, கல்விச் சமூகத்தினரால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நேற்றுமுன்தினம் 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் கல்லூரியின் மாணவன் அ.புவிதரன் 3.80 மீற்றர் உயரத்திற்குப் பாய்ந்து தங்கப் பதக்கம் பெற்றார். (வ -9)

# டைசனின் மகள் சுட்டுக் கொலை

அமெரிக்காவின் பிரபல தடகள வீரர் டைசன் கேவின் மகள் மர்ம நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

குறுந்தூர ஓட்டங்களில் அமெரிக்காவைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஆகச் சிறந்த வீரர்களில் டைசன் கேயும் ஒருவர். இவரது 15 வயது மகள் அமெரிக்காவின் கெண்டகியில்நேற்று அடையாளம்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உணவு விடுதி ஒன்றில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் டைசனின் மகள் டிரினிடி, கழுத்தில் குண்டடிப்பட்டு சாவடைந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

டிரினிடி உயிரிழந்த சம்பவத்தைக் கேள்வியுற்ற விளையாட்டு பிரபலங்கள் மற்றும் பொதுமக்கள் தங்கள் ஆதரவையும் அதிர்சியையும் வெளிப்படுத்தி வருகின்றனர். (ம)

# கபடி உலகக்கிண்ணம் இன்றைய மோதல்கள்

மூன்றாவது கபடி உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவின் அகமதாபாத்தில் நடைபெற்று வருகிறது. இன்று இரு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அமெரிக்காவை எதிர்த்து கென்யாவும், இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இந்தியாவை எதிர்த்து இங்கிலாந்தும் மோதவுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்றது செல்சி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் செல்சி அணி அபார வெற்றிபெற்றது.
செல்சியை எதிர்த்து நடப்புச் சம்பியனான லெய்செஸ்டர் சிற்றி மோதியது. ஆட்டத்தின் 17 ஆவது நிமிடத்தில் ஹஸார்ட் ஆட்டத்தின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 33 ஆவது நிமிடத்தில் தியாகோ பதிவுசெய்த கோலால் முதல் பாதியின் முடிவில் 2:0 என்று முன்னிலை பெற்றது செல்சி. 80 ஆவது நிமிடத்தில் மோசஸ் பதிவுசெய்த கோலின் மூலம் முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது செல்சி. (ம)






## சீனாவிலும் சம்பியனானார் பிரிட்டனின் ஆண்டி முர்ரே

ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரைக் கைப்பற்றினார் பிரிட்டன் வீரர் அன்டி முர்ரே. சீனாவின் முக்கிய தொடர்களில் ஒன்றான ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் கடந்த ஒரு வாரகாலமாக நடைபெற்று வந்தது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பிரிட்டன் வீரர் ஆன்டி முர்ரேயை எதிர்த்து ஸ்பெய்ன் வீரர் பாடிஸ்டா மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றில் மட்டுமே பாடிஸ்டாவால் முர்ரேக்கு சவால் வழங்க முடிந்தது. இதனால் அந்த செற்றை 7:6 என்ற அடிப்படையில் போராடிக் கைப்பற்றினார் முர்ரே. இரண்டாவது செற்றில் முர்ரேயின் ஆதிக்கம் மிகையாக அதிகரித்தது. அந்த செற் 6:1 என்ற அடிப்படையில் முர்ரேயின் வசமாக முடிவில் அவர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனார். நடப்பு வருடத்தில் முர்ரே கைப்பற்றிய 6 ஆவது பட்டம் இதுவாகும். ஒலிம்பிக் தொடரிலும் முர்ரேயே வாகை சூடியிருந்தார். தற்போதைய முதலிட வீரரான ஜோகோவிக்கை விட முர்ரே 915 புள்ளிகளே குறைவாகப் பெற்றுள்ளார். இதனால் அவர் இந்த வருடத்துக்குள் முதலிடத்தைக் கைப்பற்ற அதிக வாய்ப்புள்ளதாகவே கருதப்படுகிறது. (ம)


## அஸ்வினைப் பின்தள்ளி சாதனை படைத்தார் ஷா

மிகக்குறைந்த டெஸ்ட் ஆட்டங்களில் 100 இலக்குகளை வீழ்த்திய ஆசியப் பந்துவீச்சாளர் என்ற சாதனையைப் படைத்தார் பாகிஸ்தான் சுழல் வீரர் ஜாசிர் ஷா.
அஸ்வின் தனது 18 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் 100ஆவது இலக்கை எட்டினார். இதன் மூலம் மிக விரைவாக 100 இலக்குகளை எட்டிய ஆசியப் பந்துவீச்சாளர் என்ற சாதனையை அவர் தன்வசம் வைத்திருந்தார். இந்தச் சாதனையைத் தகர்க்க ஜாசிருக்கு வாய்ப்பு இருந்தது. மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான் இடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டம் ஜாசிரின் 17 ஆவது ஆட்டமாகும். ஆட்டம் ஆரம்பமாகும் போது 95 இலக்குகளுடன் இருந்த ஜாசிர் இந்த ஆட்டத்தில் இன்னும் 5 இலக்குகளை வீழ்த்தினால் மிக விரைவாக 100 இலக்குகளை எட்டிய ஆசியப் பந்துவீச்சாளர் என்ற சாதனையை அவர் தனது பெயரில் எழுதலாம் என்ற வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. முதல் இன்னிங்ஸில் ஐந்து இலக்குகளைக் கைப்பற்றிய ஜாசிர்ஷா, அஸ்வினைப் பின் தள்ளி மிக விரைவாக 100 இலக்குகளை வீசிய ஆசியப் பந்துவீச்சாளர் என்ற சாதனையைப் படைத்தார். (ம)



## 550 கோடியைக் குவித்தது எம்.எஸ்.டோனி திரைப்படம்

இந்திய அணியின் தலைவரான டோனியின் வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ள எம்.எஸ். டோனி திரைப்படம் உலக அளவில் கிட்டத்தட்ட 550 கோடிளை வசூல் செய்து தொடர்ந்தும் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.
இந்திய சந்தையில் 420 கோடிகளும், பன்னாட்டு சந்தையில் 130 கோடிகளும் என மொத்தமாக 550 கோடிகளை குறித்த படம் வசூலாகக் குவித்துள்ளது. நீரஜ் பாண்டே இயக்கத்தில் உருவாகியுள்ள இந்த படத்தினை பொக்ஸ் ஸ்டார் நிறுவனம் தயாரித்துள்ளது. டோனியின் நீண்டகால நண்பரான அருண் பாண்டேயும் இணைந்து இந்தப் படத்தைத் தயாரித்துள்ளார்.
டோனியை கிரிக்கெட்டின் ஒவ்வொரு பெரிய தொடர்களிலும் வெற்றி பெற்றுள்ள ஒரு வீரராகவும், தலைவராகவுமே மக்களுக்குத் தெரியும். ஆனால் அவரது போராட்டங்கள் மற்றும் அவற்றினை எப்படி அவர் எதிர்கொண்டார் என்பது பற்றியும் ஒருவருக்கும் தெரியாது. ஒரு நடுத்தர குடும்பத்தில் இருந்து இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக வந்தது வரை அவர் பலரையும் கவர்ந்துள்ளார். ஆனால் உண்மையான டோனியை ஒருவருக்கும் தெரியாது. எம்.எஸ்.டோனி தி அன் ரோல்ட் ஸ்ரோறி, டோனியின் முயற்சிகளை சிறப்பாகவே பிரதிபலிக்கிறது என அருண்பாண்டே தெரிவித்தார். (ம)




## அதிக வெற்றிகளின் வரிசையில் இரண்டாவது இடத்தில் டோனி

ஒருநாள் ஆட்டங்களில் அதிக வெற்றிகளைக் குவித்த அணித்தலைவர்கள் வரிசையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார் இந்திய அணித்தலைவரான டோனி.
இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர் நேற்றுமுன்தினம் தொடங்கியது. தரம்சாலாவில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இந்தியா 6 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றி, டோனியின் 108ஆவது வெற்றியா கும். இதன்மூலம் அதிக வெற்றிகளைக் குவித்த அணித் தலைவர்கள் வரிசையில் அவர் இரண்டாவது இடத்துக்கு முன் னேறினார்.
ஆஸ்திரேலியாவின் முன்னாள் தலைவரான பொண்டிங் 165 வெற்றிகளுடன் முதலிடத்தில் உள்ளார். ஆலன் போர்டர் 107 வெற்றிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார். தென்னாபிரிக்கா அணியின் முன்னாள் தலைவர் குரோஞ் 99 வெற்றிகளுடன் நான்காவது இடத்திலும், நியூசிலாந்து அணியின் பிளமிங் 98 வெற்றிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்சிலைமடுவுக்கு ஆறாவது இடம்

யாழ்ப்பாணம், ஒக்.18
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடரில் பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் முல்லைத்தீவு கற்சிலைமடு அ.த.க. பாடசாலைக்கு ஆறாவது இடம் கிடைத்தது.
கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்றது. 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் முல்லைத்தீவு கற்சிலைமடு அ.த.க. பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்த எஸ். விதுஸா ஆறாமிடத்தை பெற்றார். (ம)

## கலைமதி – வளர்மதி இறுதிக்குள் நுழைந்தன

யாழ்ப்பாணம், ஒக்.18
புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் கலைமதி, புத்தூர் வளர்மதி அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன. சோமஸ்கந்தனின் மைதானத்திலேயே தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. ஐந்து செற்களில் முதலிரு செற்களையும் முறையே 25:21, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ். ஆனால் அடுத்த மூன்று செற்களையும் முறையே 25:22, 25:18, 15:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கலைமதி அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவதாக நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் அணி மோதியது. முதல் இரு செற்களையும் புத்தூர் வளர்மதி அணி 25:23, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது. மூன்றாவது செற்றை 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சிவகுமரன் கைப்பற்றிய போதிலும் நான்காவது செற்றை 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வளர்மதி கைப்பற்றியதையடுத்து முடிவில் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது வளர்மதி அணி. (ம-108-422)

# சாதனையுடன் தங்கப்பதக்கம் அருணோதயா கைப்பற்றியது


நெப்தலிஜொய்சன்

யாழ்ப்பாணம், ஒக்.18
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த நெப்தலி ஜொய்சன் சாதனையுடன் தங்கம் வென்றார்.
கண்டிபோகம்பரை விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற இறுதி நாள் போட்டியில் 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த நெப்தலி ஜொய்சன் 4.61 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்து தங்கப் பதக்கத்தையும் வர்ணச் சான்றிதழையும் பெற்றார். கடந்த ஆண்டு மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். டிலக்சன் 4.42 உயரத்துக்குப் பாய்ந்து படைத்திருந்த சாதனையையே நெப்தலி ஜொய்சன் முறியடித்தார்.
மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.டிலக்சன் 4.30 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்துடன் வர்ணச் சான்றிதழையும், அளவெட்டி அருணோதயக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த மோ.தனிஸ் 4 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து நான்காமிடத்தையும் வர்ணச்சான்றிதழையும் பெற்றனர். (ம-422)


டிலக்சன்

## பாரதிக்கு ஏழாவது இடம்

யாழ்ப்பாணம், ஒக்.18
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு அஞ்சலோட்டத்தில் முல்லைத்தீவு பாரதி வித்தியாலயத்துக்கு ஏழாவது இடம் கிடைத்தது.
கண்டி போகம்பரை விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் முல்லைத்தீவு பாரதி வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம்செய்தவீராங்கனைகள் ஏழாமிடத்தைப் பெற்றனர். (ம-422)




## வெற்றிப் பாதையில் செல்கிறது றோயல்

யாழ்ப்பாணம், ஒக்.18
குறிஞ்சிக்குமரன் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் அணி தனது மூன்றாவது வெற்றியையும் நேற்றுமுன்தினம் பதிவு செய்தது.
தொடரின் ஆட்டங்கள் குறிஞ்சிக்குமரன் வி. கழக மைதானத்திலேயே நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், மன்னார் ஜோசவ்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் 17ஆவது மற்றும் 18ஆவது நிமிடங்களில் றோயல் அணியின் கோபன் கோல்களைப் பதிவு செய்தார். 20ஆவது நிமிடத்தில் ஐக்கியம் அணியின் ஜோன்சன் கோலொன்றைப் பதிவுசெய்து 2:1 என்றாக்கினார். 22 ஆவது மற்றும் 28ஆவது நிமிடங்களில் நிதர்சன் மூலம் றோயலின் சார்பாக மேலும் இரு கோல்கள் பதிவாகின. முதல் பாதியின் முடிவில் றோயல் அணி 4:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.
இரண்டாம் பாதியில் ஜோன்சன் இரு கோல்களைப் பதிவுசெய்தார். கோபன், நிதர்சன் இருவரும் றோயலின் கோல் கணக்குகளை அதிகரித்தனர். முடிவில் 6:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது றோயல். (ம-108)



## இன்றைய மோதல்

கரணவாய் ஒக்.18
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் நடத்தி வரும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று செவ்வாய்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சென். ஜோசவ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

இலவச UK முகாமைத்துவ டிப்ளோமா
* வியாபார முகாமைத்துவம் DBM
* மனிதவள முகாமைத்துவம் DHRM
* சந்தைப்படுத்தல் DMKT
சான்றிதழ் கட்டணம் மட்டுமே
பயிற்சியுடன் வேலை வாய்ப்பு
வெளிமாவட்டத்தவர்க்கு தங்குமிடம்
தொடர்பு:- Dr.ந. பிரபு MBBS (SL)
சுவடி இலாப நோக்கற்ற நிறுவகம்
076 838 4466

வெளிவந்துவிட்டது
தீபாவளி வாழ்த்து மடல்கள்
சகல அளவுகளிலும் விற்பனையாகிறது என்பதனை வியாபாரிகளுக்கு அறியத்தருகிறோம்.
அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்
021 222 9881

பிரத்தியேக செயலாளருக்கான பதவி வெற்றிடம்
...ியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனத்திற்கு பிரத்தியேக செயலாளர் பதவி ஒன்று வெற்றிடம் ...ட்டுள்ளது. இப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் வயதில் முதிர்ந்தவரும் சிறந்த ஆரோக்கி...துடன் பொது நிர்வாகப் பணிகளில் மிகுந்த அனுபவசாலியுமாக இருத்தல் அவசியமாகும்.
...துடன் தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் மிகப்புலமை பெற்றவராக இருப்பதுடன் ...ள மொழியில் எழுத. வாசிக்க தெரிந்திருத்தல் அவசியம்.
...லும் பொது நிர்வாகச் சுற்றிக்கைகள் தாபன விதிக்கோவைகள் அரசியலமைப்பு மற்றும் சட்ட நுணுக்கங்கள் ஆகியவற்றை நுண்மதியுடன் அணுகுபவராக இருத்தல் வேண்டும்.
முழுமையான கணினி அறிவுடையவராகவும் நாட்டின் எப்பகுதிக்கும் பிரயாணம் செய்யக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
சிறப்பான மனிதநேய ஆலோசனை வழங்குபராக இருத்தல் அவசியம்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
விண்ணப்பங்களை 24.10.2016 இற்கு முன்னர் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மின்னஞ்சல் முகவரி - npapp2015@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.10.2016 இல்